கொரிய தீபகற்பத்தில் பதற்றம்
மீண்டும் ஏவுகணையைப் பரிசோதித்தது வடகொரியா
பக். 14-15

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

35°c - 29°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 151 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 12, திங்கட்கிழமை 25.04.2016


# வடக்கு மாகாண சபையை உடனே கலைக்க வேண்டும்

## சமஷ்டித் தீர்வை ஒருபோதுமே வழங்க முடியாது கொதிக்கிறார்கள் தென்னிலங்கை அரசியல்வாதிகள்

"கடந்த காலங்களில் இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அவர்களுக்கு அதிகாரமில்லாத ஒன்றைச் செய்கின்றார்கள். வடக்கு அரசு இவ்வாறு செய்வதைக் கொழும்பு அரசு புரியாமல் இருக்கின்றதா ? அல்லது புரிந்தும் முதுகெலும்பில்லாமல் நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றதா ?"

கொழும்பு, ஏப்ரல் 25
வடக்கு மாகாண அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்வுத் திட்ட வரைவுக்கு, தென்னிலங்கையில் பல தரப்பினரும் எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர். வடக்கு மாகாண சபையை உடனடியாகக் கலைக்க வேண்டும் என்றும், சமஷ்டி அடிப்படையில் ஒருபோதும் தீர்வு வழங்க முடியாது என்றும் அவர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.
வடக்கு மாகாண அரசினால் தீர்வுத் திட்ட வரைவு கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற அமர்வில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதில் தமிழ் – சிங்கள மாநிலங்கள் இடையிலான கூட்டாட்சி வலியுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே தீர்வுத்திட்டம் தொடர்பில் தென்பகுதியில் பக். 25

## மன்னிப்பு கேட்கவேண்டும் சம்பந்தன்



கொழும்பு, ஏப். 25
கிளிநொச்சி–பரவிப்பாஞ்சான் பகுதியினுள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நுழைந்தமைக்காக, அவர் இராணுவ அதிகாரிகளிடம் மன்னிப்புக் கோரவேண்டும்.
இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.
வடக்கு மாகாணத்துக்குக் கடந்த வாரம் பயணம் மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கிளிநொச்சி மக்களைச் சந்தித்தார். இதன்போது பரவிப்பாஞ்சானில் தமது காணிகளை இராணுவத்தினர் கைப்பற்றி வைத்திருக்கின்றனர் என, அந்த மக்கள் முறை பக். 25

## வடக்கு அரசின் தீர்வு வரைவு அரசமைப்புக்கு உட்பட்டதா?

### இதை ஆராய்வதே முக்கியம் என்கிறார் வடக்கு ஆளுநர்

கொழும்பு, ஏப். 25
வடக்கு மாகாண சபை முன்வைத்துள்ள தீர்வு வரைவு அரசமைப்புக்கு உட்பட்டதா, இல்லையா என்பதே முக்கியம் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண அரசினால், தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்ட வரைவு கடந்த வெள்ளிக்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கூரே மேற்கண்டவாறு பக். 25

## கொள்ளைக் கும்பலை மடக்கினர் பொலிஸார்

### ஆரம்ப விசாரணைகளின்போது பல கொள்ளைகள் தெரியவந்தன

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் கொள்ளை, திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில், அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் குழுவொன்றை நேற்றுக் கைதுசெய்துள் பக். 25

முச்சந்தி முரளி



ஒன்றுமே கேட்க ஏலாது என்று சொல்லுறியள்...

## கஞ்சா கடத்தச் சென்றோர் புளி மூடையுடன் வந்தனர்

### பருத்தித்துறையில் அறுவர் கைது



யாழ்ப்பாணம், ஏப். 25
இந்தியாவிலிருந்து கஞ்சா கடத்திவரும் கும்பலை மடக்க பதுங்கியிருந்த பொலிஸாருக்கு, புளியம்பழ மூடையொன்றும் இந்தியப் பதிவில் இருக்கும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கடலால் கொண்டுவரப்பட்டபோது அகப்பட்டன. பக். 25

## நிலாவரைக் கிணற்றில் மூழ்கியவரின் சடலத்தைக் கண்டுபிடித்தது ரோபோ

### 152 அடி ஆழத்தில் அதனை மீட்டனர் கடற்படையினரின் சுழியோடிகள்

யாழ்ப்பாணம், ஏப். 25
புத்தூர்நிலாவரைக்கிணற்றுக்குள் மூழ்கியதாகக் கூறப்படும் முதியவர், அந்தக் கிணற்றினுள் 152 அடி ஆழத்தில் சடலமாக இருந்தமை ரோபோ மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு, சுழியோடிகளால் நேற்றுச்சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். பக். 25

## புலிகளின் முன்னாள் தளபதி ராம் அம்பாறையில் வைத்துக் கடத்தல்

### நேற்றுக் காலை வீட்டுக்குச் சென்ற மூவர் வானில் அழைத்துச் சென்றதாக முறைப்பாடு



யாழ்ப்பாணம், ஏப். 25
புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்த, தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட முன்னாள் தளபதி கேணல் ராம் நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்.
இது தொடர்பில் அவரது மனைவியால் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
திருக்கோவில் – தம்பிலுவில் பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்தே, இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பக். 22

## பொருளாதார மத்திய நிலைய காணியை அடையாளப்படுத்துக

### வவுனியா மாவட்ட அரச அதிபர் இணைத் தலைவர்களுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.25
வவுனியா பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்குரிய காணியை, நாளை மறுதினம் புதன்கிழமைக்குள் அடையாளப்படுத்தி வழங்குமாறு, மாவட்ட அரச அதிபர் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.
பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு 5 காணிகள் பரிந்துரை செய்யப்பட்டன . அதில் 2 காணிகளே இதற்குப் பொருத்தமானதாக உள்ளன. இதில் எந்தக் காணியை பரிந்துரை செய்வது என்பது தொடர்பில் பதில் வழங்க வேண்டும் என்று, இணைத் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வவுனியா அரச அதிபர் கேட்டுள்ளார். (விரிவு 2 ஆம் பக்கத்தில்)

## கிராம அலுவலர்களுக்கு அச்சுறுத்தல்; இராணுவ விசாரணை முடிவு இன்று

### இராணுவப் பேச்சாளர் ஜெயவீர தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 25
கிராம அலுவலர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்து, இராணுவம் அச்சுறுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பில் இராணுவப் பொலிஸாரின் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், இது தொடர்பிலான முடிவு இன்றையதினம் வெளியிடப்படக் கூடும் என்றும், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர பக். 25

## தமிழ் மக்களின் காணியை அபகரித்து மகாவலி அதிகார சபைக்குக் கட்டடம்

### கொக்கிளாயில் இரகசியமாக நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25
கொக்கிளாய் – நாயாற்றுப் பகுதியில் மகாவலி அதிகார சபைக்கு 354 மில்லியன் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு இரகசியமான முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
அத்துடன் மகாவலி அதிகார சபையினால், தமிழ் மக்களிடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட காணிகளுக்கு மாற்றுக் காணி, முறிப்புக் குளத்தில் வழங்கி. அதுவரை தமது எல்லையை பக். 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலைய காணியை அடையாளப்படுத்துக

## வவுனியா மாவட்ட அரச அதிபர் இணைத் தலைவர்களுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.25
வவுனியா பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற் குரிய காணியை நாளை மறுதினம் புதன்கிழமைக்குள் அடையாளப்படுத்தி வழங்குமாறு, மாவட்ட அரச அதிபர் வவுனியா மாவட்டத்தின் இணைத் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு 5 காணிகள் பரிந்துரை செய்யப்பட்டன என்றும் அதில் 2 காணிகளே இதற்குப் பொருத்தமானதாக உள்ளன என்றும் அவற்றில் எந்தக் காணியை பரிந்துரை செய்வது என்பது தொடர்பில் பதில் வழங்க வேண்டும் என்று அரச அதிபர் அனுப்பியுள்ள கடிதத்தில் கோரியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி 2 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய காணியை அடையாளம் காண்பதில் இழுபறி ஏற்பட்டது.

ஓமந்தையிலுள்ள மாணிக்கபுரம் காணி இந்தத் திட்டத்துக்காக இனங்காணப் பட்டிருந்தது. மாணிக்கபுரம் காணி நகரிலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவில் இருந்தமையால் மாற்றுக் காணி வழங்குமாறு கிராமிய பொருளாதார அமைச்சு கோரியிருந்தது. இதனால் விவசாயத் திணைக்களத்தின் விதை உற்பத்தி நிலையம் உள்ள தாண்டிக்குளம் காணியை இந்தத் திட்டத்துக்கு வழங்குவதற்கு வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் ஓமந்தை மாணிக்கபுரம் காணியை வழங்க முடியாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். அதனால் இந்தத் திட்டத்தைத் தொடர்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது. பொருளாதார மத்திய நிலையத்துக்குரிய காணியை அடையாளப்படுத்தி வழங்காது விட்டால் திட்டம் வேறு மாகாணத்துக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே மாவட்ட அரச அதிபர், இணைத் தலைவர்களுக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், இந்தத் திட்டத்துக்காக 5 இடங்களில் காணிகள் அடையாளப் பட்டிருந்தன. ஓமந்தை மாணிக்கபுரம், பம்மைமடு, ஈரப்பெரியகுளம், தாண்டிக்குளம், மன்னார் வீதியில் ஓரிடம் என்று 5 இடங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

அதில் வடக்கு மாகாண முதலமைச்சர் ஓமந்தை மாணிக்கபுரம் காணியையே பரிந்துரைந்திருந்தார். ஆனால், அந்தக் காணி தனியாருக்கு 1966 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. எனவே அந்தக் காணியையும் இந்தத் திட்டத்துக்குப் பெற்றுக் கொள்ள முடியாது.

இதேபோன்று பம்மைமடு, மன்னார் வீதியில் உள்ள காணிகள் என்பனவும் நகரிலிருந்து தொலைவிலேயே உள்ளன.

இதனால் அவற்றைத் தெரிவு செய்ய முடியாது. தாண்டிக்குளம் அல்லது ஈரப் பெரியகுளத்திலேயே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். இது தொடர்பில் இணைத் தலைவர்களை நாளை மறுதினம் புதன்கிழமைக்குள் பதில்வழங்க வேண்டும் என்று அரச அதிபர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-ஐ-5-21-10)



வடக்கு மாகாண சபை, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்பன இணைந்து நடத்தும் வடக்கு - தெற்கு மாணவர் பங்குபற்றிய சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டம் நேற்று ஆரம்பமாகியது. "பனை ஓலை - தென்னை ஓலை" என்ற தொனிப் பொருளில் நடைபெறும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தென்பகுதி மாணவர்கள் நேற்று யாழ்.ரயில் நிலையத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மாலை நிகழ்வுகள் சுப்பிரமணியம் பூங்காவில் நடைபெற்றன.
(ற-ஐ-ரி5,20)

## வேட்டியில் பற்றிய தீயால் பூசகரும் மகனும் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.25
வேட்டியில் பற்றிக்கொண்ட தீயை அணைக்க முற்பட்ட கோயில் பூசகரும், அவரது மகனும் தீக்காயங்களுக்குள்ளாகி சிகிக்சை பயனின்றி நேற்று முன்தினம் சாவடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் யாழ். கந்தர் மடத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியக்குருக்கள் (வயது - 62) மற்றும் அவரது மகனான சாந்தஸ்வரரூபக்குருக்கள் (வயது - 25) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தின் பின்னர், மண்ணெண்ணெய் தோய்ந்திருந்த வேட்டியை மகன் தீயில் எரித்த போது அவருக்குத் தீ பரவி அவர் எரிகாயங்களுக்கு உள்ளானார் அதனை அணைக்க முற்பட்ட தந்தையும் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் பிற்பகல் இருவரும் உயிரிழந்துள்ளனர். இருவரது சடலங்களும் இறப்பு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நீதிமன்றப் பணிப்புக்கு அமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.
(ற-ஐ-ரி)

## தொல்புரத்தில் பொதுக் கேணியைக் கையகப்படுத்தியுள்ளார் தனி நபர்

### கிராம மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப்.9
தொல்புரம் கிழக்கு முன்கோடை ஜே/168 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட கிராமத்தில் பழமை வாய்ந்த பொதுக் கேணி ஒன்று தனிநபர் ஒருவரால் கையகப்படுத்தப் பட்டுள்ளது என்று அந்தப் பிரிவு கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பழைமைவாய்ந்த இந்தப் பொதுக் கேணியை அந்தக் கிராம மக்கள் விவசாய தேவைக்காகவும், ஆலய தேவைக்காகவும், கால்நடைகளின் குடிதண்ணீர் தேவைகளுக்காகவும் மற்றும் கிராம மக்களின் அன்றாட தேவைக்காகவும் பயன்படுத்தி வந்தனர்.

இந்தப் பொதுக்கேணிக்கு அருகில் உள்ள வயற்காணியை அதே கிராமத்தைச் சேர்ந்த தனிநபர் ஒருவர் தனது சொத்துடமையாக்கிக் கொண்டதன் பின்னர் வயற்காணிக்கு அருகில் உள்ள கேணியையும் மூடி அடைத்துள்ளார்.

இந்தக் கேணிக்கு ஏற்கனவே உரித்துடையவர்கள் இதனைத் தட்டிக் கேட்டும் எந்தப் பயனும் இல்லை என்று கிராம மக்கள் கூறுகின்றனர்.

இது சம்பந்தமாக மத்தியஸ்தர் சபைக்குச் சென்று பின்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும் கேணிக்கு உரித்துடையவர்களுக்கு போதிய நிதி இன்மையால் இந்த வழக்கைத் தொடரமுடியாத நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கையகப்படுத்திய நபர் அந்தப்பொதுக்கேணியில் குப்பை கூளங்களையும், வாழைத்தண்டுகளையும், இறந்த விலங்குகள், பிராணிகள் என்பவற்றை வீசி சுகாதார சீர்கேடாக்கியுள்ளார் என்று இந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

அதனால் அந்தக் கேணியில் இருந்து துர்நாற்றம் வருவதை அடுத்து உட்புறச் சுவர்களையும், வெளிப்புறக் கட்டுக்களையும் உடைத்து உழவு இயந்திரம் கொண்டு மக்கி மற்றும் கிரவல் கொண்டு முற்றாக கேணியை மூடப்பட்டு அதற்குள் தென்னங்கன்றுகளும் வைக்கப்பட்டுள்ளன.

இதனை பங்குதாரர்கள் கேட்டபோது நீதிமன்றத்தின் உத்தரவு என கையகப்படுத்திய நபர் கூறுகிறார். ஆனால் அவ்வாறான ஒரு உத்தரவும் வழங்கப்படவில்லை. இது அவரின் அராஜகச் செயல் எனப் பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தற்போது உள்ள நாட்டின் வெப்ப நிலைகாரணமாகவும், மக்களின் விவசாயத் தேவைக்கு தண்ணீரை சேமிக்கவும், பொதுமக்களின் வெவ்வேறு தேவைகளுக்காகவும் இந்தக் கேணியை மீளவும் புனர்நிர்மாணம் செய்து தரவேண்டும் என உரிய அதிகாரிகளிடம் ஊர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக கேணிக்கு உரிமை கோரும் நபரிடம் கேட்டபோது-

அது எனது காணிக்குரிய கேணி. சுமார் 15 வருடங்களுக்கு முன்பு அந்தக் காணியை வாங்கும் போது அதனோடிணைந்த இந்தக் கேணியும் எமக்குரியது என்று உறுதியில் இருக்கின்றது. கடந்த 4 வருடங்களுக்கு முன்பு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கேணி மூடப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் இது சம்பந்தமாக அந்தப் பிரிவு கிராம சேவையாளரைத் தொடர்பு கொண்ட போதும் உரிய பதிலைப் பெறமுடியவில்லை.
(ற-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டது நாய்

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா. ஏப். 25
வவுனியா– மகாறம்பைக்குளம் வீட்டுத்திட்டப் பகுதியில் நாய் ஒன்று தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.
வவுனியா –மகாறம்பைக் குளம் பகுதியில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான ஆடு ஒன்றைக் கடித்த குற்றத்துக்காகவே, ஆட்டின் உரிமையாளரால் அந்த நாய் தூக்கில் போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.
மேய்ந்து கொண்டிருந்த ஆட்டைக் கடித்துக் குதறியது என்று தெரிவித்து, குறித்த நபர் நாயைத் துரத்தி துரத்தி அடித்து கொலை செய்துள்ளதாகவும், நாய் இறந்த பின்னர் அதை மரம் ஒன்றில் கட்டி தொங்கவிட்டதாகவும் தெரிவித்த பொதுமக்கள், குறித்த நாய் அடித்துக் கொலை செய்யப்பட்ட அன்றைய தினம் காலையில் இருந்து மறுநாள் காலை வரை தூக்கில் தொங்கவிடப்பட்டதாகவும் குறிப்பிட்டனர்.
அண்மைக் காலமாக இலங்கையின் பல பகுதிகளிலும் ஐந்தறிவுள்ள விலங்குகளையும் பறவைகளையும் கொடுமைப் படுத்தும் பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், சிலர் இனம்காணப்பட்டுத் தண்டிக்கப்பட்டும் உள்ளனர். இந்த நிலையில் இந்தச் சம்பவம் அனைவரையும் விசனமடைய வைத்துள்ளதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (து-வ-21)

## மூதாட்டியின் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
திருநெல்வேலியிலுள்ள கோயிலில் வழிபாடு முடித்து வெளியேறிய மூதாட்டியின் தங்கச் சங்கிலியைக் கொள்ளையன் ஒருவன் அறுத்துக் கொண்டு ஓடியுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
திருநெல்வேலி நீதாலாட்சி சிவன் ஆலயத்தில் வழிபாடு முடித்து வெளி யேறி, வீடு செல்லும் வழியிலேயே மூதாட்டியின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட் டுள்ளது.
ஆலயத்துக்கும் வீட்டுக்கும் இடையில் சுமார் 75 மீற்றர் இடைவெளி தூரத்துக்கு இடையில் மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையன் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளான்.
இதுகுறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப் பாட்டையடுத்து, பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (து-வ-101)

# மினி பஸ் விபத்தில் நால்வர் படுகாயம்

வலி.வடக்கு, ஏப்.25
கீரிமலையிலிருந்து வந்த மினிபஸ் மாவிட்டபுரத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.
இந்தச்சம்பவம்நேற்றுஞாயிற்றுக் கிழமை மதியம் நடைபெற்றது.
கீரிமலையில் பிதிர்க்கடன் நிறைவேற்றிவிட்டு, சாவகச்சேரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினி பஸ்ஸே மேற்படி விபத்துக் குள்ளாகியுள்ளது.
இந்தச் சம்பவத்தில் பஸ்ஸில் பயணித்த நால்வர் படுகாயமடைந்துள்ளனர். நுணாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த பிரதீபன் பிரதிக்ஸா (வயது - 11), பிரதீபன் தர்சன் (வயது - 08), நாகநாதன் நிதர்சன் (வயது - 23), வைரமுத்து நாகராசா (வயது - 54) ஆகியோரே விபத்தில் காயமடைந்தவர்களாவர்.
இவர்கள் மூவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.
இதில் வைரமுத்து நாகராசா என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (து-வ-25)



## ரோபோ உதவியுடன் நீருக்கடியில் வெடிபொருள்கள் அகற்றும் பணி

### இலங்கை – அமெ. கடற்படைகள் இணைந்து ஈடுபடுவதற்குத் திட்டம்

கொழும்பு, ஏப். 25
வடக்கில் குளங்கள், கடலேரிகளில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வெடிபொருள்களை அகற்றும் பணியில், இலங்கைக் கடற்படையுடன் அமெரிக்கக் கடற்படையும் ஈடுபடவுள்ளது.
இவற்றை அகற்றுவதற்கு ரோபோ தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படவுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,
இலங்கைக்கடற்படையினருக்கு, அமெரிக்கக் கடற்படையினர் இரண்டு கட்டங்களாக, நீருக்கு அடியில் காணப்படும் வெடி பொருள்களை அகற்றும் பயிற்சிகளை வழங்கியிருந்தனர். கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இலங்கை வந்த அமெரிக்கக் கடற்படையின் சிறப்புக் குழுவொன்று, கைவிடப்பட்ட வெடி பொருள்களை அகற்றுவது தொடர்பாக ஒரு வார காலம், கடற்படையின் சுழியோடிகளுக்குப் பயிற்சிகளை வழங்கியிருந்தது.
அதேபோன்று இந்த மாதம் முதல் வாரத்தில், கடற்படையின் 20 பேர் கொண்ட குழுவினருக்குக் குவாமில் உள்ள அமெரிக்கக் கடற்படைத் தளத்தில், 10 நாள் பயிற்சிகள் வழங்கப்பட்டன.
அமெரிக்கக்கடற்டையினரிடம், பயிற்சி பெற்ற இலங்கை கடற்படையினரும், அமெரிக்கக் கடற்படையினரும் இணைந்தே, வடக்கில் நீர் நிலைகளில் கைவிடப்பட்டுள்ள வெடி பொருள்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். ரோபோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தச் சிறப்புத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
வடக்குக் கடற்படை கட்டளை தளபதி ரியல் அட்மிரல் பியல் த சில்வா இந்த நடவடிக்கைக்குத் தலைமை தாங்கவுள்ளார் - என்றார். (து-வ-5)

## குடும்பஸ்தரைக் காணவில்லை

கரணவாய், ஏப். 25
வீட்டிலிருந்து வேலைக்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் கடந்த 5 நாள்களாக வீடு திரும்பவில்லை என்று முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
இமையாணன் கிழக்கு, கலைமகள் வீதியைச் சேர்ந்த சபாரத்தினம் ஜெயமோகன்( வயது 44) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காணாமற் போனவராவார்.
இது தொடர்பாக வல்வெட்டித் துறைப்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-வ-108)

# மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக, இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் திருவையாறு, சாந்தபுரம், இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்பு வைத்த குளம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும், நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார் குளம், வெள்ளி மலை, சி.ஈ.சி.பி. ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (வ-ரி)

**பெயர்மாற்றம்**
மூங்கிலாறு, உடையார்கட்டு தெற்கு என்னும் முகவரி கொண்ட சித்தம்பாலம் ரவிந்துரன் ஆகிய நான் எனது பெயரை சிற்றம்பலம் ரவிந்திரன் என மாற்றிக்கொள்ளுகின்றேன்.
சி.ரவிந்திரன்
(கே.23) (13.18.17)

**தேவை**
மில்வேலையில் அனுபவம் உள்ளவர். பயிலுனர் மற்றும் பில்கிளார்க், பொதியிடல், உதவியாளர் (பெண்கள்) தேவை. தொடர்பு:-077 1746101

**உடன் தேவை**
அனுபவம் உள்ள T மேக்கர், உணவு பரிமாறுபவர் இருவரும் உடன் தேவை. யாழ் நகரை அண்மித்த பகுதியில் வசிப்போர் விரும்பத்தக்கது
தொடர்பு : 021 568 5516

**தேவை**
யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. வாகன இடவசதியுடன்.
தொடர்பு : 077 281 4020

Galaxy Star
வெற்றி வாரம் 052 | திகதி 24.04.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
09 05 24 38 50
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 29,13,460/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 24.04.2016 | வெற்றி வாரம் 1970 | ஊதா
இடபம்
வெற்றி இலக்கங்கள்
12 27 38 53
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 40,55,700 /-

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இளைஞர் யுவதிகள், O/L, A/Lஎழுதியோர்,தொழில் தேடுவோர் அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் 3 மாதங்களில் எம்முடன் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 30. 04. 2016
1. காலை 08.00-10.00 | 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 | 4. மாலை 03.00-05.00
நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON Experts in English Training
278, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**Holy Family Convent, Jaffna Past Pupil's Association**
**Annual General Meeting, 2016**
All members of the above association are invited to the **Annual General Meeting,** which will be held on the **30th of April, 2016(Saturday), at 3.30 pm in the school hall.**
All members are kindly requested to renew their membership (membership fee: Rs.100/-) during the annual general meeting.
Past pupils who wish to join the association may do so at the beginning of the meeting.
Principal
J/Holy Family Convent
Jaffna.
For Secretary
Past Pupils' Association
Holy Family Convent
Jaffna.

விசேட சலுகைகள்
220 இற்கு மேற்பட்ட உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவைகள்!
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள். உணவுப் பொருள்கள், கருவாடு, மருந்து, எண்ணெய் வகைகள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம்.
11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg இற்கு மிக குறைந்த கட்டணம்
UK -600/= Canada - 900/= France - 700/= Garmany - 650/=
மற்றைய நாடுகளுக்கும் மிகக்குறைந்த கட்டணத்தில் அனுப்பி கொள்ள முடியும்.
வாரத்தில் எல்லா நாள்களும் சேவையினை பெற்றுக் கொள்ளலாம்.
திருமுருகன் கொம் நெற் (PVT) Ltd
271A, K.K.S Road, Jaffna.
46,Aadiyapatham Road, Thirunelvely.
18. பிரதான வீதி,நெல்லியடி.
பிரதான வீதி. பருத்தித்துறை. (பஸ் நிலையம் முன்பாக)
பிரதான வீதி. சங்கானை 021 222 7835 (ஆசைப்பிள்ளை நகைக்கடை முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டர் ஆசிரியர் தவறான முடிவு

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர் ஒருவர் தவறான முடிவுக்குச் சென்ற நிலையில், காப்பாற்றப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தனது பெயர் தொண்டராசிரியர் பட்டியலில் இல்லை என்ற காரணத்தினால் இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளதாக ஆசிரியர் தரப்பினால் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அவரது பெயர் தொண்டர் ஆசிரியர் பெயர்ப் பட்டியலில் உள்ளது என்று திணைக்களம் தெரிவிக்கின்றது.(வ–101)


### பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை


காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு முன் அனுபவம் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உடனடியாகத் தேவை. சுயவிவரக் கோவை, நற்சான்றிதழ்களுடன் 26.04.2016 (செவ்வாய்க்கிழமை) நேரில் சமுகமளிக்கவும். வயது எல்லை 20 - 40

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
இல.12/1. கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்.
(வீரசிங்கம் மண்டபம் முதலாம் மாடி)
021 222 7949, 071 031 8737


# கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள இழுபறியாலே வற் வரி அதிகரிப்பில் அநாவசிய சர்ச்சை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.25
அரசினுள் சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் நடைபெறும் கயிறிழுப்பு காரணமாகவே வற் வரி அதிகரிப்பு தொடர்பில் அநாவசிய சர்ச்சை ஏற்பட்டது என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.
சிங்கள – தமிழ் புத்தாண்டின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் புத்தாண்டு ஒன்றுகூடல் வைபவம் ஒன்று நடைபெற்றது. கட்சியின் முக்கியஸ்தர்களும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமானவர்களும் மட்டும் அதில் கலந்து கொண்டிருந்தனர்.
இதன்போது வற் வரி அதிகரிப்பு தொடர்பில் உருவான சர்ச்சை குறித்து பலரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறையிட்டுள்ளனர்.



அதற்குப் பதிலளித்த அவர், வற் வரி அதிகரிப்பு தொடர்பான அமைச்சரவை ஆலோசனைக் கூட்டத் தின்போது குடிதண்ணீர், மின்சாரம், மருந்துப் பொருள்கள், அத்தியாவசிய உணவு வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் போன்றவற்றுக்கு வரி அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதில்லை என்று அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது.
அமைச்சரவைக் கூட்டத்தின்போது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வெளிநாட்டில் இருந்த கார ணத்தால் இது தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் பொறுப்பை நானும் ஜனாதிபதியும் இணைந்தே அமைச்சர் லக்ஷ்மன் யாப்பாவிடம் ஒப்படைத்தோம். ஆனால் அவர் அதனை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை.
அதன் காரணமாகவே வரி அதிகரிப்பு தொடர்பில் அநாவசிய சலசலப்பு ஒன்று ஏற்பட்டது.
இதற்கான பின்னணி காரணம் சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்ற பாகுபாடுதான். ஆனால்தேசிய அரசில் இணைந்திருக்கும் போது இவ்வாறான செயற்பாடுகள் நல்லதல்ல என்று பிரதமர் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
(ற-ஐ-5)


## நல்லிணக்கப் பொறிமுறைகளின் வடிவமைப்பு

நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாலோசனை செயலணியானது மத நிறுவனங்கள், அரசியல்கட்சிகள், தொழில் துறை சார்ந்தோர் மற்றும் ஊடக நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பொறிமுறைக்கட்டமைப்புக்களை வேண்டி நிற்கின்றது.

குறிப்பாக காணாமல் போனோர் தொடர்பானதும் உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் கடந்த காலத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மீண்டும் நிகழாதிருப்பதற்கான ஆணைக்குழு, பொறுப்புக் கூறலுக்கான நீதிக்கட்டமைப்பு ஆகியவை குறித்த கட்டமைப்புக்கள் வரவேற்கப்படுகின்றன.

துறைசார்ந்த கலந்தாலோசனைகளில் விருப்பமுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள் நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்பு செயலகத்தினை (+94) 115 920 029 contact;scrm.gov.lk அல்லது scrm.gov.lk இணையத் தளத்திலுள்ள படிவத்தினூடாகத் தொடர்பு கொள்ள முடியும்.

பிரிவுசார் கலந்துரையாடல்கள்





www.titusstores.com
டயிடஸ் ஸ்ரோர்ஸ்
புறக்கோட்டை லிபர்டி ப்ளாசா
112439422 112574446
HOTLINE: 0777-384671



## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் திருநாவுக்கரசு திலீபன்

கடந்த 28.03.2016 இறைபதமடைந்த எமது குலவிளக்கு **அமரர் திருநாவுக்கரசு திலீபன்** அவர்களின் ஆத்மசாந்திக் கிரியை (27.04.2016) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரது மரணச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அறிவாலயம்,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்
077 788 1561



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
தளையசிங்கம் தவராஜ்

அன்னை மடியில் 09 . 06 . 1945
இறைவன் அடியில் 26 . 03 . 2016



26.03.2016 அன்று சிவபதமடைந்த எமது அன்புச்சகோதரனின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி, தபால், தந்தி மூலமாகவும் தமது அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், வேறுபல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,இன்று (25.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு மகிழடி, தெல்லிப்பழையில் அமைந்துள்ள அன்னாரின் சகோதரனின் இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் [illegible] நடைபெறும் மதியபோசனத் திலும் பங்குபற்று மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகிழடி, தெல்லிப்பழை.
(70252)
(12.17.20)
குடும்பத்தினர்.



### தவறிவிட்டது

5 ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கேசவன் என்பவரின் தேசியஅடையாள அட்டை (890663710v) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கைலாச பிள்ளையார் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு : 077 137 1839

### வேலை ஆள்கள் தேவை

மேசன் வேலை நன்கு தெரிந்தவர், தச்சுவேலை நன்கு தெரிந்தவர், வெல்டர் (Welder)
076 866 3944

### வீடு விற்பனைக்கு

யாழ் கச்சேரிக்கு அருகில் ஒரு பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 458 8898

### வரலாறு தரம் 11

துணைப் பாடநூல் பகுதி II வினா விடைகள்
பாட வேலைப் பயிற்சிகள் விடைகள்.
ஆக்கம்: நா.மயில்வாகனம்
*B.A.Cey.Modern History Special*
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவுடித்தனத்தில் ஈடுபடும் மாணவர்களுக்குச் சிறை

## உயர்கல்வியும் கற்க முடியாத நிலை உருவாகும்

## யாழ். மேல் நீதிமன்ற நீதிவான் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்ப்பாண மாவட்டத்தில் ரவுடித்தனத்திலும், தெருச் சண்டித் தனத்திலும் ஈடுபடும் மாண வர்கள் சிறைத் தண்டனைக்கு உள்ளாக நேரிடும். அவர்கள் உயர் கல்வி கற்கமுடியாத நிலையும் ஏற்படும். இது மாணவர்களுக்கும், மாணவர்களின் பெற்றோர்களுக்குமான முன்னெச்சரிக்கை.- இவ்வாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிவான் மா.இளஞ்செழியன் எச்சரித்துள்ளார்.

ரவுடித்தனம், தெருச் சண்டித்தனம் என்பவற்றில் ஈடுபடும் பிள்ளைகளைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்கு சம்பந்தப்பட்ட பெற்றோர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிவான் இளஞ்செழியன் அறிவுறுத்தியுள்ளார்.

போதைவஸ்து வழக்கொன்றில் மேல் நீதிமன்றத்தில் பிணை வழங்குமாறுகோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான விசாரணையின் போதே நீதிவான் இளஞ்செழியன் இந்த எச்சரிக்கையையும், பெற்றோருக்கான அறிவுறுத்தலையும் விடுத்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தனிமனித நலனைவிட சமூக நலனே நீதிமன்றத்துக்கு முக்கியம். எனவே ரவுடித்தனத்திலும், தெருச் சண்டித்தனத்திலும் ஈடுபடும் மாணவர்களுக்கு, அவர்கள் மாணவர்கள் என்ற ஈவிரக்கம் நீதிமன்றத்தால் காட்டப்படமாட்டாது. தெரு ரவுடிகளாகச் செயற்படும் பிள்ளைகளை, அவர்களுடைய பெற்றோர்கள் உடனடியாகக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரவேண்டும்.

அதிபர், ஆசிரியர்கள் சமூகக் குற்றச்செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒழுக் கத்தில், அவர்கள் இறுக்கமான ஒழுக்க நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும்.

ஒழுக்கச் சீலர்களாக மாணவர்களை மாற்றுவதற்கு அச்சப்படும்ஆசிரியர்கள் அச்சமில்லாத இடங்களுக்கு இடம்மாற்றம் பெற்றுச் செல்வது நல்லது. சமூகத்தைக் காப்பாற்றும் பொறுப்பில் இருந்து எந்த அதிபரும், ஆசிரியரும் தவறக்கூடாது.

மண்ணின் எதிர்காலத் தலைவர்களாகவுள்ள மாணவர்கள் சமூக சீர்கேடுகளில் சிக்கி, தங்களுடைய வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்வதை நீதிமன்றம் அனுமதிக்க முடியாது. எனவே, ரவுடித்தனத்தில் ஈடுபடும் மாணவர்கள் அதனை உடனடியாகக் கைவிட வேண்டும். இல்லையேல் அவர்களுக்குச் சிறை வாழ்க்கை நிச்சயம்என்பதைமறந்துவிடக்கூடாது.

குடாநாட்டு நீதிவான் நீதிமன்றங்கள் வாள் வெட்டு வழக்குகளில் சிறைத் தண்டனைத் தீர்ப்புக்கள் வழங்கி வருகின்றன. அதேநேரம் பெரும் குற்றச் செயல்களுக்கு பிணையில் வெளியில் வரமுடியாத வகையில் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றார்கள்.

யாழ் மேல் நீதிமன்றம் சாவுத் தண்டனை மற்றும் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை என பெரும் குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்கி வருகின்றது. போதைவஸ்து வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ளவர்களுக்குக் கடந்த ஒரு வருட காலமாக, யாழ் மேல்.நீதிமன்றம் பிணை வழங்கவில்லை.

குடாநாட்டுசமூகத்தையும், மாணவர்கள், இளைஞர்களையும் போதைவஸ்து என்ற கொடூரப் பிணியில் இருந்து காப்பாற்றுவதற்காக நீதிமன்றங்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும். சில நபர்கள் தெரு ரவுடித்தனத்தையும் வாள் வெட்டுக்களையும் கைவிடுவதாக இல்லை.

### குற்றவாளியாகும் பெற்றோர்

பெற்றோர் இவ்விடயத்தில் முதல் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றார்கள். தெரு ரவுடித் தனத்தில் ஈடுபடுகின்ற மாணவர்கள், இளைஞர்களுக்கு மோட் டார் சைக்கிள் ஒன்று பெறு மதிமிக்க ஐபோன் என்ற தொடுபேசி ஒன்றும் பெற்றோர்களால் வாங்கிக் கொடுக்கப்படுகின்றது. தனது மகன் வெளியில் சென்று என்ன வேலை செய்கின்றான் என்று தெரியாத வகையில் பெற்றோர் காணப்படுகின்றார்கள். இத்தகைய மாணவர்கள், இளைஞர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் நீதிமன்றம் கடும் எச்சரிக்கை செய்கின்றது.

### பொலிஸ் ரோந்து

ரியூசன் செல்லும் மாணவிகளுக்குப் பின்னால் செல்லும் மாணவர்கள், இளைஞர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அடாவடித்தனம் செய்யும் தெரு ரவுடிகளை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மாலை6மணியில் இருந்து 9 மணிவரையில் வீதிகளில் சட்டவிரோதமாகக் கூடும் இளைஞர்களைக் கைது செய்து, அலைந்து திரிவோர் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும். அதற்காகப் பொலிஸ் வாகன ரோந்துகளை அதிகரிக்க வேண்டும். யாழ். இந்துக் கல்லூரி சுற்றாடல் பகுதி முழு நாளும் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, பாசையூர் சென். அந்தனிஸ் விளையாட்டரங்கு, புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டுச் சந்தி, கோப்பாய் சந்தி, கொக்குவில் சந்தி, சுன்னாகம் சந்தி போன்ற இடங்களில் ரவுடிகள் அதிகமாகக் கூடுகின்றனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன. இந்த இடங்களில் சந்தேகத்துக்கு இடமான முறையில் கூடுபவர்கள் அனைவரையும் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிரபல கல்லூரிகளில் பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் உட்பட எந்தப் பாடசாலைகளினதும் மாணவர்கள் ரவுடித் தனத்தில் ஈடுபடக் கூடாது. வாள் வெட்டு சம்பவங்களில் சம்பந்தப்படக் கூடாது. வீதிகளில் மாணவிகளைப் பின்தொடரக்கூடாது. தமது எதிர்கால வாழ்க்கை நாசமாகும் வகையில் சட்ட விரோத போதைவஸ்து பாவனை மற்றும் போதை வஸ்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

### இரக்கம் இருக்காது

குற்றச் செயல்களில் சம்பந்தப்படுகின்ற காரணத்துக்காகக் கைது செய்யப்படும் எந்த ஒரு மாணவனுக்கும் நீதிமன்றத்தால் பரிவு இரக்கம் காட்டப்பட மாட்டாது. எதிர்காலத்தில் பல்கலைக் கழகத்துக்குக் கூட செல்ல முடியாத வகையில் சிறைத் தண்டனை தீர்ப்புக்கள் வழங் கப்படும்.

எனவே, குற்றச் செயல்களில் ஈடுபடும் தமது பிள்ளைகளை சம்பந்தப்பட்ட பெற்றோர்கள் கண்காணித்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்- என்றார். (ற-ஜ-4)




# அராலி வீதியில் கழிவுகளை அகற்றும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.25

கல்லுண்டாய்க்கும், பொம்மைவெளிக்கும் இடைப்பட்ட அராலி வீதியில் தேங்கிய கழிவுகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த பிரதான வீதியோரத்தில் சிலர் கழிவுகள் மற்றும் குப்பைகளைக் கொட்டிவிட்டுச் செல்கின்றனர்.

அதுவும் இரவு நேரங்களில் கழிவுகளை உரப்பைகளில் போட்டும் மற்றும் வாகனங்களிலும் எடுத்து வந்து அதை வீதியோரம் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். கொட்டப்பட்ட கழிவுகளை மாநகர கழிவகற்றும் பிரிவினரால் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வீதியோரம் கழிவுகளை கொட்டுவோர் மீது மாநகர சபை உரிய நடவடிக்கை எடுக்கும்- என்றார். (ற-ஜ-17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிமெந்துத் தொழிற்சாலையை இயக்குவது குறித்து இன்று பேச்சு

## வடக்கு அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் வடமாகாண சபையின் நிலைப்பாடு இன்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்படும் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

அதனை மீள ஆரம்பிப்பது மற்றும் அங்குள்ள சுற்றாடல் நிலைமை தொடர்பில் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக இன்று திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண உறுப்பினர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தத் தொழிற்சாலை செயற்பட்ட காலப்பகுதியில் வடபகுதியில் பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிய ஒரு தொழிற்சாலையாகவே இயங்கி வந்தது. போரின் பின்னரான காலப்பகுதியில் இந்தத் தொழிற்சாலை இற்றைவரை இயங்காத நிலையிலேயே காணப்படுகின்றது. இதனை மீள இயக்குவது தொடர்பாக பல தரப்புக்கள் முன்னின்ற போதும் இதுவரைக்கும் இயங்காத நிலையிலேயே உள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தக் கலந்துரையாடலுக்கு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பான விடயங்கள் பற்றி இன்றைய கலந்துரையாடலிலே பேசமுடியும் என்றும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

## க.பொ.த. சாதாரண தரப் பெறுபேறு மீளாய்வு புதனன்று வெளியாகும்

கொழும்பு, ஏப்.25

மீளாய்வு செய்யப்பட்ட சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் புதன்கிழமை வெளியிடப்பட உள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 61 ஆயிரம் பேர் மீள் மதிப்பீட்டுக்காக விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று ஆணையாளர் புஸ்பகுமார தெரிவித்துள்ளார். பெறுபேறுகளை எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னதாக வெளியிடப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மீள் மதிப்பீட்டுப் பெறுபேறுகள் இணையத்திலும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் சுய முகவரிக்கும், பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அதேவேளை, இந்தப் பரீட்சை விடைத்தாள் மீளாய்வுகளின் போது சுமார் 100 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் மட்டும் மாற்றம் செய்யப்பட்டனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்திருந்தார். (ற-ஐ-5)

## புத்தளத்தில் ஒருவர் சுட்டுப் படுகொலை

கொழும்பு, ஏப். 25

புத்தளத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம்- மகாகும்புக்கடவெல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இனந்தெரியாத நபர்கள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். அதனால் படுகாயமடைந்த நிலையில், அவர் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார் என்றும் தெரிவித்த பொலிஸார், அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (து-4)


### ஈர விழிகளுடன் ஈராண்டுகள்



**கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்**

திதி: சித்திரை மாத சங்கடஹரசதுர்த்தி (25.04.2016)

அன்புத் தெய்வமே, ஆண்டுகள் இரண்டு போனது அம்மா,
எங்களுடன் வாழ்ந்த அழகிய நினைவுகளும்
தங்கள் அன்பும் எம்மை வழிநடத்தி
செல்லும் தங்களை நேரில் காண
இயலாது இருப்பினும் நீங்கள்
எப்போதும் எம்முடனே வாழ்கிறீர்கள்

தோற்றம் 1924 10.13
மறைவு 2014.04.19

மகன் குடும்பத்தினர்.
இல. 140, பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.

### வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**குட்டியர் குருசுமுத்து**

மண்ணில் 22.08.1941
விண்ணில் 24.03.2016

கடந்த 24.03.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.04.2016 சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

T.C லேன்.
சங்கானை.
(70252)
(12.17.20)
குடும்பத்தினர்.

### 13 ஆம் ஆண்டு நினைவு

கிறிஸ்து படைப்பில் 22.11.1959
கிறிஸ்து அணைப்பில் 25.04.2003



அமரர்
**வீரசிங்கம் சகாயராஜா**

அன்பின் உருவமாக
பாசத்தின் சின்னமாக
எம்முள் வாழ்ந்து
குடும்பத்தின் தூணாக
கண்ணின் இமையாக
எமைக் காத்து
அரவணைத்தீரே....!
தெய்வமே! ஏன் எமை
விட்டுச் சென்றீர்

ஆண்டுகள் பதின்மூன்று தான் ஆகின்றது
ஈராறு ஜென்மங்கள் ஆனாலும் அழியாது எம் சோகம்
ஆறாது எம் பாசம்.
என்றும் உங்கள் ஆத்மா அமைதிபெற்று இன்புற
கண்ணீர் பூக்களாலே அஞ்சலி செய்கின்றோம்.

கற்பக்குளை,
உடுவில் வடக்கு, உடுவில்.

என்றும் உம் பிரிவால் வாடும்..
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

### முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் 26.06.1946
விண்ணில் 26.04.2015



வலத்தீஸ் தம்பதியரின் புதல்வி
**ஜோசப் மேரி அருள்மணி (நேசமணி)**
அவர்களின்
**முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி**

நாளை (26.04.2016) செவ்வாய்க்கிழமை
நண்பகல் 12 மணிக்கு திருப்பலி ஆரம்பமாகும்

அம்மா என் மூச்சு இருக்கும் வரை உனக்கு தீபம் ஏற்றுவேன்

திருப்பலி நடைபெறும் இடம்:
அருள் ஆச்சிரமம்
இல.5, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

மண்டபம்:
கலைத்தூது கலையகம்
286, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(தவிர்க்க முடியாத காரணத்தால் எம்மால் அழைக்கத் தவறியவர்கள் தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

என்றும் அம்மா உங்கள் பிரிவினால் கலங்கி நிற்கும் உங்கள் பிள்ளை.
பாசமிகு மகன் எட்மன்
குடும்பத்தினர்.

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**அப்பாக்குட்டி தெய்வேந்திரராசா**



தோற்றம் 29.03.1940
மறைவு 28.04.2013

அப்பா என்பது
அற்புதமான சொல் மட்டும் அல்ல.....
அனைத்துக்கும் ஆதாரமான சொல்
உங்கள் கை பிடித்து நாம் கடந்த நாள்கள்
காலத்தால் அழியாத கல்வெட்டுக்களாய்
எம் கண் முன்னே காட்சியாய் நிற்கின்றீர்கள் அப்பா
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!!

க.சசிகரன் (மருமகன்)
வல்வெட்டி.

தகவல்: அன்பு மனைவி, மகன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

077 952 1438

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29.12.1949
விண்ணில் 18.04.2014

திதி: சங்கட சதுர்த்தி



**அமரர் கதிர்காமு உமாமகேஸ்வரன்**
(கதிர் வெல்டிங் வேக்ர்ஸ் உரிமையாளர்)


ஆண்டுகளிரண்டு மறைந்து விட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சாவகச்சேரி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் சந்தையில் சடலம் மீட்பு



யாழ்ப்பாணம்,ஏப்.25
சுன்னாகம் சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்துக்குள் இருந்து மர்மமான முறையில் இறந்தார் எனக் கருதப்படுபவரின் சடலம் ஒன்று தலையிலிருந்து குருதிவெளியேறிய நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். அது கொலையா? அல்லதுதற்கொலையா? என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
-இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான விநாயகமூர்த்தி வினோதன் (வயது - 29) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
குறித்த வர்த்தக நிலையம் திறந்த நிலையில் இருந்த போதும் உரிமையாளரைக் காணாத சிலர் வர்த்தக நிலையத்துக்குச் சென்று, பார்த்த போது, உரிமையாளர் கடைக்குள் வீழ்ந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இது பற்றி கிராம அலுவலருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற கிராமஅலுவலர் அது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். அதன்பின்னர் அங்கு சென்ற பொலிஸார் இது தொடர்பில் மல்லாகம் நீதிவானுக்கு தகவல் வழங்கியதோடு மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ற-ஐ-4,10)

# நிலவும் கடும் வெப்பநிலையால் குறைகிறது கிணற்று நீர் மட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.25
தற்போதைய கடும் வறட்சியுடனான வெப்பமான கால நிலையால் கிணறுகளில் நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.
குடாநாட்டின் பல இடங்களிலும் உள்ள கிணறுகளில் இந்த நிலையை அவதானிக்க முடிகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.
பொதுவாகவே கோடை காலங்களில் கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்து காணப்படும். இந்த முறை நிலவும் கடும் வெப்பத்துடன் கூடிய காலநிலையால் வழமைபோன்று வற்று மட்டத்துக்குச் செல்லும் நிலையை விட கூடியளவில் தண்ணீர் வற்றியுள்ளதை அவதானிக்க முடிகிறது.
குடாக்கடற்பகுதியில் கடல் நீர் வற்றிச் செல்வதாலும் குளங்கள், நீர் ஏரிகள் போன்றவற்றில் தண்ணீர் வற்றியிருப்பதாலும், மக்களின் குடிமனைக் கிணறுகளின் நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்து செல்கின்றது.
கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து செல்வதால் மக்களின்தண்ணீர்ப்பாவனைக்கும் பற்றாக்குறை ஏற்படும் நிலை காணப்படுகின்றது.
இதே சமயம் வலிகாமம் கிழக்கு, மேற்கு மற்றும் தீவுப் பகுதிகளிலும் உள்ள கிணறுகளில் நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.
கிணறுகளில் குழாய் வசதி ஏற்படுத்தியும் குழாய் மூலம் தண்ணீரின் ஊற்று வெகுவாகக் குறைந்தே காணப்படுகின்றது. (ற-ஐ-4,17)

**" வலிகாமம் கிழக்கு, மேற்கு மற்றும் தீவுப் பகுதிகளிலும் உள்ள கிணறுகளில் நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. கிணறுகளில் குழாய் வசதி ஏற்படுத்தியும் குழாய் மூலம் தண்ணீரின் ஊற்று வெகுவாகக் குறைந்தே காணப்படுகின்றது. "**

## காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு அமர்வு கிளிநொச்சியில்

### இன்று முதல் நான்கு தினங்களுக்கு

கிளிநொச்சி, ஏப்.25
காணாமற்போனவர்களைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு இன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது. இந்த அமர்வு தொடர்ச்சியாக நான்கு நாள்கள் இடம்பெறவுள்ளன.
கடந்த காலங்களில் உள்நாட்டுப் போரின்போது, ஆயுததாரிகளாலும், வேறு நபர்களாலும் கடத்தப்பட்டு காணாமற்போனவர்களைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் கட்ட விசாரணைகள் கடந்த மாதங்களில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெற்றிருந்தன. அதன் தொடர்ச்சியாக ஆணைக்குழுவானது இன்று கிளிநொச்சியிலும் தனது அமர்வை நடத்தவுள்ளது.
இன்று கிளிநொச்சியில் ஆரம்பமாக்கும் அமர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இன்றும், நாளையும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்காகவும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்காக நாளை மறுதினம் 27ஆம் திகதி பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்காக 28ஆம் திகதியும் அமர்வுகள் நடத்தப்படவுள்ளன. குறித்த ஆணைக்குழுவின் விசாரணைகள் யாவும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் சாட்சியமளிப்போருக்கான அழைப்புக்கள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவினூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-21)

## கடற்படை வாகனம் மோதி முதியவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.25
கடற்படையினரின் வாகனம் மோதியதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். யாழ். மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பெர்னாண்டோ மரியதாஸ் (வயது - 60) என்பவரே படுகாயமடைந்துள்ளார். யாழ். நகரப்பகுதியில் கருவாட்டுக் கடை வைத்திருக்கும் குறித்த முதியவர், நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் கருவாடு கொண்டு சென்ற போது, மண்டைதீவுப் பகுதியில் இருந்து வந்த மண்டைதீவு கடற்படையினரின் வாகனம் மோதியதில் விபத்து இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-10)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுச் சபை கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,ஏப்.25
காரைநகர் சைவ மகா சபையின் பொதுச் சபைக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சபையின் கட்டடத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் சபைக்கான புதிய நிர்வாக குழு தெரிவு செய்யப்படவுள்ளது.
காரைநகர் சைவ மகா சபையின் முன்னாள் அங்கத்தவர்களாக இருந்து தற்போது தமது அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொண்டவர்களும், புதிதாக அங்கத்தவர்களாக இணைந்து கொண்டவர்களும் மட்டுமே புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ய முடியும்.
மேற்படி அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கூட்டத்துக்குச் சமுகம் தருமாறு சபையின் இடைக்கால நிர்வாக சபைத் தலைவர் மருத்துவர் ப.நந்தகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.
(ற-ஜ-4)

# மே-18 நினைவேந்தல் முள்ளிவாய்க்காலில்

## வவுனியா பிரசைகள் குழு அறிவிப்பு

வவுனியா,ஏப்.25
முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலையின் ஏழாம் வருட நினைவேந்தலை வவுனியா பிரசைகள் குழு உணர்வுபூர்மாக முன்னெடுக்கும் என வவுனியா மாவட்ட பிரசைகள் குழு அறிவித்துள்ளது.
வவுனியா மாவட்ட பிரசைகள் குழு மீள்தகவலமைக்கப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா மத்திய பஸ் நிலைய மேல்மாடி கட்டடத்தில் இடம்பெற்ற முதலாவது மாத அமர்விலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. மே 18 முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தலை வருடந்தோறும் முன்னெடுக்கப்பட்டு வருவதைப்போல இம்முறையும் முள்ளிவாய்க்கால் ஏழாம் வருட நினைவேந்தலை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படும்.
புதிய ஜனநாயக மார்க்ஸ்ஸிச லெனினிசக் கட்சியின் தலைமையில் மே மாதம் முதலாம் திகதி வவுனியாவில் நடைபெறும் உழைக்கும் மக்கள் மேதினப் பேரணிக்கு காணாமற் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் குடும்பங்களின் வவுனியா மாவட்டச் சங்கத்தினருடன் இணைந்து முழுமையான பங்களிப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவின் முன்னாள் தலைவர் கி.தேவராசா தெரிவிக்கும்போது, "குழுவின் அனைத்து பொறுப்புக்கள் மற்றும் உறுப்புரிமையிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளமை" தொடர்பாக கடந்த மாதம் நடைபெற்றிருந்த மீள்தகவலமைவுக் கலந்துரையாடலில் குழுவால் நிறைவேற்றப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் பகிரங்கமாக சகல பிரசைகளுக்கும் வெளியிடப்பட்டது - என்றார்.
இந்தக் கலந்துரையாடலில் பிரசைகள் குழுவின் தலைவர் கோ.ராஜ்குமார், செயலாளர் தி.நவராஜ் ஆகியோரின் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ-402,21)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு 20 வீத சம்பள உயர்வை வழங்குக

### கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.25
கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இருபது வீத சம்பள உயர்வை வழங்குவதற்கு வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று - கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது சம்பந்தமாக வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் ஏழு அம்ச கோரிக்கையை முன்வைத்து அக்கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை வடமாகாண கூட்டுறவு அமைச்சரிடம்கையளித்துள்ளது.
குறிப்பாக அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் அனைவரும் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த கூட்டுறவு பணியாளர்களுக்கு மே மாதத்தில் இருந்து இருபது வீத சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும்.
அத்துடன் வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த போர் சூழ்நிலையின் போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெரிய இழப்புகள் ஏற்பட்டன. இந்த சொத்திழப்புக்களால் சங்கங்கள் மீளமுடியாத நிலையில் உள்ளன. பாதிக்கப்பட்ட சங்கங்களுக்கு இழப்பீட்டு தொகையை பெற்றுத்தருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்கு உணவு பொதியை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை துணிகளை அந்தந்த மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்க வேண்டும்.
வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் காணி வீட்டுத்திட்டத்தில் கூட்டுறவு பணியாளர்களும் இணைக்கப்படல் வேண்டும். அரச ஊழியர்களுக்கு கிடைக்கும் விடுமுறை நாள்களும் கூட்டுறவு துறையினருக்கும் வழங்க ஆவன மேற்கொள்ள வேண்டும்.
வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்துக்கான தலைமைக் காரியாலயம் கிளிநொச்சியில் அமையவுள்ளதால் அதற்கான கட்டட நிதி உதவியை பெற்றுத்தர வேண்டும்.
தொழிற் சங்கத்தால் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கைகளை வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்- என்று கேட்கப்பட்டுள்ளது.
(ற-ஜ-17)

## வடக்கின் வசந்தம் திட்டத்தில் பாதிக்கப்பட்ட 21,165 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்குக

### மின்வலு அமைச்சரிடம் சிறீதரன் எம்.பி. கோரிக்கை

கிளிநொச்சி,ஏப்.25
கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தில் பாதிக்கப்பட்ட 21 ஆயிரத்து 165 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மின்வலு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலத்தில் வடக்கின் வசந்தம் இலவச மின்சாரம் வழங்கல் திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட பல மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படாததால் தற்போதும் மின் இணைப்பைப் பெற முடியாத நிலையில் மக்கள் இருண்ட வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.
எனவே இந்தக் குடும்பங்களுக்கும் இலவச மின்சார இணைப்பு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டியாவுக்கு எழுதிய கடிதத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.
அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
போரின் பின்னரான மீள்குடியேற்ற காலப்பகுதியில் அழிவுக்குள்ளான வாழ்வியலை மீளக் கட்டி எழுப்புகின்ற பணியாக சர்வதேச உதவியோடு வடக்கின் வசந்தம் திட்டம் நடைமுறை செய்யப்பட்டிருந்தது.
இந்தத் திட்டத்தின் ஊடாக இலவசமின்இணைப்புஎன்பதுசலுகை என்பதற்கு அப்பால் போரால் அழிவுக்குள்ளான மக்களின் மீள்குடியமர்வு உரிமையாகவே கருத வேண்டும். ஆனால் கடந்த ஆட்சிக்காலத்தில் வடக்கின் வசந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிகளவு அரசியல் தலையீடு, அதிகாரச் செல்வாக்கு ஆகியன பிரயோகப்படுத்தப்பட்டதால் மிக வறிய குடும்பங்களையும் தொலைதூரக் கிராமங்களையும் புறக்கணிக்கும் நிலை காணப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தின் 42 ஆயிரத்து 872 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளனர். இவர்களில் 21 ஆயிரத்து 707 பேருக்கு மாத்திரமே வடக்கின் வசந்தத்தின் மூலம் இலசவ இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கு வடக்கின் வசந்தம் திட்டம் செயல் இழந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் 21 ஆயிரத்து 165 குடும்பங்கள் இலவச மின் இணைப்புப் பெறும் மீள்குடியமர்வு உரிமையை இழந்துள்ளதுள்ளனர். இலவசமின்னிணைப்பைப் பெற்ற பலர் பொருளாதார ரீதியில் சற்று முன்னேற்றம் அடைந்தவர்களும், சமூக மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களுமாக உள்ளனர். ஆனால், மிக வறிய குடும்பங்கள் மாவட்டத்தின் தொலை தூரத்தில் உள்ள குக்கிராமங்களில் வாழுகின்ற வறிய மக்கள் அரசியல் ரீதியான பாகுபாட்டுக்கு உட்பட்டோர் இந்த மின் இணைப்பைப் பெறமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.
தற்போது மின்சார இணைப்பைப் பெறுவதற்கு கடன் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பயனாளிகள் மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணத்தையும், கடன் பணத்தையும் இணைத்துச் செலுத்த முடியாதவர்களாகவும், அவ்வாறு செலுத்த முடியாத நெருக்கடி ஏற்படும் போது மின்னிணைப்பு துண்டிக்கப்படக்கூடிய அவல நிலையும் ஏற்படும் சூழ்நிலையுள்ளது.
இது தொடர்பில் விரிவாக ஆராய்ந்து எமது மக்களின் வறிய நிலை, போரால் ஏற்பட்ட அழிவுகள் அரச மானியத் திட்டத்தில் ஒரு பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை என்பவற்றைக் கருத்தில் கொண்டு மீள்குடிமர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் இலவச மின்னிணைப்பு பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்தக் கடிதத்தின் பிரதிகள், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட பலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
(ற-ஜ-21,426)

## மல்லாவியில் 222 விவசாயிகளுக்கு ரூ. ஒரு மில். பெறுமதியான விதைகள்

### வடக்கு விவசாய அமைச்சு வழங்கியது

முல்லைத்தீவு, ஏப்.25
முல்லைத்தீவு, மல்லாவி பகுதியைச் சேர்ந்த 222 விவசாயிகளுக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய விதைகள் வடக்கு மாகாண விவசாய அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.
இந்த நிகழ்வு நேற்று முன்தினம் மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் விதைகளை வழங்கினார்.
வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து முல்லை



மாவட்டத்தின் விவசாய மேம்பாட்டுக்கென 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 27.67 மில்லியன் ரூபா நேரடியாக 2400 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்குவதற்கு என ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் இருந்தே முதற்கட்டமாக 222 விவசாயிகளுக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியில் விதைநெல், நிலக்கடலை, பயறு, உளுந்து போன்ற நடுகைப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.
இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வடமாகாணசபை உறுப்பினர்கள் வ.கமலேஸ்வரன், க.சிவநேசன் மற்றும் பதில் மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் ஆகியோருடன் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ற-ஜ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்து வீட்டுக்கான உத்தரவாதம் முப்பது ஆண்டுகளாக அதிகரிப்பு

## மீள்குடியேற்ற அமைச்சு திடீர் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.25
பொருத்து வீட்டுக்கான உத்தரவாதத்தை 30 ஆண்டுகளுக்கு அதனை அமைக்கும் நிறுவனம் வழங்குவதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் பொருத்து வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதனை பிரான்ஸைச் சேர்ந்த ஆர்செலர் மிட்டல் கட்டுமான நிறுவனம் முன்னெடுக்கவுள்ளது. இந்த வீட்டுத் திட்டத்துக்கு தமிழ் அரசியல் தரப்புக்கள் கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்தநிலையிலேயே, மீள்குடியேற்ற அமைச்சு மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

> வடக்கு – கிழக்கில் 65 ஆயிரம் பொருத்து வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதனை பிரான்ஸைச் சேர்ந்த ஆர்செலர் மிட்டல் கட்டுமான நிறுவனம் முன்னெடுக்கவுள்ளது. இந்த வீட்டுத் திட்டத்துக்கு தமிழ் அரசியல் தரப்புக்கள் கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்தநிலையிலேயே மீள்குடியேற்ற அமைச்சு மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சு இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்தக் கட்டுமானம் 60 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நீடிக்கக் கூடியது. இதனை அமைக்கும் நிறுவனம் 30 வருடங்களுக்கான உத்தரவாதத்தை வழங்குகின்றது.

இந்தக் கட்டுமானப் பணிகளுக்கான உள்ளூர் முகவர்கள் தொடர்பில் இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

65 ஆயிரம் வீடுகளும் 4 கட்டங்களாக அமைக்கப்படவுள்ளன. முதலாம் வருடத்தில் 11 ஆயிரம் வீடுகள், இரண்டாம் வருடத்தில் 18 ஆயிரம் வீடுகள், மூன்றாவது கட்டத்திலும் 18 ஆயிரம் வீடுகள், இறுதிக் கட்டத்திலும் 18 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டமானது மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன் வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனமானது ஏற்கனவே 30 வருட கால உத்தரவாதத்தை உறுதி செய்துள்ளது. 30 வருட உத்தரவாத காலப் பகுதியில் இந்த வீடுகள் ஏதேனும் பழுதுகள் ஏற்படின் அதனை இந்த நிறுவனத்தின் முகவர்கள் அவர்களது செலவில் செய்து முடிப்பார்கள்.

வடக்கு - கிழக்கில் வெப்பநிலை அதிகம். தற்போது சாதாரண வீடுகளிலும் இதனால் வெப்பம் அதிகமாகவே உள்ளது. ஆனால், இந்தப் பொருத்து வீடுகளில் வெளி வெப்பநிலையிலும் பார்க்க 3-5 பாகை செல்சியஸ் குறைவாகவே இருக்கும்.

அதேவேளை, இந்த வீட்டுத் திட்டம் தொடர்பில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் வெளியிட்ட அறிக்கை, பல்கலைக்கழக நிர்வாகத்தின் அனுமதியைப் பெற்றுச் செயற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்,ஏப்.25
இணுவில் மத்திய கல்லூரியின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் கல்லூரியின் மேற்பிரிவு மண்டபத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள தாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி)

## திருக்கல்யாணம்

யாழ்ப்பாணம்,ஏப்.25
நவாலி அட்டகிரி முருகன் ஆலயத்தின் 1008 சங்காபிசேக திருக்கல்யாண விஞ்ஞாபனம் மஹாகும்பாபிசேக தினமான எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும். அன்றைய தினம் 4 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும் என சங்காபிசேகக் குருக்கள் கா.தியாகராஜக் குருக்கள் அறிவித்துள்ளார்.(ற-ஐ-50)

## சிறுமி துஷ்பிரயோகம் இளைஞனுக்கு மறியல்

மன்னார்,ஏப்.25
மன்னாரில் பாடசாலை மாணவியான பதின்ம வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 21 வயது இளைஞரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த மாணவி மாலை நேர வகுப்புக்குச் சென்றபோது அந்தப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவர் அருகில் இருந்த பாழடைந்த வீட்டில் வைத்து துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து அவர் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை மன்னார் நீதிவானிடம் பொலிஸார் முற்படுத்தினர். அதன்போது எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-ஐ-21,56)



உலகின் முதல் தமிழ் பேராசிரியர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு அவர் பிறந்த காரைதீவு பிரதான வீதியில் உள்ள விபுலானந்த சதுக்கத்தில் அவரது திருவுருவச் சிலை கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சிலை திறப்பு விழா நிகழ்வில் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அம்பாறை மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரனும் விருந்தினராகக் கலந்து கொண்டார். (ற-ஐ-30)

## மன்னாரில் புத்தாண்டு விழா



மன்னார்,ஏப்.25
மன்னார் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், பொலிஸ் மற்றும் முப்படையினரின் ஏற்பட்டில் அரச சார்பாற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் மன்னாரில் தமிழ், சிங்கள புத்தாண்டு விழா சிறப்பாக இடம்பெற்றது.

தமிழ் - சிங்கள புத்தாண்டு விழா மன்னார் மாவட்டச் செயலகத்தின் திறந்த வெளி அரங்களில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

நேற்று முன்தினம் காலை வீதி ஓட்டப் போட்டிகள் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர சந்தியில் இருந்து மரதன் ஓட்டப்போட்டி இடம் பெற்றது.

அத்துடன் மன்னார் மாவட்டச் செயலகத்தின் திறந்த வெளி அரங்குகளில் முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, கிறீஸ்மரம் ஏறுதல், கிளித்தட்டு, கயிறு இழுத்தல், தேங்காய் துருவல், சங்கீத கதிரை, அழகுராணி போட்டி, பணிஸ் சாப்பிடுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம் பெற்றன.

மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற குறித்த நிழ்வில் விருந்தினர்களாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் மற்றும் மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல், மாவட்டச் செயலக அலுவலர்கள், பிரதேசச் செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஐ-56)

## வெள்ளத்தால் சேதமடைந்த வீதி இன்னமும் புனரமைக்கப்படவில்லை

சாவகச்சேரி,ஏப்.25
மறவன்புலோப் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் பெய்த பெருமழையின்போது வெள்ளம் வழிந்தோடுவதற்காக வெட்டப்பட்ட வீதி இன்னும் புனரமைக்கப்படாதுள்ளது. அந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மறவன்புலோ சால வைரவர் கோயிலுக்கு முன்பாக புனரமைக்கப்பட்ட வீதியில் வெள்ளம் வழிந்தோடக்கூடிய முறையில் அமைக்கப்படாததால், கடந்த வருட பிற்பகுதியில் பெய்த கடும் மழையால் வெள்ளம் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது. அதையடுத்து அயலில் உள்ள குடியிருப்புக்களுக்குள் வெள்ளம் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தியது. அப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மழை வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் வீதியை சிறிய அளவில் வெட்டி விட்டனர். இரவிரவாக வெள்ளம் வழிந்தோடியதில் அது மூன்று அடி ஆழமான குழியாக மாறியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டு சபையின் செயலாளர் உட்பட அதிகாரிகள் பார்வையிட்டு வாய்க்காலை மூடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துச் சென்றபோதும், இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

அதன்பின்னர் மக்கள் வெள்ளம் வடியும்வரை வேறு வீதிகளைப் பயன்படுத்தினர். வெள்ளம் வடிந்தபின்னர் கற்கள் மற்றும் மணலை இட்டு தற்காலிகமாக மூடி வீதியைத் தற்போது பயன்படுத்தி வருகின்றனர்.

சேதமடைந்து காணப்படும் இந்த வீதியில் வெள்ளம் வழிந்தோடக் கூடிய வகையில் சீரமைக்குமாறு அந்தப் பகுதியில் உள்ள பொது அமைப்புகள் கோரியுள்ள போதிலும், இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பிரதேச சபையுடன் தொடர்பு கொண்ட போது, சேதமடைந்து காணப்படும் வீதியைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக உரிய இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் வேலைகள் மேற்கொள்ளப்படும்- என்று தெரிவித்தனர். (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக, இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம் இழைத்தவர் கருணாநிதி

## தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.25
தமிழக தமிழர்களுக்கு மட்டுமல்லாது, இலங்கைத் தமிழர்களுக்கும் துரோகம் இழைத்தவர் கருணாநிதி. -இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா ஜெயராம் குற்றம் சுமத்தியுள்ளார்.
திருச்சியில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் தெரிவித்துள்ளதாவது:-
இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பல கபட நாடகங்களை ஆடி இலங்கைத் தமிழர்களுக்கு தி.மு.க. துரோகம் இழைத்தது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 2006 ஆம் ஆண்டு சட்ட பேரவைத் தேர்தல் அறிக்கையில் ஈழத் தமிழர்கள் அமைதி நிறைந்த நல்வாழ்வுரிமை பெறுவதற்கு வழிகாண உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தி.மு.க. வாக்குறுதி அளித்திருந்தது.
ஆனால், அவர்கள் செய்தது இதற்கு எதிர் மறையான செயல்களைத்தான். தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய ஆட்சி 2004 ஆம் ஆண்டு முதல் மத்தியில் நடைபெற்று வந்த போது, இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் போர்வையில் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.
இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், இதற்கு காங்கிரஸ் தலைமையிலான அரசு செவிசாய்க்கவில்லை எனில், மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை தி.மு.க. விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் - நான் அப்போது பலமுறை வலியுறுத்தினேன். ஆனால் எந்த நடவடிக்கையும் கருணாநிதி மேற்கொள்ளவில்லை.
சில மாதங்களுக்கு முன்பு, வடக்கு மாகாண சபை உறுப்பினரான அனந்தி சசிதரன், இறுதிப் போர் உச்சக்கட்டத்தில் இருந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி கருணாநிதியின் மகள் கனிமொழி, அனந்தியின் கணவர் சசிதரனுடன் செய்மதித் தொலைபேசியில் பேசினார் என்றும், அப்போது கனிமொழி, அவர்களை சரணடையுமாறும், அவர்களது விடுதலைக்குத் தாங்கள் உத்தரவாதம் தருவதாகவும் கூறியுள்ளார். அதை நம்பி சரண் அடைந்த ஈழத்தமிழர்கள் பலர் கொல்லப்பட்டனர் அல்லது காணாமற்போய் விட்டனர் என்ற மிகப்பெரிய குற்றச் சாட்டை கூறியுள்ளார்.
இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்லாது, இலங்கைத் தமிழர்களுக்கும் துரோகம் இழைத்தவர்தான் கருணாநிதி.



> இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பல கபட நாடகங்களை ஆடி இலங்கைத் தமிழர்களுக்கு தி.மு.க. துரோகம் இழைத்தது.

2011 இல் அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றப் பிறகு, இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும், இலங்கையை நட்பு நாடு என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும், இலங்கைப் போரின்போது போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் நிகழ்த்தியவர்கள் மீது சுதந்திரமான, சர்வதேச விசாரணை நடத்தி, தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் சட்ட பேரவையில் என்னால் முன்மொழியப்பட்டு, நிறை வேற்றப்பட்டுள்ளன.
இலங்கையில் நிலைமை சீரடைந்த பின்னரே இங்குள்ள தமிழர்களை விருப்பத்தின் பேரிலேயே திருப்பி அனுப்ப வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை.
இங்குள்ள இலங்கைத் தமிழர்கள் வேலை வாய்ப்புகளை எளிதில் பெறும் வகையில் அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்துவோம்.
மத்திய அரசில் அங்கம் வகித்தபோதே, ஈழத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குத் துணைபோன கருணாநிதி, இப்போதைய தேர்தல் அறிக்கையில் சர்வதேச விசாரணை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்தி செயற்படுத்த வேண்டும் என மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்தும் என்பதை நம்புவதற்குத் தமிழர்கள் ஏமாளிகள் அல்ல.- என்றார். (ற-ஜ-5)

## இரகசியமான வங்கிக் கணக்குகள் தொடர்பில் வெளிநாடுகளின் உதவி

### அமைச்சர் ராஜித சேனாரத்ன தகவல்

கொழும்பு, ஏப்.25
வெளிநாடுகளில் இலங்கையர்கள் வைத்திருக்கும் இரகசிய வங்கிக் கணக்குகள் தொடர்பான விசாரணைக்கு அமெரிக்கா மற்றும் இந்தியாவின் உதவிகளை இலங்கை அரசு கோரியுள்ளது.
இது தொடர்பாக அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளதாவது:-
முன்னைய ஆட்சிக் காலத்தில், சக்தி வாய்ந்த நபர்களாக இருந்தவர்கள் டுபாயில் வைத்துள்ள வங்கிக் கணக்குகள் குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
பனாமா ஆவணங்கள் வெளியாவதற்கு முன்னரே, அமெரிக்க மற்றும் இந்திய மத்திய வங்கிகளிடம் உதவி கோரப்பட்டுள்ளன- என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

## அமெ. கடற்படைத் தளபதி இலங்கைக்கு திடீர் வருகை

கொழும்பு,ஏப்.25
அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் கட்டளைப் பீடத்தின், சிறப்பு நடவடிக்கைக் கட்டளைப் பணியகத்தின் தளபதி, இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.
இலங்கை வந்துள்ள, அமெரிக்க கடற்படையின் பசுபிக் கட்டளைப் பீடத்தின், சிறப்பு நடவடிக்கைக் கட்டளைப் பணியகத்தின் தளபதியான, ரியர் அட்மிரல் கொலின் கில்ரெய்ன், இலங்கை கடற்படைத் தளபதி, வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவைச் சந்தித் துப் பேச்சு நடத்தியுள்ளார். கடற்படைத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர், லெப்.கேணல் றொபேட் றொஸ் உள்ளிட்ட, நான்கு பேர் கொண்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழுவும், கலந்து கொண்டது.
இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் பேசப்பட்டுள்ளன.
அண்மைக்காலமாக, இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் நெருக்கமடைந்திருப்பதுடன், கடற்படையினருக்கான பயிற்சிகளையும் அமெரிக்க கடற்படை வழங்க ஆரம்பித்துள்ளது. (ற-ஜ-5)

## 27 இல் நாடு திரும்புகிறார் மகிந்த முக்கிய சந்திப்புகளுக்கு ஏற்பாடு!

கொழும்பு, ஏப்.25
தாய்லாந்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எதிர்வரும் 27 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். நாடு திரும்பியதும் முக்கிய அரசியல் சந்திப்புக்களில் அவர் ஈடுபடுவதற்குரிய ஏற்பாடுகள் பொது எதிரணியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அதன்படி மே தினப் பேரணியில் கலந்து கொள்ளும் தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல் தலைவர்களுடன் பேச்சு நடத்தி, மேதினத்துக்குரிய யோசனைத் திட்டமொன்றை தயாரிப்பதற்குரிய ஆலோசனைகளையும் அவர் பெறவுள்ளார் என அறிய முடிகிறது.
குறித்த பிரகடனம் மே முதலாம் திகதி வெளியிடப்படும் என பொது எதிரணி வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.
அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி காலியில் ஏற்பாடு செய்துள்ள மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை மகிந்த ஏற்கவில்லை என்று தெரியவருகிறது. இதற்கான காரணத்தை விளக்கி அவர் கட்சியின் தலைவருக்கும், பொதுச்செயலாளருக்கும் கடிதம் அனுப்பவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-5)

## தீவிரவாதிகளின் கருத்து குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை

### *வட மாகாண சபை சமஷ்டி பிரேரணை குறித்து லக்ஷ்மன் கிரியெல்ல கருத்து*



கொழும்பு, ஏப்.25
சகல சமூகத்திலும் தீவிரவாதிகள் உள்ளனர். எல்லா சமூகத்திலும் 95 வீதமானவர்கள் சாதாரண எண்ணம் படைத்தவர்களே. அதனால், தீவிரவாதிகளின் கருத்துக்களுக்காக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.- இவ்வாறு உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு விட்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வட மாகாணத்தில் நிறைவேற்றப்பட்ட சமஷ்டி பிரேரணை நிகழ்வும் தீவிரவாதிகளினால் முன்னெடுக்கப்பட்ட ஒன்றாகும். இதனை ஊடகங்கள் ஊதிப் பெருப்பிக்க வேண்டாம்.
சிங்கள தீவிரவாதிகளும், முஸ்லிம் தீவிரவாதிகளும், தமிழ் தீவிரவாதிகளும் உள்ளனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ற-ஜ-5)

# சிறிலங்கன் எயார் லைன்ஸை தனியாரிடம் ஒப்படைக்க முடிவு!

## 15 ஆயிரம் கோடி ரூபா கடனை அரசு ஏற்குமாம்

கொழும்பு, ஏப்.25
சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் செலுத்த வேண்டியிருக்கும் 15 ஆயிரம் கோடி ரூபாவை அரசு பொறுப்பேற்றுக் கொண்டு, அந்த நிறுவனத்தின் நிர்வாகத்தைத் தனியார் துறையிடம் ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை தனியார் துறையிடம் ஒப்படைக்க ஏற்கனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், இந்தப் பெருந்தொகைக் கடனுடன் அந்த நிறுவனத்தைப் பொறுப்பேற்க தனியார் துறை [illegible] வில்லை. என [illegible] ஏற்றுக்கொண்டு அந்நிறுவனத்தைத் தனியாரிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட பல நிறுவனங்களுக்கு 15 ஆயிரம் கோடி [illegible] கடன் நிலுவையாக [illegible] அத்துடன், புதிய விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெரும் தொகையொன்று கடனாகப் பெறப்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்த நிறுவனத்தை அரசு தொடர்ந்தும் நிர்வகிக்க முடியாது என்பதால், செலுத்த வேண்டிய கடன்களைப் பொறுப்பேற்றுக் கொண்டு அதன் நிர்வாகத்தைத் தனியார் துறையிடம் ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற-ஜ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொது எதிரணிக்கு சுஜித் புஷ்பகுமார சவால்

கொழும்பு, ஏப்.25

கூட்டு எதிர்க் கட்சியின் கிருலப்பனை மே தினக் கூட்டத்தில் 99 சதவீதமான உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டால், மொரட்டுவ மா நகர சபையின் முன்னால், தூக்கில் தொங்கி உயிரை விடுவேன் என்று மொரட்டுவ மா நகர சபையின் தலைவர் சுஜித் புஷ்ப குமார சவால் விடுத்துள்ளார்.

வட மேல் மாகாண சபையின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களின் ஒன்றியம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள மகிந்த ராஜபக்சவின் அரசியல் காரியாலயத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது 99 வீதமானவர்கள் கிருலப்பனைக் கூட்டத்தில் கலந்து கொள்வர் என்று தெரிவித்திருந்தார்.

இதற்குப்பதிலளிக்கையிலேயே மொரட்டுவ மாநகர சபையின் தலைவர் இந்தச் சவாலை விடுத்துள்ளார். (ந-ஐ-5)

# உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பை அரசு உடன் அறிவிக்க வேண்டும்

### வலியுறுத்துகின்றார் பசில் ராஜபக்ச



கொழும்பு, ஏப்.25

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான அறிவிப்பை அரசு உடன் அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் முன்னாள் பொருளாதார அமைச்சரான பசில் ராஜபக்ச.

மகிந்த ஆதரவு அணியைச் சேர்ந்த முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

> அரசு உள்ளூராட்சி சபைத் தேர்தலை அறிவிக்க வேண்டும். அப்போது எமது வெற்றிக்கான எமது விளையாட்டுகளை – வியூகங்களை காட்டுவோம் – என்றார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

பொது எதிரணி எழுச்சி பெற்று வருகிறது. இந்த நிலையில், அரசு உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அறிவிக்க வேண்டும். அப்போது எமது வெற்றிக்கான எமது விளையாட்டுகளை – வியூகங்களை காட்டுவோம் – என்றார்.

அதேவேளை, ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பதத்தைக்காட்டி எம்மை மிரட்டமுடியாது. பொது எதிரணியின் மேதினக் கூட்டத்திலேயே கலந்து கொள்வோம். இதற்கு மக்கள் வெள்ளமும் அணிதிரளும்.

தாஜுதீன் விவகாரத்தை மீளக் கிளறுகின்றனர். இது விடயத்தில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் போலியானவை. சவால்களுக்கு முகங்கொடுப்போம் – என்றார். (ந-ஐ-5)

## முன்னாள் ஜனாதிபதிக்கு முப்பது பேரே பாதுகாப்பு

கொழும்பு, ஏப்.25

ஓய்வு பெற்றுக் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் பாதுகாப்புக்காக உச்ச அளவில் 30 பாதுகாப்பு உத்தியோகத்தர்களே வழங்கப்பட முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தகவலை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

ஓய்வு பெற்றுக் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் பாதுகாப்புக்கு எத்தனை பாதுகாப்பு உத்தியோகத்தர்களைக் கடமையில் ஈடுபடுத்துவது என்பது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நீதிமன்றில் தீர்ப்பு ஒன்றை பெற்றுக் கொண்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் பாதுகாப்பை வரையறுக்கும் வகையிலான நீதிமன்றின் தீர்ப்பை அவர் கேட்டுப் பெறவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தமக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இதன் போதே முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு வழங்கப்படக் கூடிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உச்ச வரம்பை நீதிமன்றம் நிர்ணயம் செய்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அரசின் பாதுகாப்பை பெற்றுக்கொண்டு தொடர்ந்தும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால், பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு இராணுவத்தினர் உள்ளிட்ட நூற்றுக் கணக்கானவர்கள் தற்போது பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். (ந-ஐ-5)

# இலங்கையின் அவசர அறிவிப்பால் ஐரோப்பிய ஒன்றியம் கடும் விசனம்

கொழும்பு, ஏப்.25

இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த மீன் ஏற்றுமதித் தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியுள்ளது என்று இலங்கை அரசு அவசரப்பட்டு அறிவிப்பை வெளியிட்டமை குறித்து, ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையிடம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக, பிரசெல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின், கடல்சார் விவகாரங்கள் மற்றும் மீன்பிடி தொடர்பான, பணிப்பாளர் நாயகம், இலங்கை அரசிடம் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்னதாக, மீன் ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டு விட்டது என்று கடற்றொழில் அமைச்சு எவ்வாறு அறிவித்தது என்று அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி தொடக்கம் மீன் ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சுக்கு, ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது என கடற்றொழில் அமைச்சு வெளியிட்டிருந்த அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது.

பின்னர், கடற்றொழில் அமைச்சு வெளியிட்ட இன்னொரு அறிக்கையில், இலங்கை மீதான மீன் ஏற்றுமதித்தடையை விலக்குவது குறித்து ஏப்ரல் 21 ஆம் திகதி முடிவெடுக்கப்படவுள்ளது என்று கூறப்பட்டிருந்தது.

மூன்றாவதாக வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில், ஊடகங்கள் அடிப்படையற்ற தகவல்களை வெளியிட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சிடம், பிரதமர் செயலகம் கேள்வி எழுப்பியுள்ளது.

இதனிடையே, 28 நாடுகளின் அமைச்சர்கள் அங்கம் வகிக்கும், ஐரோப்பிய ஒன்றிய அமைச்சரவையின் அனுமதி கிடைத்த பின்னரே, இலங்கை மீதான மீன் ஏற்றுமதித் தடை நீக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஆணையம் கடந்த வாரம், மீன் ஏற்றுமதித் தடையை நீக்குவதற்குப் பரிந்துரைத்துள்ளது.

இரண்டு மூன்று மாதங்களில், இந்தப் பரிந்துரை தொடர்பாக, ஐரோப்பிய ஒன்றியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பின்னரே இதுபற்றிய முடிவு அறிவிக்கப்படவுள்ளது. (ந-ஐ-5)

# பௌத்த சிந்தனைகளுக்கு அமைவாக வாழ்வைச் சீர்படுத்திக் கொள்வோம்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.25

மதத்தைப் பேணி வாழ்பவர் மதத்தின் மூலம் பாதுகாப்புப் பெறுகின்றார் என்று குறிப்பிடப்படும் புத்தரின் நற்போதனையை எந்நேரமும் நினைவில் நிறுத்தி பௌத்த சிந்தனைக்கு அமைவாக வாழ்வைச் சீர்செய்து கொள்வதற்கு அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் – இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் மிக உயர்ந்த புத்தர் சிலையைத் திறக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

135 அடி உயரம் கொண்ட இந்தப் புத்தர் சிலையானது மாகாண சபை உறுப்பினர் ஜகத் பின்னகொடவின் தனிப்பட்ட நிதி அன்பளிப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

புத்தர் சிலைக்கான முதலாவது மலர் பூஜை வழிபாட்டை மேற்கொண்டு பொதுமக்கள் வழிபாட்டுக்காக திறந்து வைக்கும் நிகழ்வு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

பௌத்த சிந்தனையின் அடிப்படையிலேயே இன்று சிறந்ததொரு சமூகத்துக்கான அத்திபாரம் இடப்படுகின்றது. அதன் பெறுமதியை நன்கு உணர்ந்த தன் காரணமாகவே இன்று உலகில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் கூட பௌத்த மதத்தை நாடும் நிலைமை உருவாகியுள்ளது.

மதத்தைப் பேணி வாழ்பவர் மதத்தின் மூலம் பாதுகாப்புப் பெறுவதாகக் குறிப்பிடப்படும் புத்தரின் நற்போதனையை எந்த நேரமும் நினைவில் நிறுத்தி பௌத்த சிந்தனைக்கு அமைவாக வாழ்வைச் சீர்செய்து கொள்வதற்கு நாம் அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.– என்றார்.

பட்டமுல்லகந்த பௌத்த மத்திய நிலைய வளவில் ஜனாதிபதியால் நாக மரக்கன்று நடப்பட்டது.

ராமன்ய நிக்காயாவின் மகா நாயக்கர் அக்கமகா பண்டிதர் சங்கைக்குரிய நாபானே பிரேமசிறி நாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, அர்ஜுன ரணதுங்க, மேல்மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய ஆகியோரும் பிரதேச அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தொகையான பொதுமக்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ந-ஐ-5)

# சமஷ்டி அதிகார பகிர்வுக்கு தேசிய காங்கிரஸ் எதிர்ப்பு

கொழும்பு,ஏப்.25

வடக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட வடக்கு – கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பிலான தீர்மானத்துக்கு தேசிய காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வடக்கு – கிழக்கு இணைப்புக் குறித்த வட மாகாண சபையின் தீர்மானம் ஒரு தலைப்பட்சமானது என தேசியக் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் உதுமா லெப்பை தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று நகரில் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏ.எல். அதாவுலா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் வடக்கு – கிழக்கு இணைப்புக்கு எதிரான தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தலைவர் உதுமா லெப்பை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம்களும் தமிழர்களைப் போன்று தனித்துவமான தேசிய இனம் என்பதை மறந்து தமிழ் அரசியல் தலைமைகள் நடந்து கொள்கின்றன. அதிகாரப் பகிர்வில், தமிழர் தரப்பு முஸ்லிம்கள் தொடர்பாக தனித்துத் தீர்மானங்களை எடுப்பது, ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவ்வாறு இரு மாகாணங்களும் இணைக்கப்படுமாயின், சம அந்தஸ்துடையதாக தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாகாணமும் அதேபோல் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாகாணமும் அமையக் கூடியதாக மாகாண எல்லைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புதிய பொலிஸ்மா அதிபர் பூஜிதவின் மக்கள் நலத்திட்டங்கள்

**பொ**லிஸ் சேவை என்பது ஏனைய ஆயுத மற்றும் சீருடைப் பிரிவுகள் போன்று அல்லாமல் பொதுமக்கள் மத்தியில் இருந்து கொண்டே பொதுமக்களுக்காகப் பணி புரியும் ஓர் அமைப்பாகும். எனவே பொது மக்களுக்கும் பொலிஸ் சேவையாளர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பும் உறவும் நிலவுவது அவசியமாகின்றது. ஆனால் பல சந்தர்ப்பங்களில் பொலிஸ் என்றாலே பொதுமக்கள் அச்சமும் அங்கலாய்ப்பும் கொள்ளும் நிலைமை காணப்படுவதுண்டு. அதைவிட சிலபல சந்தர்ப்பங்களில் திருடர்கள், போக்கிரிகள் மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு பொலிஸாரிடம் இருக்கும் செல்வாக்கு சட்டத்தை மதித்து நற்குடி மக்களாக வாழ்பவர்களுக்கு இருப்பதில்லை என்பது பொதுவானதொரு குற்றச்சாட்டு.

பொலிஸாருக்கு வழங்கப்படும் சீருடைகளும் அவைகளுடன் கூடிய அடையாளங்களும்கூட அவர்கள் நாட்டின் சட்ட ஒழுங்கு விதிகளைப் பராமரிப்பவர்கள், அவைகளை நடைமுறைப்படுத்துபவர்கள் என்பதையே குறிப்பவையாகும். அவசியமில்லாத வேளைகளில் அவர்கள் ஆயுதங்கள் தரிப்பதும் தவிர்க்கப்படுகின்றது. துரதிர்ஷ்டவசமாக நாட்டில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்த போரும் அதனோடு ஏற்பட்ட சமூக சீர்குலைவுகளும் நாட்டின் சமூக அமைப்பிலும் நடைமுறைகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டன. போதாக்குறைக்கு போரையடுத்து நாட்டில் அமைந்த ஆட்சியும் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட லஞ்ச, ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் முதலியவையும் நாட்டை அல்லோல கல்லோலப்படுத்திவிட்டன.

இந்த நிலைமையில் உருவான மைத்திரி-ரணில் நல்லாட்சியினர் இவ்வாறு சீர்குலைந்துபோன துறைகளில் எல்லாம் படிப்படியாக சீர்திருத்தங்களை-பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் முன்னகர்த்தி வருகிறார்கள். அவ்வாறான ஒரு நடவடிக்கையே பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கமும் அதன் பரிந்துரையில் இன்று நாட்டின் 34 ஆவது பொலிஸ்மா அதிபர் பதவியில் பூஜித ஜயசுந்தர அமர்ந்திருப்பதும் எனலாம்.

புதிய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர பதவி ஏற்றகையோடு வெளியிட்டுள்ள அவரது எதிர்காலத் திட்டங்கள் நம்பிக்கை அளிப்பவையாகக் காணப்படுகின்றன.

பொலிஸ் விசாரணை முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் விசாரணை அதிகாரிகளுக்கு மேலதிக அறிவை வழங்க விரும்புகிறார் அவர். போதைப் பொருள் பாவனை மற்றும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த விசேட திட்டங்களைத் தாம் நடைமுறைக்குக் கொண்டு வரப்போவதாக புதிய ஐ.ஜி.பி. தெரிவித்துள்ளார்.

கோடிக்கணக்கான மதிப்பீட்டில் போதைப் பொருள்கள் அவ்வப்போது நாட்டின் பல பகுதிகளிலும் பிடிபடுவது பற்றிய செய்திகள் தினமும் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளை ஒரு தேசியத் தொழில்போல் பெரும்பகுதியினர் கைக்கொண்டிருப்பது ஒருபுறமிருக்க, இவைகளுக்கு பின்னணியில் பெரும் புள்ளிகளும் அரசியல்வாதிகளும் இருந்து வருவதாகவும் கூறப்படுகின்றது. போதைப் பொருளுக்கு எம் எதிர்காலச் சந்ததியினர் இலக்காகி நாசமாகிப் போகிறார்கள். பாடசாலை மாணவர்களும்கூட இதற்கு அடிமையாகிறார்கள். அவர்களை இலக்கு வைத்தே போதைப்பொருள் விற்பனையும் சிலரால் முன்னெடுக்கப்படுகிறது. உண்மையில் தேசத்தின் சாபக்கேடாக இருக்கும் போதைப் பொருள் பாவனையை புதிய பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்து ஒழித்துக் காட்டுவாரானால் நிச்சயம் வரலாற்றில் இடம்பிடிப்பார் என்று கூறத்தேவையில்லை. வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவது அவரது திட்டங்களில் இன்னுமொன்றாகும். நாட்டின் நெடும் பாதைகள் அனைத்தும் இப்பொழுது சீரமைக்கப்பட்டிருந்தாலும், வீதி விபத்துக்கள் அதிகரிப்பது குறையவில்லை. பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் போக்குவரத்து விதிகளை முறையாகக் கடைப்பிடித்தால் இலகுவில் இவைகளைக் குறைக்க முடியும் என்பது புதிய பொலிஸ்மா அதிபரின் கருத்து.

இதேபோல் வேறு நாட்டுக்கு அவசியமான திட்டங்களையும் அவர் தம்வசம் வைத்திருக்கிறார். குறிப்பாக பொலிஸ், பொதுமக்கள் உறவை மேலும் வலுப்படுத்த நாடு முழுவதும் நடமாடும் பொலிஸ் சேவைகளை அவர் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கின்றார். இன்னொரு முக்கிய விடயம் பொலிஸ் சேவகர்களின் ஒழுக்கம் தொடர்பானது. இதில் தாம் மிகக் கண்டிப்பாக இருக்கப்போவதாகத் தெரிவித்துள்ள புதிய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, தவறுவிடும்பொலிஸாருக்கு மன்னிப்பு என்பதே இருக்காது என்றும் உறுதியாகக் கூறியுள்ளார். இவ்வாறு இன்னும் பல முக்கிய பணிகளைச் செயற்படுத்தத் திட்டம் வைத்துள்ள புதிய பொலிஸ்மா அதிபருக்கு வெற்றி கிடைக்க வேண்டும். பொதுமக்கள் நிச்சயம் அவரது நற்பணிகளின் வெற்றிக்கு காத்திரமாக உதவுவார்கள் என்று கூறத்தேவையில்லை.

# நாடு இணைந்திருக்க வேண்டுமாயின்
# சமஷ்டியே தீர்வு

வந்தியத்தேவர்

**வி**ரைவில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாவிடில் மீண்டும் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி தலை தூக்கும். எனவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியது அவசியம் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார். தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி அரசே பிரச்சினைக்குத் தீர்வு காணப் பொருத்தமானது என நீண்ட காலமாகவே தெரிவித்து வந்த போதும் சமஷ்டி ஆட்சிக்கு சிங்கள இனவாதிகள் தயாராகவே இல்லை. சமஷ்டி தனிநாட்டுக்கு வழிவகுக்கும் என்ற மூடக் கொள்கையை தென்பகுதியில் விதைத்து சமஷ்டிக்கு எதிராக அவர்கள் மக்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டார நாயக்க இலங்கையில் மூன்று சமஷ்டி அரசமைப்பு முறையை உருவாக்குவதே சிறந்தது எனக் குறிப்பிட்டிருந்தார். வடக்கும்-கிழக்கும் இணைந்தது ஒன்றாகவும் தென் பகுதிக்கு ஒன்றாகவும் மேல் மாகாணப் பகுதிகளுக்கு ஒன்றாகவும் இவை அமையலாம் என்பது அவரது கருத்தாக இருந்தது. இதன் நியாயபூர்வத்தை அவர் உணர்ந்தும் ஏற்றுக்கொண்டும் இருந்தமை சிங்களத் தலைவர்களால் மறுக்க முடியாத ஒன்று. பின்னாளில் அவரது பதவி ஆசை தனது கருத்தையே ஏற்றுக்கொள்ள முடியாமல் செய்துள்ளது. வடக்கு மாகாண சபை தனது தீர்மானத்தில் தனிமொழிப் பிராந்தியங்களை உருவாக்குவதன் மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை தெரிவித்துள்ளது. பண்டார நாயக்க மூன்று சமஷ்டி மண்டலங்களை அமைக்கலாம்-என்றார். வடக்கு மாகாண சபை இரண்டு மண்டலங்களை அமைக்கலாம் என்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கும்-கிழக்கும் அமைந்த சமஷ்டி அரசைக் கோரியுள்ளது. தமிழ் மக்களின் இந்தக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. எனினும் அரசு ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு என்றும் புதிய அரசமைப்பில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கலாம். இதற்கான வேலைத் திட்டங்கள் நேர்மையாக இடம் பெறுகின்றது என்றும் கூறிக் கொண்டிருக்கிறது. காலம் காலமாக தமிழர்களை ஏமாற்றி வந்த சிங்கள அரசுகள் நல்லாட்சி என்ற பெயரிலும் தமிழர்களை ஏமாற்றவே முனைகிறது.

### புறந்தள்ளப்படும் மனச்சாட்சி

தமிழ் மக்கள் விடயத்தில் இலங்கை அரசு இன்னமும்கூட நீதி நியாயங்களையும் மனச்சாட்சியையும் புறந்தள்ளிக் கொண்டே இருக்கிறது என்ற உண்மையை உதறித்தள்ள முடியாது. ஆட்சி மாற்றத்தின் பின்னரும்கூட மக்கள் வெளிநாடுகளில் தஞ்சமடையவே நினைக்கிறார்கள். சுவிஸ் நாட்டில் அடைக்கலம் கோரிப் பெரும்பாலான விண்ணப்பங்கள் குவிவதாக அந்த நாட்டுக் குடியேற்றச் செயலகம் கூறியுள்ளது. போரின்போதும் அதன் பின்னரும் குற்றமிழைத்தவர்கள் தப்பிக் கொள்ளும் நிலை இன்னமும் தொடர்வதாக அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் குறிப்பிடுகின்றது. சிவில் செயற்பாட்டாளர்கள் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுவதாகவும் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகள் இன்னமும் பிரச்சினையாகவே உள்ளது என்பதும் இராஜாங்கத் திணைக்களத்தின் கருத்து. மொத்தத்தில் சிங்கள அரசியல் தலைமைகளின் கருத்தும் நோக்கமும் தமிழ் மக்களுக்கு மாறானதாகவே இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் ராஜித சேனாரத்ன சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதே நாட்டின் ஒற்றுமையை ஏற்படுத்தும்-என்கிறார். சமஷ்டி விடயத்தில் அரசுக்குள்ளும் முரண்பாடுகள் இருப்பதால் கிளர்ச்சி மீண்டும் தலைதூக்க வாய்ப்பு இருக்கலாம் என்னும் ஜனாதிபதி மைத்திரியின் கருத்தை ஆட்சியாளர் கவனத்தில் எடுத்தேயாக வேண்டும்.


> சமஷ்டி தனி நாட்டுக்கு வழிவகுக்கும் என்ற மூடக் கொள்கையை தென்பகுதியில் விதைத்து சமஷ்டிக்கு எதிராக அவர்கள் மக்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நல்லிணக்கத்தை அடைய இலங்கை அரசு முன்னெடுத்து வரும் முயற்சிகளைப் பாராட்ட வேண்டும் என ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி சொல்லியுள்ள இந்தத் தருணத்தில் வடக்கில் புலி ஆதிக்கம் தலைதூக்கியுள்ளதாகவும், வட மாகாண முதல்வர் பலமான பிரிவினையை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் புலி அச்சுறுத்தல் இல்லை எனவும் என உளறும் விமல் வீரவன்ச மீண்டும் ஆயுதப் புரட்சி ஏற்படும். மக்கள் அதனைத் தடுக்கத் தம்முடன் இணையுமாறும்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரச்சினை தீராவிடின் ஆயுதக் கிளர்ச்சி ஏற்படலாம் என ஜனாதிபதி அச்சம் தெரிவிக்க பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஆயுதப் புரட்சியைத் தோற்றுவிக்கும் என்று விமல் கூறுவது போலுள்ளது அவரது கூற்று.

### எதிரணியின் தவறான கருத்து

தமிழ்த் தலைமைகள் பிரிவினை குறித்து எந்தக் கருத்தையும் முன்வைக்காத நிலையில் எதிரணியினர் பிரிவினை தேவை என்ற வகையில் தமது கருத்துக்களைக் கூறுகின்றனர். நாட்டைப் பிரிக்கும் முயற்சியில் வடமாகாண சபை இயங்குவதாகக் கூறும் கெஹலிய ரம்புக்வெல வடக்கில் இராணுவப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்கிறார். தற்போதைய தமிழ்த் தலைமைகள் கோராத பிரிவினையை எதிரணியினர் தமது பேச்சுக்கள், அறிக்கைகளூடாக வற்புறுத்திக் கொண்டே வருகிறார்கள். நாட்டின் தலைமைக்குத் தகுதியானவன் காட்சிக்கு எளியனாகவும் கடுஞ்சொற்களற்றவனாகவும் இருத்தல் வேண்டும் என்பதே தர்மத்தின் நிலைப்பாடு. பிரிவினை தேவை என்பதாலேயே சிங்கள இனவாத அரசியல் தலைமைகள் தமிழ் மக்கள் மீது சீறிச் சினக்கின்றன. தென்பகுதி மக்களுக்குத் தனிநாடுதான் தேவை என்றால், அவர்கள் அந்நியர்கள் ஆதிக்கத்துக்கு முன்னர், இருந்த நிலைகளுக்குத் திரும்பிக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான தனிநாட்டைத் தமிழர்கள் மனப்பூர்வமாக வழங்கத் தயார் என்பதை சிங்கள இனவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டில்ஒற்றுமையும்ஐக்கியமும்தேவை என்பதை சிங்களத் தலைமைகள் ஏற்றுக்கொண்டால் தமிழர்கள் கூறும் சமஷ்டிக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டியது தென்பகுதியில் உள்ள ஒவ்வொருவரதும் கடமையுமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# புதிய அரசமைப்பின் உருவாக்கம்

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து இந்த அரசால்மேற்கொள்ளப்பட்டு வரும்நல்லபலவேலைத் திட்டங்களுள் முக்கியமானதாக புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பான நடவடிக்கைகளைக் குறிப்பிட முடியும். சிறுபான்மை இன மக்கள் சில அடிப்படைப் பிரச்சினைகளை அனுபவிக்கின்றமைக்கும் இந்த நாட்டின் முன்னேற்றப் பாதையில் சில தடைகள் ஏற்பட்டிருக்கின்றமைக்கும் நாட்டில் இப்போது நடைமுறையில் இருக்கின்ற அரசமைப்பில் உள்ள சில விடயங்கள்தான் காரணம்.

இந்த அரசமைப்பு உருவாக்கப்பட்டு 38 வருடங்கள் ஆகின்றன. அப்போது இந்த நாட்டுக்கு இது பொருத்தமானதாக இருந்திருக்கும். ஆனால், கால ஓட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட பல மாற்றங்கள் – பல பிரச்சினைகள் காரணமாக இந்த அரசமைப்பு நாட்டுக்குப் பொருத்தமற்றதாக – வலுவிழந்ததாகக் காணப்படுகின்றது என்றே சொல்ல வேண்டும்.



**நாட்டைச் சீரழிக்க போர்**

சுமார் 30 வருடங்களாக இந்த நாட்டைச் சீரழித்து முடிவுக்கு வந்திருக்கின்ற போர் புதிய அரசமைப்பின் தேவையை முக்கியமாக உணர்த்துகின்றது. அந்தப் போரால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வை முன்வைப்பதற்கான சரியான ஏற்பாடுகள் இப்போதைய அரசமைப்பில் இல்லாமைதான் புதிய அரசமைப்பின் தேவையை வேண்டி நிற்கின்றது.

குறிப்பாக, அந்தப் போரில் வடக்கு - கிழக்கு தமிழர்களும் இலங்கை அரசுகளும் நேரடியாக மோதி பாதிப்புக்களை எதிர்கொண்ட போதிலும்,எந்தவிதத்திலும் போருடன் தொடர்புபடாத ஏனைய இனங்களையும் அந்தப் போர் பாதித்தது என்பதை மறுக்க முடியாது. வடக்கில் முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக விரட்டியடிக்கப்பட்டமைக்கும் கிழக்கில் அவர்களின் உயிர்கள் மற்றும் சொத்துக்கள் இழப்பை எதிர்கொண்ட மைக்கும் அடிப்படைக் காரணம் இந்தப் போர்தான்.

இவற்றுக்கெல்லாம் எவர் காரணம் என்று இப்போது விவாதிப்பதை விட்டுவிட்டு பாதிப்புகளுக்கு என்ன தீர்வு தேவை என்று விவாதிப்பதுதான் - அதற்கானதேடலைமுடுக்கிவிடுவதுதான் புத்திசாலித்தனமான நகர்வாக இருக்கும். இது இன முறுகல் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும்.

மேலும், போரால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்கு மாத்திரம் தீர்வை முன்வைப்பதற்காக புதிய அரசமைப்புத் தேவைப்படவில்லை; போருக்கு அப்பால் வேறு வேறு காரணங்களால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வாகவும் புதிய அரசமைப்பு தேவைப்படுகின்றது.

போருக்கு அப்பாற்பட்ட பல பிரச்சினைகளை தமிழ் - முஸ்லிம் மக்கள் அனுபவித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கிழக்கில் சுனாமி இடரால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்டு இன்னும் வழங்கப்படாமல் இருக்கும் நுரைச்சோலை வீடமைப்புத் திட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகக் குறிப்பிடலாம்.

இவற்றைத் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளாகமுத்திரைகுத்திதொடர்ந்தும் வைத்துக் கொண்டு இருக்காமல், இத்தோடு முடிவுக்குக் கொண்டு வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இப்போதைய அரசால் இவற்றைத் தீர்க்க முடியாது விட்டால் வேறு எந்த அரசாலும் இவற்றைத் தீர்க்க முடியாது என்ற உண்மையை நாம் உணர வேண்டும்.

இந்த உண்மையைக் கருத்தில் கொண்டு தான் இந்த நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளும் இந்த வருடத்துக்குள் தீர்க்கப்பட்டு விடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறி இருக்கின்றார் எனத் எண்ணத் தோன்றுகின்றது. அந்த நோக்கின் அடிப்படையில்தான் புதிய அரசமைப்பை அரசு உருவாக்க முயற்சி செய்கின்றது எனலாம்.

**தமிழர்களின் பிரச்சினைகள் என்ன**

ஆனால், தமிழர்களின் பிரச்சினைகள் எப்படிப்பட்டவை? அவற்றுக்கு எவ்வாறான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்? ஆகிய கேள்விகளுக்கான யோசனைகளை தமிழர்கள் புதிய அரசமைப்பு தொடர்பாக மக்கள் கருத்துக்களைத் திரட்டும் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர். அந்தக் கருத்துக்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஆய்வுசெய்து பார்த்தால் தமிழர்கள் எவ்வாறான தீர்வுகளை வேண்டி நிற்கின்றார்கள் என்பதை அரசால் மிக இலகுவில் விளங்கிக்கொள்ள முடியும்.

இதேவேளை- வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால் அவர்களின் ஒட்டுமொத்த பிரச்சினைகள் என்ன? அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சரியான தீர்வு என்ன? என்பதை அரசால் முழுமையாகவிளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்காது. புதிய அரசமைப்பு தொடர்பாக மக்கள் கருத்துக்களைத் திரட்டும் குழுவின் முன்தோன்றி கருத்துக்களை முன் வைத்த முஸ்லிம்களின் எண்ணிக் கையை எடுத்துப் பார்த்தால் இதை இலகுவாக சொல்லலாம்.

இந்தக் குழு மட்டக்களப்பு மாவட்டத்தில் கருத்துக்களைத் திரட்டியபோது தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டு அவர்களது கருத்துக்களை முன்வைத்தனர். ஆனால், முஸ்லிம்கள் சார்பில் வெறும் பத்து, பதினைந்து பேரே அதில் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்தனர். இவ்வாறுதான் எல்லா அமர்வுகளிலும்.

**அக்கறையில்லாத முஸ்லிம் தலைமைகள்**

இந்த விடயத்தில் முஸ்லிம்களின் அரசியல் தலைமைகளும் போதியளவு அக்கறை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இவ்வாறனதொரு நிலையில் – முஸ்லிம்களின் பிரச்சினைகளை முஸ்லிம்களே மூடி மறைகின்ற நிலையில் – புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் அப்போது முஸ்லிம்கள் வருந்த வேண்டிவரும். தாம் அலட்சியமாக இருந்துவிட்டு வேறு இனங்களை தேவை இல்லாமல் பகைத்துக் கொள்ளும் மோசமான நிலைமையும் ஏற்படும்.

ஆகவே, முஸ்லிம் அரசியல் தலைமைகள் இது தொடர்பில் இனியாவது கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்ட நிலையில் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

## சேமக்காலை ஒன்றை அமைத்துத் தாருங்கள்

சிலவருடங்களுக்கு முன் கொழும்புத்துறை கிழக்குப் பகுதி கத்தோலிக்க மக்களின் பாவனைக்கென சேமக்காலை ஒன்றின் அவசியத்தைப் பற்றி உதயன் வாசகர் திருமுகம் மூலமாக தெரியப்படுத்தியிருந்தேன். அதன் பயனாக முன்னாள் ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் சேமக்காலைக்கான காணி அரசு தந்துள்ளதாகவும் கொழும்புத்துறை கிழக்குப் பகுதி மக்களின் எண்ணம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார். அதன் பின்னும் சில ஆண்டுகள் கடந்தன. கட்டுமானங்கள், திருநாள்கள், கொண்டாட்டங்கள் அடுத்தடுத்து நடைபெறுகின்றன. இவற்றை தவறென நான் கூறவில்லை. மனிதருக்கு நிச்சயமான ஒன்றுக்கான ஆயத்தங்கள் இல்லையே என்றுதான் வருத்தப்படுகின்றேன். இடநெருக்கடி உள்ள கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் எமது பெற்றோரை புதைத்துவிட்டு வருடமொருமுறைவரும் மரித்தோர் தினத்தில் ஒரு மெழுகுவர்த்தி கொளுத்த புதைத்த இடத்தைத் தேடி அலையவேண்டியுள்ளது. இந்த நிலைமை எமது பிள்ளைகளுக்கு வரக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும், அரியாலை பூம்புகார், நாவலடி, உதயபுரம், மணியம்தோட்டம், வசந்தபுரம், முள்ளி, கொழும்புத்துறை, பகுதி கத்தோலிக்க மக்கள் பலமைல் கடந்து இறுதிச்சடங்கு செய்ய வேண்டியும் உள்ளது. முதுமை வரும் வரை மரணம் காத்திருக்காது, பூவும், பிஞ்சும், காயும், கனியும் அதற்குச் சமம்.

தயவு செய்து எமது பங்குத்தந்தையரும் பொறுப்புடையோரும் இந்தப் பகுதி மக்களின் தேவையை நிறைவேற்றித்தரும் வண்ணம் இந்தப்பகுதி மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

[illegible]
கொழும்புத்துறை

## ஆடுகளை வாகனத்தில் கொண்டுசெல்ல வழிவகை காணப்பட வேண்டும்

நான் எனது பால் தேவைக்காக சணல் இன ஆடுகள் வளர்த்து வருகிறேன். அவற்றை இனவிருத்தி செய்யும் போது, பெரும் பாலும் தோல்வியடைவதால் இயற்கை முறையையே கடைப்பிடிக்கிறேன். யாழ்ப்பாணத்தில் சணல் இனக் கடாக்கள் உள்ளதால் முச்சக்கர வண்டியில் அவற்றைக் கொண்டு சென்று வருகிறேன்.

தற்போது வாகனத்தில் கொண்டு செல்வதில் பொலிஸ் கெடுபிடி உள்ளதால், அவற்றை வேறு இனக்கடாக்களுடன் இனம்பெருக்கம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் கலம்பினக் குட்டிகள் கிடைக்கின்றன.

அவற்றை நல்ல விலைக்கு விற்க முடியாது இருப்பதுடன் நல்லின ஆடுகளும் இல்லாது போய் விடுகின்றன.

ஆகையால் வடமாகாண கால்நடைத்திணைக்களப் பணிப்பாளர் அவர்களே இந்த நேரத்திலாவது ஆட்டை வாகனத்தில் எடுத்துச் செல்வதற்குரிய வழிவகைகளை அறியத்தரவும்.

இதனால் என்னைப் போன்ற கால்நடை வளர்ப்போர் பலரும் நன்மை அடைவர் என நம்புகிறேன்.

சே.சந்திரன்
மானிப்பாய் மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று நாள்களேயான குழந்தையை வளர்ப்பு நாய் கடித்துக் கொன்றது

கலிபோர்னியா,ஏப்.25
பிறந்து மூன்று நாள்களேயான குழந்தையை வளர்ப்பு நாய் ஒன்று கடித்துக் கொன்றுள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் சான் டியாகோ பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 2 வயதான போலோ என்ற நாய், குடும்பத்தினர் கட்டிலில் இருந்து தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போது குழந்தையின் தாயார் இருமியதை அடுத்து நாய் குழந்தையைத் தாக்கியது. பெற்றோர்கள் தமது குழந்தையைக் காப்பாற்ற நாயை விலத்த முற்பட்ட போதும் அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை. மருத்துவ மனைக்கு குழந்தை எடுத்துச் செல்லும் வழியில் குழந்தை உயிரிழந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிர்ப்பானவர்களால் விலங்கு காப்பகத்தில் நாய் அடைக்கப்பட்டுள்ளது.



விசர் நாய்த் தொற்று நாய்க்கு ஏற்பட்டுள்ளதா எனச் சோதனை நடத்தப்பட்டது. (ஜ-ரி4)



தென் கொரியாவில் கடந்த வெள்ளிக்கிழமை ரயில்;
காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தன
இடம்பெற்றுள்ளது. புகையிரதத்தின் 7 பெட்டிகளில் 3

# ஜேர்மனி பிரதமருக்கு ஒபாமா பாராட்டு

பெர்லின்,ஏப்.25
ஜேர்மனுக்கு, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இதன்போது பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஜேர்மனியில் அகதிகளுக்கு புகலிடம் அளிப்பதில் இருந்து பின்வாங்காமல் பிரதமரான ஏஞ்சலா மெர்க்கல் தைரியமாகச் செயற்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா புகழாரம் சூட்டியுள்ளார்.
ஜேர்மனியில் வெளியாகும் தினசரிப் பத்திரிகைக்கு நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா செவ்வியளித்துள்ளார். அப்போது, அகதிகளுக்காக ஜேர்மன் கதவுகளை திறந்து வைத்துள்ள பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் எனக்கு ஒரு மிகச்சிறந்த அரசியல் தலைவராகத் தெரிகிறார் எனத் தெரிவித்தார்.
மேலும், அவர் தெரிவித்ததாவது, அவர் எனக்கு நெருக்கமான தோழி. மற்றைய உலகத் தலைவர்களை விட அவருடன் அதிக காலம் நெருக்கமாகப் பணிபுரிந்துள்ளேன். போர் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து தப்பித்து சிரியாவிலிருந்து வெளியேறும் அகதிகளை பிரதமர் அரவணைத்துப் புகலிடம் அளித்து வருவது பாராட்டுதலுக்குரியது.
இந்த நடவடிக்கைகள் மூலம் அவர் ஒரு அரசியல் தலைவராக மட்டுமன்றி மனிதத்தை உயர்த்திக் காட்டும் பொதுநலத் தலைவராகவும் காட்சியளிக்கிறார். ஜேர்மனிப் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் போல், அமெரிக்காவும் அகதிகளுக்கு எப்போதும் உதவி வருகிறது என ஒபாமா தெரிவித்தார். புலம்பெயர்ந்தவர்களுக்கு புகலிடம் அளிப்பது தொடர்பாக ஜேர்மனியின் பிரதமரான ஏஞ்சலா மெர்க் கல் துருக்கி நாட்டுக்குச் சென்றுள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இவ்வாறு பிரதமரை புகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
முன்னதாக, நேற்றுமுன்தினம் ஹனோவர் ஒப்பேரா சதுக்கத்தில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், அமெரிக்காவுக்கும்– ஐரோப்பாவுக்கும் இடையில் ஒப்பந்தம் மேற்கொள்வதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
பதாகைகளைச் சுமந்த வண்ணம் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஜேர்மனியர்கள் பலர் இன்னமும் ஏற்றுமதி மூலம் இலாபத்தை சம்பாதிப்பதால், அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்துக்குத் தமது எதிர்ப்புக்களைத் தெரிவிக்கின்றனர். (ஜ-ரி4)

# ஈராக்கில் தாக்குதல்

## 12 பேர் சாவு:39 பேர் காயம்



பக்தாத்,ஏப்.25
ஈராக்கின் பக்தாத் நகரில் இடம்பெற்ற இரட்டைத் தற்கொலைப் படை கார்க் குண்டுத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டதுடன், 39 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொரிஸாரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.
பாதுகாப்பு படையினரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. அல் –குசன்யா மாவட்டத்தின் சோதனைச் சாவடியில் இடம்பெற்ற தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.
யராப்– அல் –ஜபோர் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் 4 பேர் உயிரி ழந்துள்ளனர். இராணுவத்தினரைக் குறிவைத்து இடம்பெற்ற இந்தத் தாக்குதல் தொடர்பான மேலதிக சேத விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.
நாட்டில் நிலவி வரும் கிளர்ச்சி நிலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அழுத்தத்தில் ஈராக் அரசு திணறி வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாட்டின் பல பிரதேசங்களை ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து, ஈராக் படைகள் மீட்டமை குறிப்பிடத்தக்கது.
ஆனால், தற்போது சில மாதங்களாக ஐ.எஸ். அமைப்பினர் தற்கொலைப்படைத் தாக்குதல்களை நிகழ்த்தி வருகின்றனர். இதன் மூலம் நாட்டில் உள்ள வேறுபிரிவினர் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நாட்டின் நிதி நிலைமையும் கடும் நெருக்கடி நிலையைத் தோற்றுவித்துள்ளது. ஐ.எஸ். உடன் நடைபெற்றுவரும் போரால் எண்ணெய் விலையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (ஜ-ரி4)

# கொரிய தீப

## மீண்டும் ஏவுகணையைப்

பியாங்யாங்,ஏப்.25
வடகொரியா நீர்மூழ்கி கப்பலில் இருந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பரிசோதனை வெற்றி அடைந்ததாக அந்த நாடு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இந்த ஏவுகணை சுமார் 30 கிலோ மீற்றரில் இருந்து 300 கிலோ மீற்றர் தூரத்துக்குச் சென்று தாக்குதல் நடத்தக் கூடியது எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சோதனை வெற்றியளித்துள்ளது என வட கொரிய ஊடகம் அறிவித்துள்ளது.
பரிசோதனை தொடர்பில் அமெரிக்கா தெரிவித்ததாவது:– மிகவும் ஆழத்தில் இருந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பரிசோதிக்கப்பட்டுள்ளது. இது அமெரிக்காவுக்கு அச்சமூட்டவில்லை மாறாக ஆத்திரமூட்டும் செயலாக அமைந்துள்ளது. இதற்கு முன்னர் இடம்பெற்ற சோதனை தோல்வியில் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
நகைச்சுவையாக இருந்த வட கொரியாவின் சோதனைகள் தற்போது கடுமையான நிலையைத் தோற்றுவித்துள்ளது. அமெரிக்கா வட கொரியாவின் செயற்பாடுகளை அவதானித்து வருகிறது எனவும் தெரிவித்துள்ளது.
இது வன்முறையான செயல். இந்த சோதனை முயற்சியானது, ஐ.நா.



பாதுகாப்புச் சபை விதி
வன்முறைச் சம்பவம
வேண்டுகோளுக்கு இ
யான நடவடிக்கையை
டும். அவற்றுக்கான
கைகள் மேற் கொள்

# ஐ.எஸ்ஸுக்கு எதிரான வான்தாக்குல்

டமாஸ்கஸ்,ஏப்.25
சிரியா மற்றும் ஈராக்கில் அமெரிக்கா ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக போரிட்டு வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. தற்போது இந்தத் தாக்குதலை மேலும் அதிகரித்துள்ளது. இதனால் பொது மக்களின் சாவு 41 ஆக அதிகரித்துள்ளது என அவதானிகர் குழு தெரிவித்துள்ளது.
பொது மக்கள் இறப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கையில் முறையாக இலக்கு வைக்கப்பட்டு தாக்குதல்கள் இடம்பெற்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இருந்து பெப்ரவரி மாதம் வரை 20 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால் தற்போது இந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது.
இது தொடர்பில் கருத்த தெரிவித்த அமெரிக்க இராணுவ அதிகாரி, பொது மக்கள் தாக்கப்படுவதை நாம் விரும்புவதில்லை. மிகவும் திட்டமிட்டு தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்ட போதும் இவ்வாறான இறப்புக்கள் தற்செயலாக இடம்பெறுகின்றன எனத் தெரிவித்தார்.
இவ்வாறான போரில் போராளிக்குழுவினர் மக்களிடையே ஒளிந்து வசிக்கின்றனர். அவ்வாறானோரை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் போது பொது மக்களும் உயிரிழப்பதற்கான சாத்தியம் உண்டு எனத் தெரிவித்தார்.
அமெரிக்கா வான்வழித்தாக்குதல் நடத்துவதை அடுத்து, ரஷ்யாவும் சிரிய ஜனாதிபதிக்கு ஆதரவாக வான் தாக்குதலை நடத்தியது. இது வரை 12 ஆயிரம் வான் தாக்குதல்கள் இடம்பெற்றள்ளமை குறிப்படத்தக்கது. (ஜ-ரி4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரயில்; தடம் புரண்டதில் 1 பொறியியலாளர் உயிரிழந்ததுடன், 8 பேர்
ித்தனர். வளைவில் 3 மடங்கு வேகத்தில் திரும்பியதால் இந்த விபத்து
ளில் 3 பெட்டிகள் தடம் புரண்டன. (ஐ-ரி4)

# பகற்பத்தில் பதற்றம்

## யப் பரிசோதித்தது வடகொரியா




வருகின்றன. இது தவிர, அயல் நாடான தென் கொரியாவை அச்சுறுத்தும் வித மான நடவடிக்கை களிலும் ஈடுபட்டு வருகின்றன.

ஐ.நா. பாதுகாப்பு சபையின் கட்டுப் பாட்டை மீறி வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நடந்துகொள்வதால் அமெரிக்கா, இங் கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் எதிர்ப் பையும் சந்தித்து வருகிறார். இதனால் அந்த நாட்டின் மீது சிலதடைகளும்விதிக் கப்பட்டன. இருந்த போதும், பேரழிவை ஏற்படுத்தும் நைதர சன்குண்டுச்சோதனை நடத்தி மேலும் பதற்றத்தை உருவாக்கியது வடகொரியா.

ப விதி முறையை மீறிய
ம்பவமாகும். சர்வதேச
க்கு இணங்க உறுதி
கையை எடுக்க வேண்
கான எதிர் நடவடிக்
கொள்ளப்படும் என

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உத்தி யோகத்தர் ஜோன் கெர்பி தெரிவித்தார். வடகிழக்கு ஆசிய நாடுகளான தென் கொரியாவும், வடகொரியாவும் தங்களது ஆயுத பலத்தை நிலை நாட்ட பெரும் போராட்டத்தில் ஈடுபட்டு

கொரிய தீபகற்பத்தில் தொடர்ந்து பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வருடம், எப் போதும் இல்லாத அளவுக்குத் தொடர்பரி சோதனைகள் இடம்பெற்றுள்ளன. (ஐ-ரி4)



# இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 50 சிறுவர்கள் புற்றுநோயால் சாவு

புதுடில்லி,ஏப்.25

இந்தியாவில் புற்றுநோய்கள், கட்டிகள் தொடர்பான ஆய்வில் ஒவ்வொரு நாளும் 50 சிறுவர்கள் உயிரிழப்ப தாகத் தெரியவந்துள்ளது. புற்று நோயால் பாதிக்கப்பட்ட 14 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் இவ்வாறு உயிரி ழப்பதாகத் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வு சர்வதேச பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்டது. இந்தி யாவில் வருடத்துக்கு 37 மில்லியன் மக்கள் புற்றுநோயால் உயிரிழப்பதாகத் தெரியவந்துள்ளது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படு வதால் 80 சதவீதமான சிறுவர்கள் உயிர்பிழைக்கின்றனர்.

குறைந்த வருமானமுள்ள நாடுகளில் நோய்களுக்கான சிகிச்சை வசதிகள் குறைவு என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளதாக ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அடுத்த தசாப்த காலத்தில் இந்தியாவில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 5 மடங்காக அதிகரிக் கும் எனவும், உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. தற்போது இந்தி யாவில் உள்ள ஒரு குடும்பத்தின் வருமானத்தைப் பார்க்கிலும் 20 மடங்கு அதிகமான வருமானம் பெறும் குடும்பத்தால் இவற்றுக்கான சிகிச்சை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி4)

ளர்
ார்.
ந்து
ரும்
ளத்
டத்
பதி
து.
கள்
ரி4)



# ஈக்குவடோரில் 646 பேர் சாவு

## தொடர் நிலநடுக்கத்தால்

குவிட்டோ,ஏப்.25

ஈக்குவடோர் நில அதிர்வில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 650 ஆக எட்டியுள்ளது என அந்த நாட்டு ஜனாதிபதி ரபேல் கோர்ரே நேற்றுமுன்தினம் தெரிவித்தார். கடந்த தசாப்தங்களில் இடம்பெற்ற அழிவுகளில் இது மிகவும் பெரிய அழிவு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 7.8 என ரிச்டர் அளவில் பதிவான நிலநடுக்கம், சாலைகள் கட்டங்களை உலுக்கி எடுத்து உருக்குலைத்தன. இவற்றுக்கான சேத மதிப்பீடு 3 பில்லியன் டொலர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இன்னமும் 130 பேர் காணமற்போயுள்ளனர். அரசின் பதிவேட்டில் 646 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் - 12 ஆயிரத்து 492 காயமடைந் துள்ளனர் என்றும் - உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 26 ஆயிரத்து 91 பேர் வீடுகளின்றி பாதுகாப்பு அரண்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இடிபாடுகளில் இருந்து 100 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என ஜனாதிபதி கோர்ரே அதிகார பூர்வமாகத் தகவல் வெளியிட்டுள்ளார். (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியாவை ஒழித்து நன்மை அடைவோம்




மருத்துவர்
அ.ஜெயகுமரன்

உலக மலேரியா தினம் உலகெங்கும் End Malaria for Good மலேரியாவை ஒழித்து நன்மை அடைவோம் எனும் தொனிப் பொருளில் கொண்டாடப்படுகிறது. முன்னர் பெரிய மலேரியா தொற்றுள்ள நாடாக இருந்த இலங்கை 2012 ஒக்ரோபர் மாதம் முதல் உள்ளூரில் மலேரியா தொற்றை ஒழித்த நாடெனும் கௌரவமான நிலையை அடைந்துள்ளது. எந்தவொரு வெப்ப வலய நாடும் இந்த அந்தஸ்தைக் கடந்த மூன்று தசாப்தத்தில் அடைந்ததில்லை. எனினும் இலங்கையில் இந்த நோய் கீழ் குறிப்பிடப்படுபவர்களில் இப்பொழுதும் கண்டறியப்படுகின்றது.

அ) இந்தியா மற்றும் அதன் அயல் நாடுகளுக்குச் சென்று திரும்புபவர்கள் மற்றும் அந்த நாடுகளில் இருந்து மீள்குடியேறுபவர்கள்.

ஆ) ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்கள் மற்றும் அந்த நாடுகளின் ஊடாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள்.

இ) மலேரியா தொற்றுள்ள நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள்.

ஈ) இந்தியா, பாகிஸ்தான், மியன்மார், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்து தஞ்சம் கோருபவர்கள்.

இதனால் இலங்கையில் இந்த நோய்த் தாக்கமானது கடந்தாண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்த போக்கையே காட்டுகின்றது.

இலங்கையில் மலேரியா கட்டுப்பாட்டில் இருந்தாலும் கூட முழு உலகிலுமே 2015 ஆம் ஆண்டு 214 மில்லியன் நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன் 438,000 உயிரிழப்புகளும் மலேரியாவினால் ஏற்பட்டுள்ளது. உலகில் அண்ணளவாக அரைவாசி சனத்தொகையினர் (3.2 பில்லியன்) மலேரியா தொற்றும் அபாயம் உள்ளவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

எனவே இலங்கையில் இந்த நோய்த் தாக்கம் மீண்டும் அதிகரிக்காமல் தடுப்பதற்கு கீழ்க்குறிப்பிடுபவற்றை பின்பற்றுதல் அவசியமாகும். அவையாவன:-

அ) மலேரியா தொற்றுள்ள நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், ஆபிரிக்க நாடுகள், மியன்மார் மற்றும் ஆப்கானிஸ்தான் செல்வதற்கு முன் நோய்த்தடுப்பு சிகிச்சை பெற்றுக் கொள்ளுதல்.

ஆ) மீள நாட்டுக்கு திரும்பிய பின்பும் மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனை செய்தல் அவசியம். அத்துடன் ஒரு வருட காலத்துக்குள் காய்ச்சல் ஏற்பட்டால் மருத்துவரிடம் சென்று மலேரியா உள்ள நாடொன்றுக்கு சென்று வந்ததை தெரிவிப்பதும் அத்தியாவசியமாகின்றது.

இ) உறங்கும்போது நுளம்பு வலையினுள் உறங்குவதன் மூலம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

இலங்கையில் முற்காப்பு தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் இடங்களாவன பின்வருமாறு:-

அ) பிராந்திய மலேரியா தடைப்பிரிவு சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்.

ஆ) சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள்

இ) மலேரியா தடுப்பு காரியாலயம், கொழும்பு-05

ஈ) சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்கா

உ) ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary Health Care Units)

*பிராந்திய வைத்திய அதிகாரி*
*பிராந்திய மலேரியா தடை இயக்கம்*
*சுகாதார கிராமம்*
*பண்ணை, யாழ்ப்பாணம்.*

# புதுவருடமும் ராசி பலனும்




## ரிஷபம்
(கிருத்திகை, ரோகிணி, மிருகசீரிடம்)

**(புதுவருடமும் ராசி பலனும் என்ற தலைப்பில் மேட ராசி பற்றிப் பார்த்தோம். ரிஷப ராசி பற்றிப் பார்ப்போம்)**

கொள்கை மாறாதவர் நீங்கள்.

உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டில் இந்த வருடம் பிறப்பதால், சின்னச் சின்ன ஆசைகள் நிறைவேறும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். தன்னம்பிக்கை கூடும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வேலை அமையும். வெளிநாடு வெளிமாநிலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

9.9.16 முதல் 25.10.16 வரை செவ்வாய் 8இல் மறைவதாலும் 19.9.16 முதல் 13.10.16 வரை உங்களின் ராசிநாதனான சுக்கிரன் 6இல் மறைவதாலும் வீண் அலைச்சல், தொண்டை வலி, சகோதர வகையில் சச்சரவுகள், வழக்கால் நிம்மதியின்மை, கணவன்-மனைவிக்குள் விவாதங்கள் வந்து போகும். வருடம் முழுவதும் ராகு 4லிலும் கேது 10லிலும் தொடர்வதால், தாயின் உடல் நலன் பாதிக்கப்படும். அவருக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகள் செய்ய நேரிடும். வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு உரிமையாளரால் சிற்சில பிரச்சினைகள் உண்டாகும். மற்றவர்களுக்கு பிணை தரவேண்டாம். சின்னச் சின்ன அவமானங்கள் வந்து போகும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப்போகும்.

1.8.16 வரை குரு பகவான் 4இல் அமர்வதால், வேலைச் சுமை அதிகரிக்கும். வாகன விபத்துகள் ஏற்படக் கூடும். சிலர், சொந்த ஊரிலிருந்து வேறு ஊருக்கு மாற வேண்டியது வரும். 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு உங்கள் ராசிக்கு 5இல் அமர்வதால், வசதி, வாய்ப்புகள் பெருகும். வருமானத்தை உயர்த்த அதிரடியாக சில திட்டங்கள் தீட்டுவீர்கள். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். குலதெய்வ பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆனால், 17.1.17 முதல் 9.3.17 வரை குருபகவான் அதிசாரத்திலும், வக்ர கதியிலும் ராசிக்கு 6இல் சென்று மறைவதால், வேலைச் சுமை அதிகரிக்கும்.

உங்களுடன் பழகும் சிலரே உங்களுக்கு எதிராகச் செயற்படக்கூடும். வருடம் முழுவதும் சனி உங்கள் ராசிக்கு 7இல் அமர்ந்து கண்டகச் சனியாகத் தொடர்வதால், கணவன் மனைவிக்குள் வீண் சந்தேகம், சச்சரவுகள் வரும். திருமண முயற்சிகள் தாமதமாக முடியும். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். முக்கியமான பணிகளை நீங்களே நேரடியாகச் செய்து முடிப்பது நல்லது.


[illegible] காலைவிட [illegible] மாறி வரும் சந்தை நிலவரத்தை அவ்வப்போது உன்னிப்பாக கவனித்துச் செயற்படவும். விளம்பர யுக்திகளாலும், தள்ளுபடி அறிவிப்பாலும் பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பின்மையால் இலாபம் குறையும். புதிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்வது மற்றும் கூட்டுத் தொழில் தொடங்குவதற்கு முன்பாக வழக்கறிஞரிடம் ஆலோசிப்பது நல்லது.

வருடம் முழுவதும் கேது 10இல் தொடர்வதால், உத்தியோகத்தில் கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டி வரும். அதிகாரி, உங்களைப் புரிந்து கொள்ளமாட்டார். உங்கள் உழைப்புக்கு வேறு சிலர் உரிமை கொண்டாடுவார்கள். சக ஊழியர்களில், சிலர் உங்களுக்கு ஆதரவாகவும், சிலர் எதிராகவும் செயற்படுவர். உங்களில் சிலருக்கு அயல்நாட்டில் அல்லது வெளி மாநிலத்தில் வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

மாணவ-மாணவியர், படிப்பில் அதிக கவனம் செலுத்தவும். நீங்கள் விரும்பும் பாடப்பிரிவில் சேர சிலரின் பரிந்துரை தேவைப்படும். கலைத்துறையினரே! வீண் வதந்திகள் இருக்கவே செய்யும். மனம் தளராமல் இருங்கள். உங்களை விட வயதில் குறைந்த கலைஞர்களால் நல்லது நடக்கும். மொத்தத்தில் இந்த தமிழ்ப் புத்தாண்டு, இட மாற்றத்தையும் வேலைச் சுமையையும் தந்தாலும், நல்லவர்களை இனம் கண்டு கொள்ள ஏதுவாக அமையும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில்லறைக் காசு

அது என்பதற்கு பலப்பல அர்த்தங்கள் உண்டு. எனக்கு எப்படி என்றால் அது என நான் கருதுவது ஆணவத்தையேயாகும். இது தான் சமூகத்தை ஆக்கிர மிக்கின்றது. இது ஒரு புற்று நோயாக உடலெங்கும் பரவிவிட்டது. உடை, நடை, பாவனை உடலெங்கும் அதுவான இது பரவியுள்ளது. தலையிலிருந்து கால்வரையும் நான் என்ற அது நேர்த்தியாக வசப்பட்டுள்ளது.

கே.எஸ்.சிவஞானராஜா

வேட்டியைக் கிழித்துக் கட்டத் தொடங்கிவிட்டார்கள். இனிக் கட்டக்கிழியும் உலகம் உள்ள வரை இந்தவரிகள் வாழப் போகிறது. யோகர் சுவாமிகள் இதைச் சும்மா சொல்லவில்லை. எமது திருவிளையாடல்களுக்காகவே உணர்ந்து மகா ஞானியாக உணர்த்திச் சென்றுள்ளார்.

1958 ஆம் ஆண்டிலிருந்து 1964 வரை அடிக்கடி கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்கு யாம் சென்று நற்சிந்தனை படிப்பதுண்டு, பாடுவதுண்டு. யோகர் சுவாமிகளை அனுபவிப்பதுண்டு. சுவாமிகள் சொன்ன அத்தனைகளையும் நாம் இப்போ அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இனியும் கிழிய விடலாமா? ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இறைவன் மனித வடிவில் நடமாடி மனிதர்களைப் புனிதப் படுத்தினான். பல்லாயிரம் மக்களால் இறைவடிவமாக எண்ணிப் போற்றப்படுகின்ற யோகர் சுவாமிகளே அந்த அற்புதத் தெய்வம். இன்றுவரை சைவசமயம் உயிரோடு இருப்பதற்குயோகரின் வழிகாட்டலே பிரதான காரணமாகும்.

## ஆற்றுப்படுத்தல்

யோகர் நம்மவரை மட்டுமன்றி வெள்ளைக் காரப்பிரபுவின் மகன், அமெரிக்க நடனவித்தகர் ஜேர்மன் நாட்டவர், பாரதநாட்டவர், அமெரிக்கர் போன்ற இன்னோரன்ன பலரை ஆன்மிகப் பாதையில் செப்பனிட்டவர். இல்லற வாழ்வில் பெரும்பாலானவை ஆசைகளால் நிரம்பப் பெற்றவை. இவையனைத்தும் போதும் என்ற அளவுக்கும், அதற்கப்பாலும் அனுபவிக்கப்படும். ஆடிஅடங்கி ஆவணிக்கும் தாவணிக்கும் அப்பால் போக முடியாது. 'எச்சரிக்கை' ஆசையைத் தவிடுபொடியாக்கி விடும். ஆதலால் இல்லறவாழ்வில் இருப்பவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் சரியான ஆன்மிகப் பாதையைக் காட்டி, அதில் முட்டுக்கட்டையாக இருக்கின்ற கரடு முரடுகளையெல்லாம் நீக்கி பேராசைகளை அளையாத வண்ணம் மனத்துக்கண் மாசகற்றிய மாபெரும் ஞானியாக விளங்குகின்றார். தற்போதைய தலைவர்களில் பலர் கொழும்புத்துறைக்குச் சென்றதும் கிடையாது. அவரைப்பார்த்ததும் கிடையாது. நற்சிந்தனையை வாசித்ததோ, படித்ததோ, பாடியதோ கிடையாது. துள்ளிக்குதித்து இருக்க முடியாமல் ஓடித்திரிந்து கொண்டேயிருக்கின்றோமே யொழிய, ஆற, அமர, பையப் பைய, மெல்ல மெல்ல, மெள்ள மெள்ள, சொல்லிச் சொல்லித்தானே சமயத்தைப் பிரவாகிக்கச் செய்தல் பொருத்தமானதாகும்.

## விண்டுமி

அரிசிதான் முதலில் முளைவிடுவதென்றாலும் அதன் உமி (விண்டுமி) போனால் முளையாது. ஔவையார் இதன் தாற்பரியத்தை வைத்து ஒரு வெண்பாவை இயற்றியுள்ளார். பணம்கொடுத்துப் படிக்க வேண்டிய பாடல்

பண்டுமுளைப்பது
அரிசியே யானாலும்
விண்டுமி போனால்
முளையாதாம் – கொண்ட
பேராற்றல்
உடையார்க்கும் ஆகாது
அளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

எவ்வளவு தான் பேராற்றல் உடையவராக இருந்தாலும் எக்கச்செக்கமான வேலைகளைத் தனது தலையில் போட்டு, தனக்குள்ளேதான் எல்லாம் இருக்கிறது என்று செயற்படுதல் ஆகவே யாகாது. அரசு செய்யவேண்டிய வேலைகளை நாம் செய்தலாகாது. காசு கொட்டிக்கிடக்கிறது என்பதற்காக கட்டடங்களைக் கட்டிவிடுதலும் வசதிபடைத்தோருக்கே 'வாழ்த்த தானங்கள் செய்வதும், நூறு வருடங்கள்' வாழப்போகும் கட்டடங்களை இடித்துக் கட்டுவதும் தாற்பரியமாகாது. எது அளவுக்கு மிஞ்சிப் போகிறதோ மகத்துவம் - அற்புதம் நடைபெறவாய்ப்பே இல்லாமல் போய்விடும். வாலாயம் கீர்த்தி, வாழ்க்கை, குடும்ப உறவு யாவுமே கலைந்து குலைந்துவிடும். எனவே உமியாக எது எது பாதுகாப்பாக எமது வாழ்வுக்கு அரணாக இருந்ததோ அதுஅது, அவை அவை எல்லாவற்றையும் படிப்படியாக வலுவிழக்கச் செய்து வருகின்றோம்.

ஓலையை மாற்றினோம். ஓட்டினை மாற்றினோம், சேலையை மாற்றினோம். (உடம்பைச) சோலையாக்கினோம், காலையை மாலையாக்கினோம். மாலையைக் காலையாக்கினோம். ஆலையை நீக்கினோம், ஆடையை நீக்கினோம், நாலையும் விட்டோம். நாளையும் விட்டோம், பாலையும் விட்டோம். பசுமாட்டையும் விட்டோம், நூலையும் விட்டோம். நோன்பையும் விட்டோம், தாளையும் விட்டோம் - தலைப் பாகையையும் விட்டோம்,மூளையை விட்டோம் மூலிகையையும் விட்டோம், ஏலமும் விட்டோம் ஏழையும் விட்டோம், கோலமும் விட்டோம் கோயிலையும் விட்டோம், உள்ளதையும் விட்டோம் உள்ளத்தையும் விட்டோம், எள்ளையும் விட்டோம் எல்லாத்தையும் விட்டோம் இனியென்ன? அவ்வளவுதான்.

நாணயம் எப்பொழுதும் சலசலக்கும், தாள் காசு எப்பொழுதும் அமைதியாக இருக்கும்

நாங்கள் எதுவாக இருக்கின்றோம் என்பது பலருக்குத் தெரிவதில்லை. ஒரு சிலரைத் தவிர, (நீங்களல்ல, எல்லோருமல்ல) யாம் சில்லறைக் காசுகளே பிரச்சினை என்னவென்றால் அது என்று சொல்லப்படுவது ஒழுங்காக வேலை செய்கிறது.

## அது

அது என்பதற்கு பலப்பல அர்த்தங்கள் உண்டு. எனக்கு எப்படி என்றால் அது என நான் கருதுவது ஆணவத்தையேயாகும். இது தான் சமூகத்தை ஆக்கிரமிக்கின்றது. இது ஒரு புற்றுநோயாக உடலெங்கும் பரவிவிட்டது. உடை, நடை, பாவனை உடலெங்கும் அதுவான இது பரவியுள்ளது. தலையிலிருந்து கால்வரையும் நான் என்ற 'அது' நேர்த்தியாக வசப்பட்டுள்ளது. அதை இரசிப்பாரும் உண்டு. ருசிப்பாரும் உண்டு. பசித்தோரும் உண்டு. பசியாறியதும் உண்டு. அதிலே வசிப்போரும் உண்டு. அதிலே வாழ்வோரும் உண்டு. அதுவே தான் ஆன்மிகத்தைத் தின்னுகிறது. ஆன்மிகம் அதனைத் தின்னுகிறது. எப்படி அதைத் தின்று முடித்தாலும், மீண்டும் மீண்டும் ஆணவம் ஆவணமாகிறது. ஒருசிலரின் கைகளில் ஆன்மிகம் படுகிறபாடு ஐயோ என்று சந்தியில் நின்று [illegible] வேணும் போல இருக்கிறது. அது ஒரிடத்தில் சும்மா இருக்காது. அது என்ற சொல் உயர்திணைக்குச் சிறப்பாக பொருந்திவிடுகிறது. இல்லறத்திலே 'அது என்பது அத்தான்' 'அது இலண்டனுக்குப் போய் சேர்ந்திட்டுது' 'அதுக்கு உதுகளின்ரை நடையுடை பாவனை பிடிக்காது பாருங்கோ துறவறத்திலேயும் 'அது' வை மிகவும் கச்சிதமாகப் பாவிக்கிறார்கள். எப்படி?

அதுக்கு
ரோசாமிருந் தால்
தானே!
அதுக்கு ரோச
மிருந்தால்
உப்பிடித் திரியுதே!
எங்கை எங்கை
போகுதோ?
எப்பிடி எப்படியெல்லாம் இருக்குதோ
உதை நட்டு வைக்க வேணும்
நடாமல் விட்டுவிட்டால் உதைக்
கட்டுப்படுத்தவே முடியாது.
உதுக்குக் கால்கட்டுப் போட்டால்தான்
அடங்கியிருக்கும்.
சரி உதுக்குக் கால்கட்டுப் போட்டாலும்
வீட்டிலேயும் அது நிற்காது. அப்போ என்னதான்
மருந்து என்றால்,
நீ அதுவாகின்றாய்!

எது என்றால் நீ சிவப்பிரம்மம் ஆகின்றாய். யோகர் சுவாமிகள், அடிக்கடி சொல்லும் வாக்கியம் 'நீயே அது, அதுவே நீ, இதை உணரக்கடவோம். இதை எப்போது நீ உணருகின்றாயோ அப்போதே நீ தேவராகின்றாய். நீ பக்குவப்பட்டுவிடுவாய். எந்தவித சலசலப்பும் இருக்கமாட்டாது. இலேசாகி நீ அடங்கியிருப்பாய். இப்பொழுது அரசு இயந்திரம் இயங்குகிறது. தட்டிக் கேட்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களை அருட்டிவிடுங்கள். எங்களில் பார்க்க படித்த பெரியவர்கள் இருக்கும் போது அவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுப்பதுதானே சமூக இசைவாக்கம். கதிரைகளும் சிரிக்கும் பாருங்கோ.

யோகசுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகிறார். இந்து ஒளி தீபம் 18, சுடர் 04, பக்கம் 03 கட்டுரை அருமையானது. யார் யாருக்கு என்ன தேவையோ அது அதுவாகக் கிடக்கிறது.

தன்னைப் புகழ்ந்தவரைத் தடியால் துரத்தினார். எனக்குக் கோயில் கட்டடா என்று எவருக்கும் சொல்லவில்லை. எனக்குக் கோயில் கட்டிப் பூசை செய்யடா என்று எவருக்கும் சொல்லவில்லை. கேட்கவும் இல்லை. சீவியம் முழுவதும் பாடு. சிவதொண்டனாய் இரு. வேறொன்றும் வேண்டாம். பகடு வேண்டாம். பக்குவமாய் நட.


மனிதர்களின் மலங்களை வாளியிலே நிரப்பி துண்டி கடற்கரையில் தினமும் கழுவும் தோட்டி வேலை செய்பவனைக் காட்டி
இவன் கடவுள்,
இவனைக் கும்பிடுங்கள்

பிறர் அசிங்கத்தைக் கழுவுகின்றான். புத்தகப் படிப்புக்கு மேலாக இவன் செய்யும் தர்மம் மேலானது. மலங்கழுவுவார் வந்து சார்தலினால் என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். அகத்தையும், புறத்தையும் கழுவடா என்று பலரை எச்சரிக்கை செய்கிறார். அகந்தையும், அர்த்தமற்ற ஆரவாரமுமே எம்மை ஆள்கிறது. பிறகென்ன? சலசலப்புத்தானே! சில்லறையள் சலசலக்கத்தானே செய்யும்! சில்றைக்காசுகள் இப்போது தாராளமாய்க் கிடைக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





## வரலாற்றில் இன்றைய தினம்



1607 - ஸ்பானிஷ் கப்பல் அணியை, டச் கற்படை அணி முற்றாக அழித்தது.
1859 - பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் பொறியியலாளர்களால் சுயஸ்கால்வாய் அமைப்பதற்கான தரை தோண்டும் பணி தொடங்கப்பட்டது.
1898 - ஸ்பெயின் மீது அமெரிக்கா போர்ப் பிரகடனம் செய்தது.
1916 - அயர்லாந்து மீது ஐக்கிய ராச்சியம் மார்ஷல் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது.
1944 - ஐக்கிய நீக்ரோ கல்லூரி நிதியம் கூட்டிணைக்கப்பட்டது.
1945 - ஐரோப்பாவில் உலக மகா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முக்கிய மைல் கல்லாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் சோவியத் படைகள் எல்பே நதியூடாக ரோர்கோவில் சந்தித்தன.
1951 - சீனப்படைகள் ஐக்கிய நாடுகள் படைகளுடன் போரிட்டுத் தாக்குப் பிடிக்க முடியாமல் பின்வாங்கின.
1959 - வட அமெரிக்க பெரிய ஏரியையும் அத்திலாந்திக் சமுத்திரத்தையும் இணைக்கும் சென் லோறன்ஸ் கடற்பாதை, கப்பல் போக்குவரத்துக்கு உத்தியோகபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.
1966 - தாஷ்கண்ட் நகர், பெரும் நிலநடுக்கத்தால் அழிவடைந்தது.
1981 - ஜப்பானின் சுருகாவில் அணுசக்தி உலையொன்றின் திருத்தப் பணியின்போது 100 தொழிலாளர்கள் வரை அணுக்கதிர்வீச்சுக்கு ஆட்பட்டனர்.
2015 - நேபாளத்தைத் தாக்கிய 7.8 மக்னிரியூட் அளவிலான நில நடுக்கத்தில் 9,100 பேர் வரை சாவு.

காலைப் பொழுதில் எழுந்திடு
கல்வியை நன்றாய்க் கற்றிடு
மாலைப் பொழுதில் விளையாடு
மன்னவன் போல நடைபோடு

தாய்மொழி அறியைப் பெருக்கிடு
தன்னலம் கருதாது உழைத்திடு
வாய்மொழி சத்தியம் பேணிடு
வளர்பிறையாய் நீ வளர்ந்திடு

கற்றவர் என்றும் உயர்ந்தோராம்
கல்லாதவரே இழிந்தோராம்
மற்றவர் குறைநீ பேசாதே
மானம் காத்திடக் கூசாதே

பிறர்பொருள் கவர எண்ணாதே
பெரியவர்களை வணங்கத் தவறாதே
குற்றம் எல்லாம் ஓடிவிடும்
குறையிலா வாழ்வு தேடி வரும்






# விசித்திரமாகச் சித்திரம் தீட்டிய தெனாலிராமன்

மலைநாட்டு மகாராணிக்காக ஓர் அரண்மனை கட்டப்பட்டது. அந்த அரண்மனையிலுள்ள விருந்து மண்டபத்தில் தலைசிறந்த ஓவியர்களைக் கொண்டு ஓவியம் தீட்டும்படி ஏற்பாடு செய்தார் மன்னர். அரண்மனைத் திறப்புவிழா அன்று விருந்து மண்டபத்தில் எல்லோருக்கும் விருந்து. அங்கு தீட்டப்பட்ட ஓவியங்களையும் அதைத் தீட்டிய ஓவியர்களையும் மன்னர் மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

எல்லோரும் ஓவியங்களையும் ஓவியர்களையும் பாராட்டினார்கள். தெனாலிராமன் மட்டும் சில ஓவியங்களைக் காட்டி "இவை முழுமையாக இல்லை. கரங்களில் கண்ணாடி இல்லாமலே கண்ணாடி இருப்பதாகப் பாவித்து நெற்றியில் திலகமிட்டாள் ஒரு பெண். அந்த ஓவியத்தின் கரத்தில் கண்ணாடி எங்கே எனக் கேட்டான் தெனாலிராமன். இப்படிப் பல ஓவியங்களைக் குறை கூறினான்.

அரசருக்கு எரிச்சல் ஏற்பட்டது. "முட்டாள்தனமாகக் கேட்கிறாயே" ஓவியங்களைப் பார்த்து நாம்தான் கற்பனை செய்துகொள்ள வேண்டும். இது கூடவா உனக்குத் தெரியவில்லை?" என்றார் அரசர். எல்லோரும் கேலியாகச் சிரித்தார்கள். மற்றவர்கள் முன்னிலையில் தன்னை முட்டாளாக்கியது மல்லாது முட்டாள் என்று வேறு கூறிவிட்டாரே மன்னர் எனத் தெனாலிராமனுக்கு ஏகப்பட்ட வருத்தம்.

விருந்துகள் முடிந்தன. எல்லோரும் விடைபெற்றுச் சென்றனர்.

சில மாதங்களுக்குப் பிறகு மன்னரின் வசந்த மாளிகையைப் புதுப்பிக்கும் வேலை ஆரம்பித்தது. தெனாலிராமன் அரசரிடம் வந்து "அரசே குறைந்த காலத்திற்குள் இரவு பகலாகப் பாடுபட்டு நான் ஒரு சிறந்த ஓவியனாகிவிட்டேன்" என்று கூறி சில இயற்கைக் காட்சிகளின் ஓவியங்களைக் காட்டினான். மன்னர் மகிழ்ச்சியுற்றார். வசந்த மாளிகையின் விருந்து மண்டபத்தின் சுவரில் ஓவியம் தீட்டும்படி கூறினார் மன்னர்.

பதினைந்து நாள்களுக்குப் பிறகு எல்லோரையும் தான் தீட்டிய ஓவியத்தைப் பார்க்க வரும்படி மன்னரிடம் கூறினான் தெனாலிராமன்.

அரசப் பிரதானிகள் ராஜகுரு உள்பட எல்லோரும் சித்திரத்தைப் பார்க்கக் கூடினார்கள். சுவரிலுள்ள சித்திரங்களைக் கண்ட மன்னரும் மற்றவர்களும் திகைத்து நின்றனர். மன்னருக்கு கோபம் கோபமாக வந்தது.

சுவரில் உருப்படியாக ஓர் உருவம் கூட இல்லை. காது, கண், வால், கால்கள் இவை தனித் தனியாக எழுதப்பட்டிருந்தன.

ராஜகுரு தெனாலிராமனிடம் 'என்னையா இது சித்திரமா? கண் மட்டும் காது மட்டும், கால்கள் மட்டும்" என்றார்.

தெனாலிராமன் சாவதானமாக உமக்கு மூளை இருக்கிறதா? ஓர் உறுப்பை வைத்து அதன் உருவத்தைக் கற்பனை செய்ய முடியாதா? என்றான்.

மன்னருக்கு மகா கோபம். உடனே காவலர்களை அழைத்து தெனாலிராமனைக் கைது செய்து காவலில் வைக்க உத்தரவிட்டார்.

அரச அவை கூடியது. தெனாலிராமன் கைதியாக நின்றான். அரசரின் உடைமையைச் சீரழித்ததாகவும் பிறரைப் பழித்துக் கூறியதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

விசாரணை முடிந்ததும் தெனாலிராமனுக்கு என்ன தண்டனை வழங்கலாம் என அவையிலுள்ள ஒவ்வொருவரையும் கேட்டார் அரசர். எவரும் பதில் கூறவில்லை. சற்று நேரம் கவனித்த அரசர் தெனாலிராமனை நோக்கி "உனது சாவை நீயே முடிவு செய். நீ எப்படிச் சாக வேண்டும் என்று விரும்புகிறாய்?" என்றார்.

தெனாலிராமன் பணிவுடன் அரசரைப் பார்த்து "உங்கள் உயர்ந்த குணத்திற்காக நான் தலை வணங்குகிறேன். எப்படிப்பட்ட சாவு எனக்கு வேண்டும் என்று சொன்னால் நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்களா?" என்று கேட்டான் தெனாலிராமன்.

மன்னர் சிரித்தபடி "என் வாக்கு எப்போதும் மாறுவதில்லை. நீ விரும்பும்படி சாவை அமைத்துக் கொள்ளலாம்" என்று உறுதியாகக் கூறினார் அரசர்.

தெனாலிராமன் மிகப் பணிவுடன் "அரசே நான் முதுமைபெற்று உடல் தளர்ந்து நடை தள்ளாடி பேச்சுக்குளறித் தானாகவே என் தலைசாயும் சாவை அடைய விரும்புகிறேன்" என்றார்.

அரசர் திகைத்தார் இருப்பினும் வாய்விட்டுச் சிரித்தார். "தெனாலிராமா உன் சாதுரியத்தைப் பாராட்டுகிறேன். என் வாக்கைக் கொண்டே என்னை மடக்கிவிட்டாய்.

இம்முறை மன்னித்து விடுதலை செய்ய உத்தரவிடுவேன். உன் ஆசைப்படி வயது முதிர்ந்து தானாகவே சாவை அடையலாம்" என்றார். அவையினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அ.அஜித்,

# பெண்கள் பற்றிப் பெரியார்

பெண்ணடிமை தீர்ந்தால்தான் மக்கள் அடிமை மனப்பான்மை நீங்கும் என்று கண்ட பெரியார் பெண்களுக்கு மட்டும் என அவர்களை அடக்கி ஒடுக்கி விட்டு, கட்டுப்படுத்திவிட்டு வைப்பதற்காகக் கூறப்பட்ட கருத்துக்களையும் அதனோடு கலந்த கற்பனைகளையும் கடுமையாகக் கண்டிக்கலானார். பெண்கள் பாவப்பிறவிகள் என்பதாகக் கருதி அவர்களைத் தேவதாசிகளாக விற்பனைப் பண்டமாக, பிள்ளை பெறும் இயந்திரமாக தொண்டு செய்யும் தகுதியன்றி வேறு தகுதியற்றவராக விதவையாகிவிட்டால் மறுமண உரிமையற்றவராக சொத்துரிமை இல்லாதவராக அடிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையை மாற்றுவதற்கான புதிய சிந்தனையை பெரியார் வளரச் செய்தார்.

புரோகிதச் சடங்குகள் நீக்கிய திருமணம், சாதி வேற்றுமையை ஒழிக்கும் கலப்புத்திருமணம், விதவைப் பெண்ணின் மறுமணம்

முதலாக மனிதவாழ்வில் இடம்பெறும் தலையாய திருமண நிகழ்ச்சியைச் சமுதாய மாற்றத்துக்கான உரிமை உணர்வு தழைக்கும் முறையில் நடத்தும் புதுமை வழிகண்டார். மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும், அனைத்து நிகழ்ச்சிகளிலும், மதத்தின் பிடிப்பும் அதனால் ஏற்படும் மனப்பான்மையும் தகர்க்கப்படுவதற்கு வழி காணும் பணியே அவரது பணியாயிற்று.

ஒழுக்கம், நேர்மை, உண்மை, கடமை, தர்மம், புண்ணியம், கல்வி, கலப்புத் திருமணம் முதலான பல்வேறு பொருள் குறித்தும் அவற்றின் அடிப்படையை அப்படியே ஒப்புக்கொள்ளத் தேவையில்லை என்பதும் மனிதன் தெளிவடைய அவையெல்லாம் மறு ஆய்வு செய்யப்பட்ட வேண்டும் என்பதுமே அவரது நோக்கமாயிற்று.

எல்லோரும் ஒரு குலம், ஒரு சமம், ஒரு நிறை என இணைந்து வாழ்வதற்குத் தடையாக இடையூறாக உள்ள எதனையும், அறிவு வழியில் தகர்த்து எறிந்து சமத்துவ சுயமரியாதை வாழ்வை அனைவருக்கும் உரித்தாகுவதே பெரியாரின் குறிக்கோளாக இருந்தது.

# விக்கினங்கள் தீர்ப்பாரா விக்னேஸ்வரன்...?

இந்து மதத்தைப் பின்பற்றுகின்ற மக்கள் அனைவரும் தங்களுடைய காரியங்களைச் செய்வதற்கு முன்பதாக எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை மனதிலே வேண்டிய பின்பே ஆரம்பிக்கின்றனர். மனதார துதி செய்து வணங்கி அவன் ஆசியோடு செயல்களைத் தொடங்கி, எந்தவித தடைகளுமின்றி வெற்றியும் பெறுகின்றனர். இவன் கணங்களின் அதிபதி என்பதால் கணபதி என்றும் யானை முகத்தைக் கொண்டிருப்பதால் ஆனைமுகன் என்றும் அழைக்கப்படுகின்றான். இவை எல்லாவற்றுக்கும் மேலாக விக்கினங்களைத் தீர்க்கும் ஈஸ்வரன் என்பதால் விக்னேஸ்வரன் என்றும் மகத்துவம் பெறுகின்றான். தன்நம்பிக்கையோடு வணங்கி செயல்களைத் தொடங்கினால் எதிர்பார்த்த பயனைப் பெறலாம் என்பது நம்பிக்கை.

இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழ் மக்கள் மிக நீண்ட காலங்களின் பின்பாக 2013 ஆம் ஆண்டு வடமாகாண சபை தேர்தல்களை எதிர் கொண்டனர். விநாயகரின் ஆசியோடு தங்களின் அரசியல் உரிமைகளையும், நியாயமான உரித்துக்களையும் பெற்றுத் தருவதற்கான சந்தர்ப்பமாக தங்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தி விக்கினங்களைத் தீர்க்கும் விக்னேஸ்வரனின் நாமம் கொண்ட ஒருவரையே முதலமைச்சராகவும் அவரது ஐந்து கரங்களாக அமைச்சர்களையும் அமைச்சுக்களையும் தமிழ் மக்களைக் காக்கும் தொழிலைச் செய்வதற்கான சர்வ வல்லமை படைத்தவர்களாக மாகாணங்களில் அமரச் செய்தனர். அதன் பிற்பாடு இதே வேண்டுதல்களோடு மத்திய அரசிலும் கடந்த ஆண்டு நல்லாட்சி என்ற சொல்லாட்சியின் அலங்கரிப்புகளுக்குள் மங்களமாக அதே ஐந்து கரங்களைக் கொண்ட விக்கினங்கள் தீர்க்கும் விநாயகன் வடிவமாக வடக்கிலிருந்தும் ஐந்த பேரை சர்வ வல்லமை படைத்த பரமேஸ்வரனை ஒத்த வடிவமாக, அமர வைத்தோம்.

இந்த நிலையிலே தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்ற கலியுகத்திலே சிவபெருமானுக்கும், அம்பிகை பார்வதி தேவிக்கும் குழந்தையாக விநாயகன் அவதரித்து அதர்மம் செய்வோரின் செயல்களில் தடங்கல்களை ஏற்படுத்தி தர்ம நெறியில் இருப்போரின் துன்பங்களையும், இன்னல்களையும் நிவர்த்தித்து வருவதாக கணேச புராணம் கூறுகின்றது. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலே தர்மநெறி நின்று உரிமை வேண்டிய இனமாக அழிந்து போனது மாத்திரமன்றி துன்பங்களையும் இன்னல்களையுமே தற்போது வரை அனுபவித்து வருகின்றோம். வினைகளால் சூழ்ந்து அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறோம். மாகாணத்திலே அரச கோலம் பூண்ட போதும், இரண்டாண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் எந்தவித தீர்வையும் தமிழினம் பெற முடியவில்லை. இதற்கு நிகராக மத்தியிலே எதிர்க்கட்சித் தலைமைத்துவம், நல்லாட்சியின் அலங்காரத்திலான அங்கத்துவம் என்பன பெற்று ஓராண்டு காலம் சுழன்றோடி விட்ட நிலையிலே எதுவும் சாத்தியப்படவில்லை. கோலங்கள் மாறிய போதும் துன்பங்களினதும், இடர்களதும் வர்ண ஜாலங்கள் மாற்றம் பெற வில்லை. அதன் வெப்பத் தகிப்பு எனும் கொடுமைகளினுள் துவண்டு கொண் டிருக்கிறோம். தர்மநெறி நின்றவர்களாக, நியாயமான உரித்துடையவர்களாக அந்த விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனின் ஆசி தரும் தன்னம்பிக்கையோடு பயணிப்பவர்களாக மாகாண அரசு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பிலான வெளிப்படுத்தல்களைச் செய்த போதிலும், பலதரப்பட்ட இன்னல்களும், இடையூறுகளும் கலியுகத்தின் கதகதப்பாக தென்படுகின்றன. சிங்களத் தரப்பிடமிருந்து வெளிப்படும் கருத்துக்கள் மீண்டும் இனவாதத்தின் கருப்பொருளாக, உருப்பெறலாக வெளிப்படத் தொடங்கியுள்ளன.

வடமாகாணசபை அண்மையில் வெளியிட்ட சமஷ்டித் தீர்வுக்கான வரைவு முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற வடக்கு -கிழக்கு மாகாணங்களை இணைத்து தனி அலகாக, மாநிலமாக மாற்றுதல் தொடர்பில் ராவண பலய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சத்தாதிஸ்ஸ தேரர் கருத்துரைத்திருக்கின்றார். இந்த வரைவை மீளப் பெற வேண்டுமெனவும் இல்லாது போனால் இரத்த ஆறு ஓடும் எனவும் கூறி புத்தன் போதிப்பதாகச் சொல்லும் அமைதியின் உண்மையான நிறத்தை வெளிச்சமிட்டுக் காட்டியிருக்கின்றனர். இனவாதத்தின் ஊற்றை மீண்டும் உருப்பெறச் செய்துள்ளனர்.

இதேபோன்று ஜாதிக ஹெல உறுமயவும் தன் பாட்டில் சமஷ்டி தொடர்பில் சதிராடியிருக்கின்றது. தவறான எண்ணங்களோடு வடக்கு அரசு பயணிக்கிறது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சகல மக்களும் வாழ்வதற்கான உரிமை உண்டு. வடக்கில் தமிழர்கள் மட்டுமே வாழ முடியும் என்றால்- தெற்கில் வாழும் தமிழர்களின் நிலைமை என்னவாகும் என்பதாக இனவாதத்தின் வித்தை கக்கியிருக்கிறது. உண்மையில் இந்த வாழ்வுரிமை என்பதன் கருத்துரைப்பு தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவருகின்ற வடக்கிலே கடந்த காலங்களில் கிழக்கு மாகாணங்களில் முடுக்கிவிடப்பட்ட நில ஆக்கிரமிப்பு மற்றும் சிங்கள மக்களின் குடியேற்றத் திட்டங்களை ஒத்ததான ஒன்றின் உள்ளீர்ப்பைத் திட்டமிட்டு உட்புகுத்துவதற்கான ஆரம்ப கோலமிடலே.

இதற்கான ஆரம்பங்கள் வடக்கில் பல இடங்களில் முளைவிடத் தொடங்கியுள்ளது. இதனைத் தடுப்பதற்கு எவராலும் முடியவில்லை.. கதைப்பதற்கும் எவருமில்லை.. முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆட்சிக் காலங்களில் சிங்கள மக்களின் குடியேற்றங்கள் பெருமளவில் இடம்பெற்ற நிலையிலே தற்போது நல்லாட்சி அரசிலும் மணலாற்றிலே மீண்டும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதற்கான வீடமைப்புத் திட்டம் உதாவ என்ற பெயரிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

ஆக, தமிழ் மக்கள் தொடர்பான அரசின் கரிசனைகள் என்பது இந்த அரசிலும் எதிர்மறையானதாகவே இருந்து வருகின்றது. அவர்கள் வாயளவில் வார்த்தைகளோடு மட்டும் பேசி நிற்கின்ற நல்லிணக்கம், இன சமத்துவம் என்பன செயல்வலுப் பெறுவதாகத் தெரியவில்லை. மாறாக நியாயமான முறையிலே கேட்கின்ற, தர வேண்டியதை கோடிட்டுக் காட்டுகின்ற அபிலாசைகளின் தாற்பரியங்களை ஏற்க மறுத்து இடர்பாடுகளை கருத்துருவிலே வெளிக்கிளப்பி விட்டிருக்கின்றனர். ஆரம்ப காலங்களில் சமஷ்டி தொடர்பில் பேசவும் அதனை ஏற்றுக்கொள்ளவும் சித்தமாயிருந்த சிங்களத் தலைமைகளும் அவர்கள் சார்ந்த இனவாத அரசியல் (அடிமட்டங்களும் தற்போது தமிழ் சிங்கள மாநிலங்களிடையேயான சமஷ்டி முறையிலான




கூட்டாட்சி தொடர்பில் அரசியல் தீர்வுத் திட்ட வரைவை தமிழர் தரப்பு வெளிப்படுத்தியுள்ளபோது குழப்பம் விளைவிப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.. இன அழிப்பை மேற்கொண்டு ஓர் இனத்தை அடிமைப்படுத்திய கொடூரம் புரிந்தவர்களாக, நியாயாமான தீர்வுகளை வழங்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாகச் சிந்திக்க தலைப்பட வேண்டும். கடந்த கால அனுபவங்களைப் பாடமாக கொள்ள வேண்டும். ஒரு நல்லாட்சி அரசாக அதற்கான செயல் நிலைகளை இனியாவது முன்னிலைப்படுத்திச் செயற்பட வேண்டும்.

விநாயகன் சித்தி புத்தி கணபதியாக எழுந்தருள வேண்டும். அரசுக்கு நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும். விக்னேஸ்வரனாய் தமிழர் விக்கினங்களைத் தீர்க்க வேண்டுமென வேண்டுகிறோம்..! விக்கினங்கள் தீர்ப்பாரா விக்னேஸ்வரன்..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










## கடவுள் இல்லை என்று யார் சொன்னது....

ஒரு ஊரில் உள்ள சின்ன ஹோட்டல் ஒன்றில்...
ஒரு சிறுமி [கையில் தூக்கு வாளியுடன்]:
பாட்டி ...! அம்மா பத்து இட்லி வாங்கி வரச் சொன்னாங்க...! காசு நாளைக்கு தறாங்களாம்...
ஹோட்டல் நடத்தும் பாட்டி : ஏற்கனவே கணக்கு நிறைய பாக்கி இருக்கு.... அம்மாக்கிட்டே சொல்லம்மா.... தூக்கு வாளியைத் தா சாம்பார் ஊத்தித் தாரேன்....
[இட்லி பார்சலையும், சாம்பார் நிறைத்த தூக்குவாளியையும் அந்த சிறுமியிடம் கொடுக்கிறார்].
சிறுமி: சரி...அம்மாட்டை சொல்லுறன்... போயிட்டு வரேன் பாட்டி.... [சிறுமி கிளம்பி விட்டாள்]
அந்தக் கடையில் வாடிக்கையாக சாப்பிடுவது வழக்கம். ஆதனால் நான் கேட்டு விட்டேன்...
நான்: நிறைய பாக்கி இருந்தா ஏன் மறுபடியும் கொடுக்குறீங்க பாட்டி ....
பாட்டி : அட சாப்பாடு தானே. நான் முதல் போட்டுத்தான் கடை நடத்துகிறேன்... இருந்தாலும் இது மாதிரி சிறுவர்கள் வந்து கேட்கும்போது மறுக்க மனசு வரலை அப்பா ... அதெல்லாம் கொடுத்துடுவாங்க... என்ன கொஞ்சம் லேட் ஆகும்....எல்லோருக்கும் பணம் சுலபமாக சம்பாதிக்க முடியுது....
நான்: வீட்டிலேயே சமைச்சி சாப்பிடலாம் தானே?
பாட்டி: சிறுமி கேட்டிருக்கும்.. அதுதான் அனுப்பி இருக்காங்க.. நான் கொடுத்துடுவேன் அப்பிடி அவங்க நம்பிக்கையை நான் பொய்யாக்க விரும்பலை. நான் உழைச்சி சம்பாதிக்கிற காசு ... வந்துடும். ஆனால் இப்போதைக்கு அந்தக் குடும்பம் சாப்பிடுது அதுதான் முக்கியம். கடவுள் இல்லை என்று யார் சொன்னது.
இதைப் படிப்பவர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். இது போன்றவர்களை வாழ்க்கையில் சந்திக்க நேரிட்டால் உங்களால் ஆன உதவியை செய்து விட்டு வாருங்கள். சிறிய உதவி என்று எதுவுமே இல்லை. சரியான நேரத்தில் செய்யப்படும் எந்த உதவியும் ஞாலத்திலும் மாணப் பெரிது !!

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 5 | | | | 6 | | |
| | | | 6 | | | | | |
| | 4 | 6 | | 8 | | | 1 | 5 |
| | | 7 | | 9 | 1 | 4 | | |
| | 5 | | | | | | 3 | |
| | | 1 | 5 | 2 | | 7 | | |
| 8 | 2 | | | 5 | | 3 | 7 | |
| | | | | | 2 | | | |
| | | 3 | | | | 8 | | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 3 | 7 | 6 | 9 | 1 | 8 | 5 |
| 9 | 7 | 5 | 2 | 8 | 1 | 6 | 3 | 4 |
| 1 | 8 | 6 | 5 | 4 | 3 | 9 | 7 | 2 |
| 6 | 3 | 9 | 1 | 5 | 8 | 2 | 4 | 7 |
| 7 | 1 | 8 | 9 | 2 | 4 | 5 | 6 | 3 |
| 5 | 2 | 4 | 3 | 7 | 6 | 8 | 1 | 9 |
| 8 | 9 | 2 | 6 | 3 | 7 | 4 | 5 | 1 |
| 4 | 5 | 7 | 8 | 1 | 2 | 3 | 9 | 6 |
| 3 | 6 | 1 | 4 | 9 | 5 | 7 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## சுதீப்புடன் இணைகிறார் அமலா பால்

கன்னடத்தில் சுதீப் ஜோடியாக அமலா பால் நடிக்கிறார். தமிழ், கன்னடத்தில் உருவாகியுள்ள, "முடிஞ்சா இவனப் புடி" படத்தில் நடித்துள்ளார் சுதீப். இதை அடுத்து அவர் நடிக்கும் கன்னடப் படம், "ஹெப்புலி". இதை கிருஷ்ணா இயக்குகிறார். கன்னட ஹீரோ ரவிச்சந்திரன் சுதீப்பின் தந்தையாக இதில் நடிக்கிறார். சுதீப் ஜோடியாக அமலா பால் நடிக்கிறார். எதிர்வரும் மே மாதம் இதன் படப்பிடிப்பு தொடங்குகிறது.
இதுபற்றி அமலா பால் கூறும்போது, "ஏற்கனவே கன்னட படத்தில் நடிக்க எனக்கு பல முறை அழைப்பு வந்தது. இப்போது இந்தப் படம் மூலம் கன்னடத்தில் நுழைகிறேன். இதையடுத்து தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு தென்னிந்திய மொழிகளிலும் நடித்துள்ளேன் என்று பெருமையாகச் சொல்வேன்" என்றார்.





**மேடம்:** பொது இடங்களில் அதிகம் பேச வேண்டாம். தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வர தாமதமாகலாம். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**இடபம்:** பகைவரும் கூட நட்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர்.

**மிதுனம்:** தனித்திறமையுடன் செயற்பட்டு வளர்ச்சி காண்பீர்கள். தொழில், வியாபாரம் வியக்கும் விதத்தில் முன்னேற்றம் பெறும். வருமானம் உயரும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**கடகம்:** பணிச்சுமையால் சிரமத்துக்கு ஆளாகலாம். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு ஓரளவே கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தடை ஏற்பட்டு விலகும். இலாபம் சுமார். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். வருமானம் உயரும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கன்னி:** சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**துலாம்:** நண்பருடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. தொழிலில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** இலட்சிய எண்ணத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதமாகும். தொழில், வியாபாரம் செழிக்க, நவீன மாற்றங்களை பின்பற்றுவது அவசியம். மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மகரம்:** எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில், வியாபாரத்தில் தாராள வருமானம் கிடைக்கும். மனைவி விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். இஷ்டதெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

**கும்பம்:** குடும்பத்துக்காகத் தியாகம் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி பெருமளவில் குறையும். ஆதாயம் படிப்படியாக உயரும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.


**மீனம்:** கூடுதல் பணிச்சுமை ஏற்படலாம். தொழில், வியாபார விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். குடும்பத்துடன் சுற்றுலா செல்லத் திட்டமிடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 600 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 150 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 450 | – | – |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 600 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 400 | 400 | – | 350 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 400 | 400 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 350 | – | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 650 | – | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 250 | 200 | 200 | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 250 | – | 200 | 300 | – | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 150 | 100 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 250 | 150 | 200 | 200 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 350 | 200 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 300 | – | – |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 100 | 50 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 350 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 250 | – | – |



# பொட்டு வைக்கும் போது...

இன்றைய காலகட்டத்தில் பொட்டு ஒரு அழகு பொருளாக மாறி வருகிறது. அக்காலத்தில் குங்கும பொட்டு அல்லது சாந்து பொட்டு வைப்பார்கள். அது மழையில், வியர்வையில் அழிந்துவிடுவதால் கொஞ்சம் மாற்றி அது ஸ்ரஜக்கர் பொட்டாச்சு.

ஸ்ரிக்கர் பொட்டு ஆடைகளுக்கு தகுந்தது போல் கலர் கலராகவும் பல டிசைன்களிலும் வருகிறது. இன்று பூக்கள்,பிறை,மனித உருவம், நிலா, கல், பாம்பு வைத்த பொட்டு என்று நிறைய விதங்களில் கிடைக்கிறது. முகத்துக்குத் தகுந்த படி பலவிதங்களில் இன்று பொட்டும் கிடைக்கிறது.

**பொட்டுகளை தேர்ந்தெடுப்பது எப்படி?**

சிறிய நெற்றியை இரண்டு புருவங்களுக்கும் நடுவில் சின்ன பொட்டு வைத்தால் அழகாக இருக்கும்.

அகலமான நெற்றியைக்கொண்ட பெண்கள், பெரிய பொட்டை வைத்தால் நெற்றியில் அளவு சிறிதாக தெரிந்து அழகாக இருக்கும்.

கல்யாண விடேசங்களுக்கு போகும் பொழுது நல்ல அமைப்பான கல் வைத்த பொட்டு வைக்கலாம்.

வட்டமுகம் உள்ளவர்கள் கொஞ்சம் பெரிய பொட்டு வைத்தால் அழகாக இருக்கும்.

மாடல் டிரெஸ் போடும் பெண்கள் பொட்டு வைக்காமல் இருப்பதும் தனி அழகு தான்.

கோயிலுக்கு போகும்பொழுது, சாந்து பொட்டு, குங்குமம், விபூதி, சந்தன பொட்டு என்று வைக்கலாம்.

கல்யாணப் பெண் கள் பொட்டு வைத்தால் வீடியோவில் சரியாகத் தெரியாது. ஆகையால் சாதாரண ஸ்ரிக்கர் பொட்டு வைக்கலாம்.


# தேங்காய் லட்டு


**தேவையான பொருள்கள்:**

முந்திரி (கஜு)—அலங்கரிக்க
பால் – 2 கப்
துருவிய உலர்ந்த தேங்காய் – 6 கப்
சீனி – 4 கப்

**செய்முறை:**

முதலில் ஒரு பாத்திரத்தில் பாலை ஊற்றி அடுப்பில் வைத்து கொதிக்க விட வேண்டும். பாலானது நன்கு கொதித்ததும், அதில் துருவிய தேங்காய் சேர்த்து தொடர்ந்து கிளறி விட வேண்டும். பின் சீனியைச் சேர்த்து கிளறி, தேங்காயானது பாலை முற்றிலும் உறிஞ்சும் வரை கிளறிக் கொண்டே இறக்க வேண்டும். கலவையானது பாத்திரத்தில் ஒட்டாமல், திரண்டு வரும் போது, அதனை இறக்கி சிறிது நேரம் குளிர வைக்க வேண்டும். பின்பு கலவையானது வெதுவெதுப்பாக ஆன தன் பின்னர், அதனை உருண்டைகளாகப் பிடித்து, தனியாக ஒரு தட்டில் வைத்து, அதின் நடுவில் முந்திரியை வைத்து அலங்கரித்து நன்கு குளிர வைத்தால், இலகுவான சூப்பரான தேங்காய் லட்டு ரெடி!!!





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 80 | 50 | 80 | 20 | 40 |
| கத்தரி | 60 | 40 | 60 | 50 | 80 | 50 | 30 | 20 |
| கரட் | 80 | 80 | 120 | 120 | 80 | 140 | 85 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 200 | 160 | 100 | 200 | 180 | 120 | 140 | 60 |
| பாகல் | 120 | 100 | 120 | 120 | 140 | 120 | 100 | 40 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 80 | 100 | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 80 | 90 | 80 | 100 | 75 | 60 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 120 | 70 | 130 | 90 | 60 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 | 40 | 15 | 20 |
| தக்காளி | 80 | 80 | 80 | 100 | 100 | 120 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 30 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 20 | 20 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 80 | 100 | 100 | 120 | 70 | 70 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 | 60 | 60 | 20 | 40 |
| கோவா | 60 | 70 | 70 | 70 | 60 | 100 | 65 | 45 |
| வெண்டி | 100 | 50 | 80 | 80 | 80 | 60 | 50 | 30 |
| போஞ்சி | 140 | 120 | 120 | 140 | 160 | 120 | 110 | 120 |
| லீக்ஸ் | 140 | 100 | 140 | 160 | 120 | 140 | 120 | 90 |
| தேங்காய் | 40 | 30 | 50 | 40–50 | 30 | 40 | 15–28 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80–120 | 90 | 80 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 350 | 400 | 400 | 350 | 350 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 80 | 140 | 80 | 55 | 50 |
| இராசவள்ளி | 140 | 100 | 140 | 160 | 160 | 160 | 110 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 400 | 300 | 250 | 400 | 250 | 250 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |





## இது புதுசு

### இறகு வைத்த அலிஸ் பான்ட்

சிறுவர்களுக்கான இறகுவைத்த அலிஸ்பான்ட் அறிமுகமாகியுள்ளது. பல நிறங்களில், இறகுகளால் அலங்கரிக்கப்பட்ட அலிஸ்பாண்டுகள் விற்பனைக்கு வந்துள்ளன. இவற்றின் விலை 160 ரூபாவில் இருந்து 200 ரூபா ஆகும்.

**நாளை**
**சித்திரை-13**
செவ்வாய்க்கிழமை 26.04.2016
திதி: சதுர்த்தி பி.ப.05.06 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.ப.03.55 வரை
ராகுகாலம்: 02.59-04.29 வரை
சுபநேரம்: 10.29-11.59 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின்

இனந்தெரியாத மூன்று பேரினால் தனது கணவர் கடத் தப்பட்டுள்ளார் என, ராமின் மனைவி திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்' என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதயனிடம் உறுதிப் படுத்தினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அம்பாறை மாவட்டத் தளபதியாக இருந்த ராம், 2009 ஆம் ஆண்டு இராணுவத்தினரால், திருகோணமலையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இதன் பின்னர் அவர் புனர்வாழ் வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு அவர் விடு விக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் திருமணம் செய்து, அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் தம்பிலுவிலில் வாடகை வீட்டில் வசித்து வந்தார்.

நேற்றுக் காலை அவரது வீட்டுக்கு நீல நிற வானில் வந்த மூவர், முன்னாள் தளபதி ராமைக் கடத்திச் சென் றுள்ளனர். கடத்திச் சென்றவர்கள் யார் என்பது தனக் குத் தெரியாது என்று ராமின் மனைவி சுதாராணி பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். கடத்தல் இடம்பெறும்போது, மனைவி சம்பவ இடத்தில் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இவ்வாறான கடத்தல் சம்பவம் நடைபெற் றதாக, உறுதிப்படுத்திய பொலிஸ் பேச்சாளர், இது தொடர்பில் திருக்கோவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவித்தார்.

(த-வ-5-ரி4)



## மரண அறிவித்தல்கள்

### செல்வி இராசரத்தினம் சர்மினி

(காங்கேசன்துறை, சங்கானை)



சந்தைவீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், தேவாலயவீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராசரத்தினம் சர்மினி நேற்றுமுன்தினம் (23.04.2016) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் இராசரத்தினம்- காலஞ்சென்ற புஸ்பராணி தம் பதியரின் அன்பு மகளும், ராஜமோகன், ராஜினி, சுபாஜினி, ராஜாகமல் ஆகியோரின் அருமைச் சகோதரியும், அனுஷா, ஜீவகன், ரகுநாதன், அஜந்தா ஆகியோரின் பாசமிகு மைத் துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி, சங்கானை. (ஜே/665) (11.17.18)

தகவல்: குடும்பத்தினர்.
ஜீவகன் - 077 684 9985

### திருமதி தங்கமலர் காசிப்பிள்ளை



உரும்பிராய் ஞானவைரவர் கோயி லடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட திருமதி தங்கமலர் காசிப்பிள்ளை 24.04. 2016 ஞாயிற்றுக் கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சின்னப்பு சின்னையா (கறுவல் தம்பி)- கனகமுத்து தம்பதியரின் மூத்த மகளும், கோப்பாயைச் சேர்ந்த திரு.திருமதி பொன்னையா தம்பதியரின் மருமகளும், பாஸ்கரன் (கண்ணன் Rtd.T.O), நந்தினிதேவி (கிளி) ஆகியோரின் அன்புத் தாயும், K.P.பத்மநாதன் (Rtd உதவி விவசாயப் பணிப்பாளர்), கோமதி ஆகியோரின் அன்பு மாமியும், செல்வி யாமினி (ஆசிரியை - உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்), திருமதி ஜீவனி - பிரகலாதன் (விரிவுரையாளர்கள் - களனி, யாழ்ப்பாணம்), கௌசிகன் - ஜெயப்பிரதா (லண்டன்), நமேஷன் - வருஜிகா (கொழும்பு), சுபோஜினி- ராஜீவ் (லண் டன்) ஆகியோரின் பேர்த்தியும், சுவஸ்திகன், சுவானுகா, அனோஜ், அஜந், நிஷாரா, ஆரிஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான நடராஜா, துரைராஜா, லோகநாதன், றோசம்மா, சீதாலக்ஸ்மி மற்றும் இராசமலர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
ஞானவைரவர் கோயிலடி, 077 991 8147
உரும்பிராய். (ஜே.662) (13.18) 021 321 7961

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஈஸ்வரி சபாரெத்தினம் (சேனாதி)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டு இராஜேஸ்வரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி சபாரெத்தினம்(சேனாதி) நேற்று (24.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரெத்தினத்தின் (சேனாதி) அன்பு மனைவியும் மனோகரன், சோதிராசா(பிரான்ஸ்), சாந்தன், மூர்த்தி, கணேசன்(கனடா), காந்திமதி, சித்திராமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சரோஜினிதேவி, ரஜ்ஜினி தேவி, ஜெயராணி, இன்பவதி, கலா, சிவபாலன், லிங்கேஸ் வரன்(குவைத்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சோபனா, வாசுகி, அனுசனா, தருமினி,யிந்தினி,தனுசா, கார்த்திகா, ரேகா, நேருதாசன், ஜனதர்சன், வர்ஜனா, கஜனா, சவித்தா, இலக்கிகா, திலக்சன், சன்சிகா, சிந்துஜன், கரிகரன், கருனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாதுரியன், சுயேதன், சாருயா,சமிக்ஷா,மதுஷா, சிறிகௌதமன், யச்சுதா, கரிகரன், விஜிதரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.34, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு. (J/489) (14,17)

தகவல்: குடும்பத்தினர்.

### கந்தையா சிவராசசேகரன்

(4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)



பிறப்பு 01.04.1946 — இறப்பு 23.04.2016

புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தை நிரந்தர வதி விடமாகக் கொண்ட கந்தையா சிவராசசேகரன் 23.04.2016 சனிக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப் பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கயிலாயபிள்ளை - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மரு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சிவசோதி (ஆசிரியர்), சிவபாலன் (முகாமையாளர் - ப.நோ.கூ.ச) மற்றும் சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற பிறப்பு, இறப்பு விவாகப்பதிவாளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற கலைச்செல்வன் மற்றும் கலைச்செல்வி, பாஸ்கரன் (லண்டன்), புத்மப்பிரியா, காலஞ்சென்ற கோமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், வைத்திய கலாநிதி தயானந்தரூபன்,(பணிப்பாளர்- மாவட்ட பொதுவைத்தியசாலை முல்லைத்தீவு), மதுரா (லண் டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், போசிகன் (லண்டன்), ப்யானந்தி,குமரன், அபினேஸ், தேனுசாந், தனோஜா (லண்டன்), நித்தீஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணியளவில் பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(11.12) தகவல்: குடும்பத்தினர்.
077 383 7463

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் இரத்தினவேலு (சின்ராசா)



வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட ஆறு முகம் இரத்தினவேலு 23.04.2016 சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான ஆறு முகம் - அன்னம்மா தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பசுபதி தம் பதிகளின் அன்பு மருமகனும், சொர்ணத்தின் அன்புக் கணவ ரும், முருகையாவின் அன்புச் சகோதரனும், இராசரட்ணம், பாலசுப்பிரமணியம், செல்வராஜா, பாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோமதி (சுவிஸ்), யோகச்சந்திரன் (சுவிஸ்), திலகவதி (பிரான்ஸ்), கலாவதி (ஆசிரியை - யாழ்./ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), புஸ்பமாலா (காணி சுவீகரிப்பு உதவியாளர் - நல்லூர் பிரதேச செயலகம்), Dr. விமலன் (றாகம வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரன் (சுவிஸ்), இந்திராதேவி (சுவிஸ்), முரளிதரன் (பிரான்ஸ்), கோணலிங்கம் (அக்ஷா நகைக் கடை - யாழ்ப்பாணம்), Dr. சுதர்சினி (றாகம வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அனுஷா, அனுநிதன், அட்சயா, அபினேஷ், அபிஷேக், அஸ்மிகா, தாருகேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2016) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம் பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ஜே/658) (11.18)

61, காரைக்காட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்

### திருமதி கமலாதேவி புவனேஸ்வரன்



யாழ்.கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும், இல.867, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி புவனேஸ்வரன் நேற்று (24.04.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மாணிக் கம் தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - நாகரத்தினம் தம்பதிகளின் அருமை மரு மகளும், புவனேஸ்வரனின் (முன்னைநாள் பொதுமுகாமை யாளர் - கரைச்சி தெற்கு, கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கங்கள் சமாதான நீதவான்) பாசமிகு துணைவியாரும், கமலேசன் (முகாமைத்துவ உதவியாளர் - புதுக்குடியிருப்பு பிரதேசசபை, ஓலுமடு உப அலுவலகப் பொறுப்பு அலுவலர்) தர்மீசன் (டெமன் ஸ்றேற்றர் - யாழ்./மருத்துவபீடம்), மயூரதனி (முன்னாள் தாதிய உத்தியோகத்தர், தற்போது ஜேர்மனி), ஜோதிகா (யாழ். மருத் துவபீட இறுதி ஆண்டு மாணவி) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், கனகேஸ்வரி, சிவபாதசுந்தரம் மற்றும் விசாலாட்சி ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசேஸ் வரி (ஆசிரியர்), மகேஸ்வரன் (இந்திரன்) மற்றும் புவனேஸ் வரி, ஜெகதீஸ்வரி (கனடா), இராசேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சந்திரேஸ்வரன் (சந்திரன் - மெக்கானிக்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மாமிதா (ஆசிரியை - மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்), கஜனன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சப்தசி, கேசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டக்கச்சியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (25.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டக்கச்சி, கிளிநொச்சி.

தகவல்: குடும்பத்தினர்.

புவனேஸ்வரன் - 077 618 1856, கமலேசன் - 077 739 3738, ஜோதிகா - 077 968 0677, தர்மீசன் - 077 784 9842, மயூரதனி - 0049 152 1757 1619


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராசம்மா சுப்பிரமணியம்



தம்பாகலட்டி அளவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் செட்டிச்சோலை. அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா சுப்பிரமணியம் நேற்று (24.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் கனகசபை காலஞ்சென்ற கனகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்சினி. விக்கினேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் பிருந்தா (அளவெட்டி பன்னாலை சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்). பிரணவன், பிரவீனன்.யசோகன், துவாரகன், கிரிவரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கு.**

**தகவல்: சு.கனகசபை**
**077 985 7450**

## கந்தசாமி உலகநாதன்



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிட மாகவும் பசறை "நாதன் ஸ்ரோர்ஸ்" உரி மையாளரும் தற்போது கொக்குவில் அம் மன் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி உலகநாதன் நேற்று (24.04. 2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்த சாமி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க் கண்டு - பூரணம் தம்பதியரின் அன்பு மரு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கண வரும், நாகபூசணி (மருந்தாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), சாந்தினி (கனடா), ஆகி யோரின் அன்புத் தந்தையும், யசோதரன் (ஆசிரியர், சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்), சுதாகரன் (கனடா) ஆகி யோரின் மாமனும், லதுஜனன், அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற தங்கமுத்து, நாகேஸ்வரி, பத்மநாதன், தில்லைநாதன், சண்முகநாதன், சிவநாதன் ஆகியோரின் சகோதரனும்,கதிரவேலு காலஞ்சென்றவர்களான அருளம்பலம், சண்முகநாதன், சிவபாதசுந்தரம், நடராசா, ஜெகதீசன், நாகேஸ்வரி மற்றும் சதாசிவம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (28.04.2016) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்கு வில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**
**021 205 2184, 077 154 7087**

## திருமதி சிவபாக்கியம் (குஞ்சரம்) கணபதிப்பிள்ளை (காரைநகர்)



காரைநகர் மேற்கு. சின்னாலடியைப் பிறப்பிட மாகவும் இல.56. கலைவாணி மில் ஒழுங்கை. கொக்குவில் கிழக்கு. கொக்குவிலை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கணபதிப் பிள்ளை நேற்று (24.04.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திரு மதி. வைத்தியலிங்கம்-நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர் களான திரு.திருமதி சங்கரப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கணபதிப் பிள்ளையின் அன்பு மனைவியும். இந்திராணி (லண்டன்). செல்வ ராணி (ஓய்வுநிலை ஆசிரியை. மன்னார்). தியாக லிங்கம் (லிட்டில் ஏசியா. வெள்ளவத்தை). காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் கணேச லிங்கம் (அமெரிக்கா). சுந்தரலிங்கம் (ஆசிரியர். புனித அந்தோனியார் கல்லூரி. ஊர் காவற்றுறை. முன்னாள் அதிபர், தம்பாட்டி அ.த.க.பாட சாலை. அதிபர். யா/வியாவில் சைவ வித்தியாலயம். காரைநகர்). ஜெயராணி (லண்டன்). நந்தகுமார் (சுவிற்சர்லாந்து) ஆகி யோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற அம்பல வாணர் மற்றும் பஞ்சநாதன் (ஓய்வு நிலை கணக்காளர். மன்னார்). பத்மாவதி. சிவலிங்கம் (சிவா. என்டர்பிறைசஸ். நுவ ரெலியா). இந்திராணி. தெய்வ மாலினி. இராஜவ ரோதயம் (லண்டன்). சந்திரகுமாரி ஆகி யோரின் அன்பு மாமியும். சிவசக்தி. சிவ ரூபி. குணசீலன். சத்தியசீலன். கரன். காண் டீபன். கலைப்பிரியா. சுதன். சசிதரன். பிரியதர் சினி. சிவரூபன். சிவரஞ்சன். சிவகாந்தன். ஜஸ்வினி. ஷாலினி. ஷர்மிளா. யசோதரன். திருமகள். சுரேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 56. கலைவாணி மில் ஒழுங்கை. கொக்குவில் கிழக்கு. கொக்குவிலில் அமைந்துள்ள இல்லத்தில் நாளை (26.04.2016) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணிக்கு நடைபெற்று காலை 09.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள் ளவும்.

**56, கலைவாணி மில் ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**021 222 9909, 077 628 2586**

**தகவல்:**
**க. சுந்தரலிங்கம் (அதிபர், யா/ வியாவில் சைவ வித்தியாலயம்).**

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னபூரணம் (சாறாள்) இராமலிங்கம்

பிறப்பு
15 . 03 . 1924



இறப்பு
24 . 04 . 2016

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் இராமலிங்கம் நேற்று (24.04.2016) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலாயுதம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமலிங்கத்தின் (ஆபிரகாம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா கணபதிப்பிள்ளை, செல்லம்மா செல்லத்துரை, சுப்பிரமணியம், நல்லையா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் தீனதயாபரன் (கொழும்பு), ஏகாம்பரம், கொங்காதேவி (மேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கல்விநாயகி, திலகவதி, கந்தசாமி (டேவிட்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சசிகுமார், சசிரூபினி, அபிவர்ணா,ஏஞ்சலா, எபிநேசர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நுணாவில் குச்சப்பிட்டி ஜெயஜீவிய சபை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கத்தானை, 2ஆம் ஒழுங்கை,**
**டச்சு றோட், சாவகச்சேரி.**

(சி/21262)(11.17.18)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 911 6231, 077 050 6255**

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கரெத்தினம் சிவசுந்தரம்

(பழம் அக்கா- N.S.S உரிமையாளர்)

மலர்வு
18 . 02 . 1946



உதிர்வு
22 . 04 . 2016

யாழ் வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி தங்கரெத்தினம் சிவசுந்தரம் (பழம் அக்கா) 22.04.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (சம்மாட்டியார்) - பாலமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசுந்தரத்தின் அன்பு மனை வியும் சோபனாவின் (நோர்வே) பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான பக வதி அம்மா. தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சக்திவேலின் (தண்ணன்-நோர்வே) பாசமிகு மாமியாரும் கீர்த்தன் (நோர்வே). அபிநயா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் ஆலடி ஒழுங்கை வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :**
**சாந்தகுமார்: 077 912 9055**
**[illegible]: 077 281 4313**

தகவல்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### டொமினிக் கனியூட் இம்மானுவல்

(முன்னாள் ஞானம்ஸ் ஸ்ரூடியோ புகைப்படப்பிடிப்பாளர்)



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைப் வசிப்பிடமாகக் கொண்ட டொமினிக் கனியூட் இம்மானுவல் நேற்று (24. 04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான தோமஸ் இம்மானுவல்-பொன்றோஸ் தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஜோசப்- மரியம்மா தம்பதிகளின் மருமகனும், நீற்றம்மாவின் (ராசாத்தி), அன்புக் கணவரும், வய லற் இம்மானுவலின் (இளைப் பாறிய ஆசிரியர் யா/திருக் குடும்பக் கன்னியர் மடம்) அன்புச் சகோதரனும், குயின்ரஸ் ஜீவன், சந்திரிக்கா (ஜேர்மனி), கேந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியேந்திரன் (லண்டன்), மோகனா (ஆசிரியர். யா/புனித ஜோன் பொஸ்கோ), வைதேகி ஆகியோரின் அன்பு மாமனும், பிறயன், ரிறோன், கெவின், அறோன் ஆகியோரின் அன்புப் பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை பி.ப. 03.30 மணிக்கு புனித யுவானியார் ஆல யத் தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்கி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**Northern Office Automation**

### வீரமுத்து கனகரெத்தினம்



மண்டை தீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரமுத்து கனகரெத்தினம் 24. 04.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரமுத்து-செல்லம் மா தம்பதியரின் அன்பு மக னும் காலஞ்சென்றவர் களான ஐயம்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மரு மகனும் கனகலட்சுமியின் அன்புக் கணவரும் காந்திமதி காலஞ் சென்ற யோகரத்தினம் மற்றும் கலைநேசன் ஆகியோரது அன்புத் தந்தையும் நமசிவாயத்தின் பாசமிகு சகோத ரனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சண்முக ராசா மற்றும் பவளம்மா, மகாலட்சுமி ஆகியோரின் மைத் துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

### இளையதம்பி செல்வரட்ணம்



பாடசாலை வீதி, கட்டைவேலி கரவெட்டியைச் சேர்ந்த இளையதம்பி செல்வரட்ணம் நேற்று முன்தினம் (23.04.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் இளையமகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமக னும், ஈஸ்வரதேவியின் அன்புக் கணவரும், வாசுகி (லண்டன்), ரதி (லண்டன்), நிஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், இரவீந்திரன் (லண்டன்), வசந்தகுமார் (லண்டன்), துஸ்யந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், பிரசன்யா, பிரவீனா, றதுஸ், திபிஷா, மதுஸ், லதுஷன், நீதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாடசாலை வீதி,**
**கட்டைவேலி,கரவெட்டி**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### விநாயகமூர்த்தி வினோதன்

(பழைய இரும்பு வர்த்தகர் சுன்னாகம்)



புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் (ஊரதீவு) பிறப்பிடமாகவும் முதலியார் லேன் அரியாலை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி விநோதன் நேற்று (24. 04.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் விநாயகமூர்த்தி - தங்கலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் ஷாலினியின் (லண்டன்) அன்புச் சகோதரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை இல 9, முதலியார் லேன் அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல 9, முதலியார்லேன்,**
**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**ச.விநாயகமூர்த்தி (தந்தை)**
**க. தம்பிஜயா (தாய் மாமன்)**

### திருமதி தனராணி (ராணி) சத்தியதேவன்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனராணி சத்தியதேவன் நேற்று (24. 04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம்-புனிதவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை- அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் சத்தியதேவனின் அன்பு மனைவியும் ஜெகன்,பிரதீபன், கிருசாலினி ஆகியோரது பாசமிகு தாயாரும் கோகுலவதியின் அன்பு மாமியாரும் ஓவியாவின் அன்புப் பேர்த்தியும் தனராஜ் அவர்களின் அன்புச் சகோதரியும் மகாதேவன், வசந்ததேவன், றஞ்சன், இந்திராதேவி, சாந்தினி ஆகியோரின் மைத்துனியும் செல்வப்பிரகாசத்தின் மருமக ளும் (தாய் மாமன்) ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை கோண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

### முருகேசபிள்ளை சிவகுமார்

(ஓய்வு பெற்ற முகாமையாளர் மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசபிள்ளை சிவகுமார் நேற்று (24. 04.2016 ) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா-புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜமுனாதேவியின் அன்புக் கணவரும் பிரபாலினி, பிரகாஷ், பிரசாளினி ஆகியோரது அன்புத் தந்தையும் உதயனின் பாசமிகு மாமனாரும் கபிஷாவின் பேரனும் சந்திரகுமார் (ஆசிரியர் சென்.ஜோன்ஸ் கல்லூரி), பிரேமராணி, நிர்மலராணி (பிரதி அதிபர் சண்டி லிப் பாய் இந்துக் கல்லூரி), பிரேம்குமார் (பிரதி அதிபர் கிளி நொச்சி இந்து கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதர னும் கெங்காதேவி, ரஞ்சினிதேவி ஆகியோரின் மைத்துனருமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04. 2016) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னா ரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்: குடும்பத்தினர்.**
**077 647 0305**

## மரண அறிவித்தல்கள்

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது"
சங் 116:15

### திருமதி கனகேஸ்வரி (மரியா) நவரட்ணம்

அன்னை மடியில்
25 . 03 . 1934



ஆண்டவர் அடியில்
24 . 04 . 2016

யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி (மரியா) நவரட்ணம் நேற்று (24.04.2016) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் நவரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தில்லையம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகளும், காலஞ்சென்ற யோகநாதன், அழகேஸ்வரி, கயிலநாதன் (பிரான்ஸ்), இராமநாதன் (கனடா), தில்லைநாதன், காலஞ்சென்ற ஜெகநாதன், சர்வேஸ்வரி (லண்டன்), அற்புதநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சின்னமணி), காலஞ்சென்ற வசந்தா ஆகியோரின் மைத்துனியும், குகபாலன் (பென்ஜமீன்-தேவ ஊழியர். Torondo Harvest Missionary Church- Canada), சிவரூபி ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராசா, அமிர்தநாயகி (யூலியாடலா-கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நிலானி (கனடா),வைஷ்ணவி, சுஜீவன் (பிரான்ஸ்), பிரணவன் (தரம் 11 மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (26.04.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக நீர்வேலி சீயாக்காடு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி நாகேஸ்வரி முத்துக்குமாரசாமி

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி முத்துக்குமாரசாமி (24.04. 2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து முத்துக்குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், கௌரியின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, புவனேந்திரன், நாகேந்திரன் மற்றும் பரமேஸ்வரி (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி வீதி,**
**சங்கானை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சா

அதனை மீட்டுள்ள பொலிஸார், 6 பேரைக் கைது செய்துள்ளனர் எனவும், அவர்களிடமிருந்து படகு, ஆள்கூறுப் புள்ளியிடல் கருவி என்பன கைப்பற்றப் பட்டதாகவும் வடமராட்சிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். ஏ. ஜவ்பர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில், குறித்த சந்தேக நபர்கள் கஞ்சாவை வாங்கி இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரமுயன்ற நிலையில், கடத்தல் கும்பல்களால் அவர்கள் ஏமாற்றப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

வடமராட்சி - இன்பர்சிட்டி கடலூடாகக் கஞ்சா கடத்தல் நடைபெற இருப்பதாகவும், அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கஞ்சாவைக் கொள்வனவு செய்ய இந்தியா சென்றுள்ளார் எனவும், பொலிஸாருக்கு இரகசியத் தகவல் நேற்று முன்தினமிரவு கிடைத்துள்ளது.

இதனை அடுத்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரணதுங்க தலைமையில், விசேட பொலிஸ் பிரிவு ஒன்று, உதவி பொலிஸ் அத்தியட்சகரின் வழி நடத்தலில் தேடுதல் நடத்தியுள்ளது.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 3 மணிக்குப் பருத்தித்துறை கடற்பகுதியில் கரையேறிய படகைப் பொலிஸ் அணி அதிரடியாக சுற்றிவளைத்துச் சோதனையிட்டது. இதன்போதே படகில் இந்தியா சென்றிருந்தார் என்று கூறப்பட்ட நவரத்தினம் கோணேஸ் என்பவர் உட்பட 6 பேர் இருந்தனர் எனவும், அவர்களின் படகில் இந்தியப் பதிவை உடைய பி.வை 02.D 0274 இலக்கமுடைய பஜாச் ரக மோட்டார் சைக்கிள் மற்றும் உரைப்பை ஒன்றினுள் புளியம்பழங்கள் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த 6 பேரும் கைது செய்யப்பட்டதோடு, அவர்களின் படகுகள் இந்தியப் பதிவு மோட்டார் சைக்கிள் மற்றும் ஆள் கூறுக் கருவி என்பன கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

குறித்த சந்தேக நபர்கள் கஞ்சா எடுத்து வருவதற்கு இந்தியா சென்றபோது, அவர்களைக் குறித்த ஆள்கூறு புள்ளியில் சந்திக்குமாறு கடத்தல் கும்பலினால் கோரப்பட்டுள்ளது. எனினும் அங்கு சென்றபோது, பணத்தை வாங்கிவிட்டு, புளியம்பழ மூடை வழங்கிக் கடத்தல் கும்பலால் ஏமாற்றப்பட்டமை ஆரம்ப விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

இந்த நிலையில் கைதான சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-4-108-109)

## கிராம

தெரிவித்தார்.

முல்லைத்தீவு - கொக்கிளாய் வடக்கில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக, கிராம அலுவலர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றனர். இதன்போது அங்கு வந்த இராணுவத்தினர் கிராம அலுவலரின் அடையாள அட்டையை பறித்ததுடன், அவர்களை அச்சுறுத்தியிருந்தனர். இது தொடர்பில் கிராம அலுவலர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் எந்தவொரு விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்று சிவில் அமைப்புக்களால் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் இராணுவப் பேச்சாளரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இராணுவப் பொலிஸார் இது தொடர்பில் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். விசாரணை இன்னமும் முடியவில்லை. நாளைய தினம் (இன்று) இது தொடர்பிலான விசாரணை முடிவை வெளியிடக் கூடியதாக இருக்கும் என்று கூறினார்.

(த-வ-5)

## மன்னிப்பு

யிட்டிருந்தனர். இதனையடுத்து அந்த மக்களையும் அழைத்துக் கொண்டு பரவிப்பாஞ்சானுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சென்றிருந்தார்.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் எதிர்க்கட்சித் தலைவரை அனுமதித்தமை தொடர்பில், இராணுவத் தரப்பினால் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலரும் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

இந்த நிலையிலேயே, ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர், இரா.சம்பந்தன் இராணுவத்தினரிடம் மன்னிப்புக் கேட்டவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத்தில் முக்கிய பதவியை வகிக்கும் இரா.சம்பந்தனின் இந்தச் செயற்பாடு, நாட்டில் சமாதானத்தை விரும்பும் அனைவரும் வெறுக்கும் ஒரு நடவடிக்கை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(த-வ-5)

## நிலாவரைக்

குறித்த கிணற்றின் ஆழம் தெரியாது என்று கூறப்பட்டு வந்த நிலையில், சடலம் 152 அடி ஆழத்தில் இருந்தமை மூலமாக அதன் ஆழம் 152 அடியை விட அதிகமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஆனால் அது 152 அடி தானா அல்லது அதனைவிட அதிகமா என்பது பற்றிய உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

கொழும்பிலிருந்து வந்த விசேட குழுவினரும், கடற்படையினரும், அச்சுவேலிப் பொலிஸாரும் இணைந்து சடலத்தை மீட்டனர். அந்தச் சடலத்தை மீட்கவே திருகோணமலையிலிருந்து ரோபோ எடுத்து வரப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு 10. 45 மணியளவில் தேடுதல் தொடங்கப்பட்டது. அந்த ரோபோ தன்னியக்கக் கருவி மூலமாக இயக்கப்படுவது. அதில் வயர் இணைக்கப்பட்டு நிலாவரைக் கிணற்றினுள் இறக்கப்பட்டது. அது 152 அடி ஆழம் வரைக்கும் சென்று சடலம் இருக்கும் இடம் கண்டறியப்பட்டது. அந்த ரோபோவில் சக்திமிக்க கமரா பொருத்தப்பட்டு மின்னொளிக் கருவியும் பொருத்தப்பட்டு கிணற்றினுள் இறக்கப்பட்டது.

குறித்த ரோபோ கிணற்றினுள் செல்லும்வரையுள்ள பகுதிகளை கமராவினால் படம்பிடித்துக் கொண்டு சென்றது. அதனைக் கிணற்றின் மேலே இருந்து விசேட குழு கணினியில் கண்காணித்துக் கொண்டிருந்தது. அதன்போதே 152 ஆவது அடி ஆழத்தில் சடலம் இருப்பதை ரோபோ கண்டறிந்துள்ளது. இதனையடுத்து கடற்படையினரின் சுழியோடிகள் குறித்த கிணற்றினுள் இறக்கப்பட்டு சடலத்தை மீட்டெடுத்தனர். அங்கு மரக்கிளை ஒன்றினுள் செருகுண்ட நிலையில் சடலத்தை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சுமார் 8 மணித்தியாலங்களின் பின்னர், சடலத்தை நேற்றுக் காலை 6.45 மணியளவில் மீட்க முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை - கற்கோவளத்தைச் சேர்ந்த சரவணமுத்து தேவதாசன் (வயது -75) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் குறித்த நபர் கிணற்றடிக்குச் சென்று, கிணற்றுக் கட்டில் இருந்தார் என்றும், பின்னர் கிணற்றினுள் குதித்துள்ளார் என்றும் விசாரணையில் தெரிய வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பொலிஸார் மேலும் கூறினர். (த-வ-4)

## வடக்கு அரசின்

குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையின் தீர்வு வரைவை ஏற்பதா, இல்லையா என்பது முக்கியமில்லை. இது அரசமைப்புக்குப் பொருத்தமா, இல்லையா என்பதுதான் முக்கியம்.

வடக்கு மாகாண[illegible] னித்துள்ளன. [illegible] கியுள்ளது. தீர்மானம் தொடர்பில் கலக்கம்டையத் தேவையில்லை என ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார். (த-வ-5)

## வடக்கு மாகாண

எதிர்க்கருத்துக்கள் எழத் தொடங்கியுள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா, வடக்கு அரசின் தீர்வுத் திட்டத்தைக் கொழும்பு அரசு ஏற்காது என்று தெரி வித்துள்ளார். சமஷ்டி அடிப்படை யிலான அதிகாரப் பகிர்வுக்கு இந்த அரசு ஒருபோதும் இணங்காது என்றும் அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவிக்கையில்,

மாகாண சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பதவி ஏற்கும்போது சத்தியப்பிரமாணம் செய்கின்றனர். அதில், ஒற்றையாட்சிக்கு உட்பட்டுச் செயற்படுவோம் என்றும், நாட்டைப் பிரிக்கமாட்டோம் என்றும் சத்தியப்பிரமாணம் செய்த பின்னரே, பதவியை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் அதனை மீறிச் செயற்படுகின்றனர். எனவே அரசு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார்

இராஜதந்திரி தயான் ஜயத்திலக குறிப்பிடுகையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சில விடயங்களில் மாத்திரமே அவைகள் தீர்மானங்களை நிறைவேற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். நாட்டின் இறைமையுடன் - அதிகாரப் பகிர்வுடன் தொடர்புடைய விடயங்களில் மாகாண சபைக்கு எந்த அதிகாரமும் இல்லை. மத்திக்கே முழுமையான அதிகாரம் உண்டு. வடக்கு மாகாண சபை இந்த விடயத்தில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கின்றது.

இதேபோன்று கடந்த காலங்களில் இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அவர்களுக்கு அதிகாரமில்லாத ஒன்றைச் செய்கின்றார்கள். வடக்கு அரசு இவ்வாறு செய்வதைக் கொழும்பு அரசு புரியாமல் இருக்கின்றதா ? அல்லது புரிந்தும் முதுகெலும்பில்லாமல் நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றதா ? - என்றார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவிக்கையில், ஒற்றையாட்சிக்கோ - நாட்டின் ஐக்கியத்துக்கோ பாதிப்பு - பங்கம் ஏற்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது - என்றார்.

தூய ஹெல உறுமயவின் தலைவரும், மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில குறிப்பிடுகையில், வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை பயங்கரமானது. நாட்டின் அரசமைப்புக்கு எதிரானது. அரசு இதில் மௌனம் சாதிக்கக் கூடாது. உடனடியாக வடக்கு மாகாண சபையைக் கலைத்து, அதிகாரங்களை ஜனாதிபதி எடுத்துக் கொள்ளவேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் நேற்று கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையில்,

தேசியபிரச்சினைக்கு மாகாணசபை முறைமைதீர்வு அல்ல என்று நாமே கூறினோம். அது இன்று உறுதியாகியுள்ளது. எனவே, வடக்கு மாகாணசபையின் சமஷ்டி கோரிக்கையானது இனவாதத்தை தூண்டும் செயலாகும்.

இதனால், சிங்கள இனவாதமும் தலை தூக்கும். இதை ஒருபோதும் நடைமுறைப் படுத்த முடியாது. நாட்டுக்கு பொருத்தமான தீர்மானமும் இல்லை - என்றார். (த-வ-5)

## தமிழ்

விஸ்தரிக்கும் நடவடிக்கையையும் மகாவலி அதிகார சபை மேற்கொண்டுள்ளதாக, மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போர் நடவடிக்கை காரணமாக 1983 ஆம் ஆண்டு காலப் பகுதியின் பின்னர் மணலாறு, கொக்கிளாய் பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் வெளியேறியிருந்தனர். தமிழ் மக்கள் அந்தப் பகுதிகளுக்கு விடுவிக்கப்பட முன்னரே, மணலாற்றில் பெரும்பான்மை இன மக்களுக்கு, தமிழ் மக்களின் காணிகள் அரசினால் வழங்கப்பட்டன. மகாவலி அதிகார சபையினால் அந்தக் காணிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தன.

இதனால் பெருமளவிலான தமிழ் மக்கள், தங்களது காணிகளை இழந்திருந்தனர். இவர்கள் தமக்குக் காணிகள் மீள வழங்கப்படவேண்டும் என்று தொடர்ச் சியாக அழுத்தம் கொடுத்து வந்தனர். இவர்களுக்கு மாற்றுக் காணி வழங்குவதற்கு மகாவலி அதிகார சபை இணங்கியிருந்தது.

இந்த நிலையில், கடந்த வியாழக் கிழமை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மகாவலி அதிகார சபையின் உயர் அதிகாரிகள் வருகை தந்தனர். அவர்கள் மாற்றுக் காணி வழங்கப்படும் முறிப்புக்குளப் பகுதியைச்சென்றுபார்வையிட்டிருந்தனர்.

அத்துடன் கொக்கிளாய் - நாயற்றுப் பாலத்துக்கு அருகில் மகாவலி அதிகார சபைக்குக் கட்டடம் அமைப்பதற்கு 354 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கியுள்ளனர்.

மக்களுக்கு மாற்றுக் காணி வழங்குதல் என்ற நடவடிக்கையில், மேலும் பல ஏக்கர் காணிகளை மகாவலி அதிகார சபைக்குக் கையகப்படுத்தும் நடவடிக்கையே இது என்றும், இதற்காகவே நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கும் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மாவட்டச்செயலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

(த-வ-5-101)

## கொள்ளைக்

ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த கும்பல் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தக் கைது சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கடந்த 22 ஆம் திகதி யாழ். பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், இந்தக் கொள்ளைக் கூட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர் எனச் சந்தேகிக்கும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் கொள்ளையிட்ட பொருளொன்றை வேறொருவருக்கு விற்பதற்காக முயற்சித்தபோதே, கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரனைகளை அடுத்து, சம்பவத்துடன் தொடர்புபட்ட ஓர் பெண் உட்பட மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், இவர்கள் கடந்த 15 ஆம் திகதி சில்லாலைப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து. 12 பவுண் நகைகளையும் இரண்டு விலையுர்ந்த அலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்களையும் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன் கோப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து, விலையுர்ந்த மோட்டார் சைக்கிள் இரண்டையும் மடிக் கணினி மற்றும் அலைபேசிகளையும் திருடியுள்ளமையும் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

இதேபோன்று வேறு இடங்களில் இருந்தும் அலைபேசிகளைத் திருடியமையும் விசாரணைகளின் மூலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்தக் கொள்ளைக் குழுவால் கொள்ளையடிக்கப்படுகின்ற நகைகளை கைது செய்யப்பட்ட பெண்ணே வங்கிகளில் அடகு வைத்துத் கொடுக்கின்றார். அத்துடன் கொள்ளைச் சம்பவங்களுக்கு இவர் உடந்தையாகச் செயற்பட்டுள்ளமையும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் அதிகாரி எஸ்.சிறிகஜன் தெரிவித்தார்.

மேலும் இந்தக் கொள்ளைச் சம்பவங்களின்போது, கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை, அது கொள்ளையடிக்கப்பட்ட பொருள் எனத் தெரிந்தும் வாங்கியவர்களைக் கைது செய்துள்ளதாகவும், அது கொள்ளையடிக்கப்பட்ட பொருள் எனத் தெரியாமல் கொள்வனவு செய்தவர்கள் சாட்சியாக மாற்றியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(த-வ-4-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் மத்தி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 25

மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

குறித்த அரையிறுதியாட்டம் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஆவரங்கால் மத்திய அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)



# கிண்ணம் வென்றது வீனஸ் அணி பருத்தித்துறை எல்லே தொடரில்

யாழ்ப்பாணம், ஏப். 25

பருத்தித்துறை இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லேயில் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து சித்திவிநாயகர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 30பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக லோஜனன் 3 ஓட்டங்களையும், பிரதீபன் 2 ஓட்டங்களையும், பிரசாந் 2 ஓட்டங்களையும் பெற்றனர்.

30பந்துகளில் 14 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சித்திவிநாயகர் அணியால் நான்கு ஓட்டங்களையே பெற முடிந்தது. இதனையடுத்து வீனஸ் அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-422)

# நக்கீரன், சிவானந்தா முன்னேற்றம் இமையாணன் மத்தியின் தொடரில்

கரணவாய், ஏப். 25

இமையாணன் மத்திய வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம், கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**நக்கீரன் - கரவைச்சுடர்**

இமையாணன் மத்திய வி.கழகத்தின் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் கரவைச் சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி. கோல்கள் இல்லாமல் இரண்டாம் பாதி நகர்ந்து கொண்டிருந்தாலும் ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் நக்கீரன் அணியின் கபில் தனது அணியின் முதல் கோலைப் பதிவு செய்ய அக்கோலே ஆட்டத்தில் ஒரே கோலாகவும் அமைந்தது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நக்கீரன் அணி.

**சிவானந்தா - கருணாகரன்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது. ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் சிவானந்தா அணியின் சுயாந்தன் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். மாற்றம் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியும் சிவானந்தாவின் ஆதிக்கத்துடன் நகர்ந்து கொண்டிருந்தது. இறுதி நிமிடம் வரை கருணாகரனால் பதில் கோலைப் பதிவுசெய்ய முடியாது போக முடிவில் 1:0 கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம்.

ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், மாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சிவசிறி உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-108)

# யாழ் , கரவெட்டி அணிகள் அரையிறுதிகளுக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். மாவட்ட பிரதேச செயலக கழகங்களின் ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் யாழ், கரவெட்டி பிரதேச செயலக அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

அரியாலையில் உள்ள கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த காலிறுதியாட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது காலிறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் கரவெட்டி பிரதேச செயலக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# மாகாணமட்ட பெருவிளையாட்டுக்கள் அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகின்றன

மாங்குளம், ஏப். 25

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுக்கள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதன் முதற்கட்டப் போட்டிகள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு 23ஆம் திகதி வரை மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ளன. முதற்கட்ட போட்டிகளாக பூப்பந்தாட்டம், எல்லே, மேசைப்பந்தாட்டம் போன்றன நடைபெறவுள்ளன.

இதன்படி 15வயது, 19வயதுப் பிரிவினருக்கான இருபாலாருக்குமான பூப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் மே மாதம் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. இவர்களுக்கான தங்குமிடங்களாக ஆண்களுக்கு மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலையும், பெண்களுக்கு மன்னார் சென்.சேவியர் பெண்கள் பாடசாலையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

19வயதுப் பிரிவில் இருபாலாருக்குமான எல்லேத் தொடர் மே மாதம் 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்திலும், மன்னார் முருங்கன் பொது விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளன. இவர்களுக்கான தங்குமிடங்களாக ஆண்களுக்கு மன்னார் கற்கடந்தகுளம் றோ.க.த. பாடசாலை, பனிக்கங்கண்டல் அ.த.க.பாடசாலையும், பெண்களுக்கு மன்னார் முருங்கன் மகா வித்தியாலயமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

15வயது, 19வயதுப் பிரிவினருக்கான இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டம் மே மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. இவர்களுக்கான தங்குமிட வசதிகளாக ஆண்களுக்கு மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலையும், பெண்களுக்கு மன்னார் சென்.சேவியர் பெண்கள் பாடசாலையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-422)

# கிண்ணம் வென்றது தெல்லிப்பழை யாழ். பிரதேச கால்பந்தாட்டத்தில்



கரணவாய், ஏப். 25

யாழ். பிரதேச செயலகங்களின் பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் நடப்பு வருடத்தின் சம்பியனானது தெல்லிப்பழை பிரதேச அணி.

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினர் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதிய இந்த ஆட்டத்தில், ஆட்டத்தின் நிறைவுப் பகுதியில் தெல்லிப்பழை அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது. ஆட்டம் முடிவடைய சில நிமிடங்கள் இருந்த போது நடுவரின் தீர்ப்புக்கு ஆட்சேபம் தெரிவித்து உடுவில் அணியினர் மைதானத்தை விட்டு வெளியேறினர். அவர்கள் தொடர்ந்தும் விளையாட [illegible] தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ம-108)

# ஐ.பி.எல்லை நேசிக்கிறோம் வில்லியர்ஸ் பெருமிதம்

ஐ.பி.எல். தொடரை தென்னாபிரிக்க வீரர்கள் அதிக அளவில் நேசிப்பதாக அந்த நாட்டைச் சேர்ந்த முன்னணி வீரர் வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

நடப்பு ஆண்டில் 15 தென்னாபிரிக்க வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் விளையாடி வருகின்றனர். இது தொடர்பாக வில்லியர்ஸ் தெரிவிக்கையில், - ஐ.பி.எல். தொடர் மூலம் எங்களது ஆட்டம் புதிய மட்டத்துக்குச் சென்றுள்ளது. இதற்கெல்லாம் பிரதானமாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்குத்தான் நன்றி தெரிவிக்க வேண்டும். அவர்கள் அனுமதிதராவிட்டால் நாங்கள் ஐ.பி.எல்லில் களமிறங்க முடியாது. நாம் ஐ.பி.எல்லை நேசிக்கிறோம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்றது மருதநிலா

யாழ்ப்பாணம், ஏப். 25

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மருதநிலா அணி வெற்றிபெற்றுள்ளது.

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் எந்தவித கோல்களையும் பெறாததனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. இதில் மருதநிலா அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், ஏப். 25

வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை அன்பாலயம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)



# கோக்லியின் அதிரடிச் சதம் வீண்

# வெற்றிக்குத் திரும்பியது குஜராத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற பெங்களூர்–குஜராத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது குஜராத் லயன்ஸ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ராகுலை வற்சனின் இடத்துக்கு மாற்றி ஆரம்ப வீரராக தன்னுடன் வற்சனைக் கொண்டு சென்றார் கோக்லி. இரண்டாவது பந்துப்பரிமாற்றத்திலேயே ஆட்டமிழந்து தடுமாற்றம் காட்டினார் வற்சன். வழக்கம்போல இணைந்து மிரட்டியது கோக்லி, வில்லியர்ஸ் இணை. 34 பந்துகளை எதிர்கொண்டு 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர். 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வில்லியர்ஸ். இதற்காக அவர் 16 பந்துகளை எடுத்துக் கொண்டார். லோகேஸ் ராகுல், கோக்லி இருவரும் இணைந்து குஜராத்தின் பந்துவீச்சை நொறுக்கித் தள்ளினர். கோக்லியின் அரைச்சதம் 40 பந்துகளிலும், லோகேஸ் ராகுலின் அரைச்சதம் 34 பந்துகளிலும் பதிவானது. இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டாயிற்று இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டபாடில்லை. பெங்களூரின் சார்பாக ஓட்டங்கள் குவிந்து கொண்டிருந்தன என்பதை விட கோக்லி சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தமை பெரிதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. பரபரப்புக்களின் மத்தியில் பெங்களூரின் இறுதிப்பந்தில் தனது சதத்தை நிறைவுசெய்து ஐ.பி.எல். தொடரில் தனது முதலாவது சதத்தைப் பதிவுசெய்தார் கோக்லி. முடிவில் பெங்களூர் 180-2. கோக்லி 100 ஓட்டங்களுடனும் லோகேஸ் ராகுல் 51 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் குஜராத்தின் சார்பாக குல்கர்னி, ரம்பி இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கியது குஜராத். ஆரம்ப வீரர்களாக மக்கலத்துடன் இணைந்தார் டுவைன் சிமித். ஆரம்பமே இலக்கை எட்டக்கூடிய நம்பிக்கையை வழங்கியது. 47 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டிருந்த நிலையில் 32 ஓட்டங்களுடன் சிமித்தின் இன்னிங்ஸ் நிறைவு கண்டது. மக்கலம், ரெய்னா மேலும் சில பந்துப்பரிமாற்றங்கள் தாக்குப்பிடிக்க பெங்களூரின் பந்துவீச்சு என்பது எடுபடாமலே போய்விட்டது. 24 பந்துகளில் 42 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் மக்கலம். மக்கலத்தின் இழப்பைச் சீர்செய்தார் டினேஸ் கார்திக். ரெய்னா, ஜடேயா இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தாலும் அவர் தொடர்ந்தும் களத்தில் நிலைத்து நின்று அரைச்சதத்தையும் பதிவுசெய்து ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார். தொடர்ந்து அதிகப்படியான இணைப்பாட்டங்கள் பகிரப்பட அனுமதிக்கப்பட்டமையே பெங்களூரின் தோல்விக்கான பிரதான காரணம் என்று சொல்லப்படுகிறது.

பந்துவீச்சில் பெங்களூரின் சார்பாக சாகல், ரிச்சாட்சன், வற்சன், சம்சி நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

(ம)

## 300 டெஸ்ட் இலக்குகள் இது கேரத்தின் விருப்பம்

டெஸ்ட் ஆட்டங்களில் 300 இலக்குகளைக் கைப்பற்ற வேண்டும் என்பதே தனது இலக்கு என்று நடசத்திர சுழற்பந்து வீச்சாளர் கேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான கேரத் சில தினங்களுக்கு முன்பு ஒருநாள், ரி-20 ஆட்டங்களில் இருந்து விடைபெற்றார். இருப்பினும் டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ந்து விளையாடவுள்ளார். இந்த நிலையில் டெஸ்ட் ஆட்டங்களில் 300 இலக்குகளை வீழ்த்திவிட்டால் தனக்கு அது பெரிய சாதனையாக அமையும் என்று தெரிவித்த கேரத், அதன் பிறகு தனக்கென பெரிய இலக்கை நிர்ணயித்துக் கொள்ளமாட்டேன் என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

கேரத்தின் 300 இலக்குகள் என்ற மைல் கல் வெகு தூரத்தில் இல்லை. தற்போது 67 டெஸ்டில் விளையாடி 297 இலக்குகளைக் கைப்பற்றியுள்ள அவருக்கு இன்னும் 3 இலக்குகளே தேவைப்படுகின்றன. இந்த இலக்கை அடையும் பட்சத்தில், 300 இலக்குகளை வீழ்த்திய 3 ஆவது இலங்கை வீரர் என்ற பெருமையைப் பெறுவார்.

இந்தச் சாதனை ஒரு புறமிருக்க, 300 இலக்குகளை வீழ்த்திய பின்பு வேறொரு அடைவு மட்டத்தை நிர்ணயிக்க மாட்டேன் என்று கேரத் வெளிப்படுத்தியிருப்பது, டெஸ்டிலும் தான் விடைபெறும் நேரம் தூரமில்லை என்பதை அவர் சொல்லாமல் சொல்லியிருப்பதாகக் கருதப்படுகிறது. (ம)



## அணி இனங்காணப்பட்டாயிற்று வெற்றி வெகுதூரத்தில் இல்லை

**- டோனி**



நடப்பு ஐ.பி.எல். தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அணிகளில் ஒன்றான ரைசிங் புனே சுப்பர் ஜெயின்ட்ஸ் அணி தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வரும் நிலையில்அந்த அணியில் விளையாடும் பதினொரு வீரர்கள் விவரம் இனங்காணப்பட்டுள்ளதாகவும் புனேயின் வெற் றிப் பயணம் அதிகதூரத்தில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார் அணியின் தலைவரான டோனி.

பெங்களூருக்கு எதிரான தோல்விக்குப் பின்னர் கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் - எமது அணியின் தோல்விகளுக்கு பிரதானமான ஓர் காரணம் விளையாடும் பதினொருவர் அணி சரியாக அமையாதமையே. உதாரணமாகச் சொல்ல வேண்டுமாயின் பிளாஸிஸ் மூன்றாம் இடத்தில் அல்லது நான்காவது இடத்தில் களமிறங்க வேண்டியவர். ரகானேயுடன் களமிறங்க சிறந்த ஓர் ஆரம்பவீரர் எமக்கு கிடைக்கவில்லை. இதனால் வேறு வழியில்லாமல் பிளா சிஸ் ஆரம்ப வீரராக உள்ளார். அதே நேரம் முன்வரிசையில் விளையாட ஓர் இடது கை துடுப்பாட்ட வீரர் இல்லை. முதலாவது, மூன்றாவது பந்துப்பரிமாற் றங்களை வீச சிறந்த பந்துவீச்சாளர் இல்லை. இவை எமது அணியின் பிரதான குறைபாடு. பெரேராவை வைத்து சில பிரதான திட்டங்களை செய்துள்ளேன். அதேபோல் மத்திய வரிசையில் அதிரடி காட்ட நானும், சிமித்தும், பாத்தியாவும் திட்டமிட்டுள்ளோம். ஒருவாறாக இந்தப் பிரச்சினைகள் தற்பொழுது முடிவுக்கு வந்துள்ளன. அடுத்து வரும் ஆட்டங்களில் எமது வெற்றிப்பயணம் தொடரும் என்ற நம்பிக்கை உள்ளது- என்றார்.

டோனியின் திட்டங்கள் ஓரளவு கைகூடி வந்துகொண்டிருந்த நிலையில், காயம் காரணமாக தொடரில் இருந்து பாதியில் விலகியுள்ளார் பீற்றர்சன். பீற்றர்சனின் இடத்துக்கு இனி எவரோ? (ம)

## பந்துவீச்சில் தாமதம்; கோக்லிக்கு அபராதம்

பந்துவீச்சில் தாமதம் செய்தமைக்காக பெங்களூர் அணித்தலைவர் என்ற வகையில் கோக்லிக்கு அபராதம் விதிக் கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற புனே அணிக்கு எதிரான ஆட்டத்தில் பெங்களூர் அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில் பெங்களூர் அணி பந்துவீசும் போது நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட கூடுதல் நேரத்தை எடுத்துக் கொண்டது. இதனால் அந்த அணியின் தலைவர் விராட் கோக்லிக்கு 12 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 25
குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஐக்கிய அணி சம்பியனானது.
7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றது. நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில், இரண்டுஅணியினரும்ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றமையால் சமநிலைத் தகர்ப்பு உதைகளில் கிண்ணம் தீர்மானமாகும் நிலை ஏற்பட்டது. இதில் அரியாலை ஐக்கிய அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-23)

# ஜிஜோனை வீழ்த்தி மீண்டும் முதலிடத்தில் பார்சிலோனா

நடைபெற்றுவரும் லா லிகா தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றுள்ளது.
பார்சிலோனா, ஸ்போட்டிங் டீ ஜிஜோன் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 6:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. அந்த அணியின் சார்பாக லூயிஸ் சுவாரஸ் நான்கு கோல்களைப் பதிவுசெய்தார். மெஸ்ஸி, நெய்மர் இருவரும் தலா ஒரு கோலைப் பதிவு செய்தனர். இந்த வெற்றியுடன் 82 புள்ளிகளைப் பெற்றுள்ள பார்சிலோனா அணி, லா லிகா தரவரிசையில் மீண்டும் முதலிடத்துக்குத் திரும்பியுள்ளது. (ம)



# தரப்படுத்தலில் முதலிடத்தில் கொல்கத்தா; போராடி வீழ்ந்தது புனே சுப்பர் ஜெயின்ட்ஸ்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற புனே – கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரு இலக்குகளால் வெற்றிபெற்றது கொல்கத்தா.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. புனேயில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. முதலாவது மாற்றம், பீற்றர்சன் விலகியமையால் அவருக்குப் பதிலாக சவுரப் திவாரி அணியில் இணைக்கப்பட்டிருந்தார். மற்றொன்று இசாந் சர்மா நீக்கப்பட்டு சகலதுறை வீரரான அல்பி மோர்கல் இணைக்கப்பட்டிருந்தார். ஆரம்ப வீரர்களாக ரகானே மற்றும் பிளாசிஸ். பிளாஸிஸை போல்ட் செய்தார் சகிப் அல் ஹசன். இந்த இலக்குச் சரிவுடன் ஆடுகளம் பந்துவீச்சுக்குச் சாதகமானது என்பது பார்வையாளர்களுக்கே புரிந்திருக்கும். ரகானே, ஸ்ரீவ் சிமித் இணைய இலக்குச் சரிவென்பது நீண்ட நேரம் இருக்கவில்லை. ஆனால் பவுண்டரிகளுக்கும் பஞ்சமாகவே இருந்தன. 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஸ்ரீவ் சிமித். இந்த ஓட்டத்தை அவர் 18 தொடக்கம் 20 பந்துகளுக்குள் பெற்றிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். பெரேராவால் முடிந்தது 12 ஓட்டங்கள் மட்டுமே. ஆனால் அதற்குள்ளும் ஒரு சிக்சர் இருக்கத் தவறவில்லை. 67 ஓட்டங்களுடன் ரகானேயை பவிலியனுக்குத் திருப்பினார் சுனில் நரைன். களத்தில் அல்பி மோர்கல் மற்றும் டோனி. நரைனின் பந்தில் அடுத்தடுத்து இரு சிக்சர்களை விளாசி ஆட்டமிழந்தார் அல்பி மோர்கல். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தை முழுவதுமாக எதிர்கொண்டு 17 ஓட்டங்களைக் குவித்தார் டோனி. முடிவில் புனே 160-5.
பந்துவீச்சில் கொல்கத்தா சார்பாக சகிப் அல் கசன், நரைன், சதீஸ், உமேஸ் யாதேவ் நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.
முதல் பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்திலேயே உத்தப்பாவை வெளியேற்றி அரங்கத்தை அதிர வைத்தார் அல்பி மோர்கல். ஆனால் அதே பந்துப்பரிமாற்றத்தில் மூன்று பவுண்டரிகளையும் வழங்கவே செய்தார் மோர்கல். புனேயில் ஆட்டம் நடைபெற்றதால் புனேயின் கொடியே பெரும்பாலான இடங்களில் அசைந்தாடியது. இந்தத் ஆரவாரங்கள் எல்லாம் பவர் பிளேய் முடியும் வரை அடங்கிப் போயிருந்தன. கம்பீர் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் பவர் பிளேய் முடிவில் (முதல் ஆறு பந்துப்பரிமாற்றங்கள்) 59 ஓட்டங்களைக் குவித்திருந்தது கொல்கத்தா. பவர் பிளேய் முடிவடைந்து களத்தடுப்பு பரவலாக்கப்பட்டதும் கொல்கத்தாவின் சராசரி படுத்தேவிட்டது. சகிப் அல் கசன், யூசொப் பதான் இருவரையும் வெளியேற்றினார் பாத்தியா. 60 ஓட்டங்களுடன் சூரியக்குமார் யாதேவை வெளியேற்றினார் எம்.அஸ்வின். இறுதி நான்கு பந்துப்பரிமாற்றத்தில் 42 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலைமை. அன்கிட் சர்மாவின் பந்துவீச்சில் இரு சிக்சர்கள் அடங்கலாக 17 ஓட்டங்களைக் குவித்தார் ரசல். ரசலை வெளியேற்றி நம்பிக்கையான பந்துப்பரிமாற்றத்தை கொடுத்தார் பெரேரா. இரு பந்துப்பரிமாற்றங்களில் 18 ஓட்டங்கள் தேவை. 3 பந்துகள் மீதமிருக்க இலக்கை எட்டியது கொல்கத்தா.
பந்துவீச்சில் புனேயின் சார்பாக மோர்கல், பெரேரா, பாத்தியா மூவரும் தலா இரு இலக்குகளையும், எம்.அஸ்வின் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

# ரபேல் நடால் – நிசிகோரி இறுதியில் மோதத் தகுதி

பார்சிலோனா ரென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்தில் விளையாட ரபேல் நடால், நிசிகோரி இருவரும் தகுதி பெற்றுள்ளனர்.
தனது அரையிறுதி ஆட்டத்தில் ஜேர்மனின் பிலிப் கோல்செய்பெரை எதிர்கொண்ட நடால், 6:3, 6:3 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று, இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றார். மறுமுனையில் நிசிகோரி பிரான்ஸைச் சேர்ந்த பெனொய்ட் பெய்ரேவைத் தோற்கடித்து இறுதிக்கு நுழைந்தார். (ம)



# போராடி வென்றது ரியல் மட்ரிட் அணி

லா லிகா தொடரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி வலெக்கனோ அணியைப் போராடி வீழ்த்தியது.
வலெக்கனோவை விட ரியல் மட்ரிட் பலமான அணியாக இருந்த போதிலும், ரியல் மட்ரிட்டின் நட்சத்திர வீரரான ரொனால்டோ காயம் காரணமாக குறித்த ஆட்டத்தில் இருந்து விலகுவதாக ஏற்கனவே அறிவித்திருந்தமையால், வலெக்கனோ கடும் சவால் வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே அந்த அணி மிகப் பெரும் சவாலை வழங்கியது. இருப்பினும் முடிவில் ரியல் மட்ரிட் 3:2 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றிபெற்றது. ரியல் மட்ரிட் சார்பாக கரீத் பலே இரண்டு கோல்களையும் லூகாஸ் வஸ்கூஸ் ஒரு கோலையும் பெற்றிருந்தார்.
இந்த வெற்றியுடன் தரவரிசையில் 81 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்திலுள்ள ரியல் மட்ரிட், முதலாமிடத்திலுள்ள பார்சிலோனா, இரண்டாமிடத்திலுள்ள அத்லெட்டிகோ மட்ரிட்டை விட ஒரு புள்ளியே குறைவாகப் பெற்றுள்ளது. (ம)



# தலையைத் தாக்கியது பந்து வைத்தியசாலையில் சில்வா

பயிற்சியின் போது தலையில் காயம் ஏற்பட்டதையடுத்துகொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார் கௌசால் சில்வா.
இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையில் 3 டெஸ்ட், 5 ஒருநாள், ஓர் ரி-20 ஆட்டங்களைக்கொண்ட தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியின் பிரதான வீரர்களில் ஒருவராகச் சில்வா கருதப்படுகிறார்.




இந்த நிலையில் குறித்த தொடருக்காக கண்டி பல்லேகல மைதானத்தில் நேற்றுப் பயிற்சியில் ஈடுபடுகையில் சந்திமல் அடித்தாடிய பந்து சில்வாவின் தலையைப் பதம் பார்த்தது. இதையடுத்து அவர் ஹெலிகொப் டர் மூலம் கொழும்பு தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தாக்கம் தொடர்பாக இன்னமும் தகவல்கள் வெளியாகவில்லை.
ஆனால் அவர் இங்கிலாந்துத் தொடரைத் தவறவிட்டால் அது இலங்கைக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.